# ராகுல்ஜியின்



# பொதுஉடைமைதான் என்ன?

தமிழ்ப் புத்தகாலயம்

ராகுல சாங்கிருத்தியாயனின்

# பொது உடைமைதான் என்ன?

தமிழாக்கியவர்

**கண. முத்தையா**


## தமிழ்ப் புத்தகாலயம்

# 15, மாசிலாமணி தெரு தி. நகர் பாண்டிபஜார்
சென்னை - 600 017 ☎ 4345904

மின் அஞ்சல்: tambook @ md4. vsnl. net. in
tamilputhakalayam @ yahoo. com
tamilputhakalayam @ intamm. com

பொது உடைமைதான் என்ன?
முதற் பதிப்பு : டிசம்பர் 1946
பதினாறாம் பதிப்பு : டிசம்பர் 1995
பதினேழாம் பதிப்பு : ஜுன் 1999
உரிமை பதிவு : தமிழ்ப் புத்தகாலயம்

விலை ரூ. **18-00**

**PODU UDAIMAITHAN ENNA?**
**by RAGULA SANGRITHIYAYAN**
**tr. into Tamil by**
**KANA. MUTHIAH**

**© TAMILPUTHAKALAYAM**

Seventeenth edition June 1999
96 Pages

**TAMILPUTHAKALAYAM**
# 15, MASILAMANI STREET
PONDY BAZAR T.NAGAR
CHENNAI-600017 ☎ 4345904
E mail: tambook @ md4. vsnl. net. in
tamilputhakalayam@ yahoo. com
tamilputhakalayam @ intamm. com

Price Rs. **18-00**

Laser Typeset : M/s Skill Computers, Madras - 600 018
Printed at **M/s. Mano Printers**
**Triplicane, Chennai - 600 005 Ph : 8583400**

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

# முன்னுரை

"சங்கராச்சாரியாருடைய உழைப்பும், தயானந்த சரஸ்வதியின் தீவிரமும், புத்தபகவானின் சாந்தமும், ஒன்று சேர்ந்த ஒரு உருவமே பேராசிரியர் ராகுல சாங்கிருத்தியாயன்" என்று ஒரு பிரபல ஆசிரியர் கூறுகிறார். ராகுல்ஜியின் இயற்பெயர் ராமோதர்தாஸ். அவர் ஆஜம்கட் ஜில்லாவின் கனைலா என்ற கிராமத்தைச் சேர்ந்தவர். தமது இளம் வயதிலேயே உலக சுகத்தைத் துறந்து சன்யாசம் ஏற்ற அவர், புத்த மத ஆராய்ச்சியிலும் புத்தமத பிரசாரத்திலும் ஈடுபட்டார். புத்தமத நூல்களிலும், மத ஆராயச்சியிலும் மூழ்கித் திபெத்திற்கும் இமயமலைக்கும் ஓடிய ராகுல்ஜி, சரித்திர ஆராய்ச்சியாளராகவும் அரசியல்வாதியாயும் மாறியது நமது அதிர்ஷ்டமே! அவரது ஓய்வு ஒழிவற்ற சரித்திர ஆராய்ச்சியும், இணையற்ற தர்க்க அறிவும், சுதந்திர சிந்தனா சக்தியும், அவரை ஒரு சிறந்த பொது உடைமைக்காரராக மாற்றி விட்டது. அவருடைய நூல்களில் பல, உலகத்தின் பல பாஷைகளில் மொழி பெயர்க்கப் பெற்றிருக்கின்றன. மனித சமுதாயத்தின் வளர்ச்சியைக் கதைகளின் உருவில் கூறும் அவருடைய "வால்காவிலிருந்து கங்கைவரை" என்ற நூலைப் போன்ற ஒரு சிறந்த நூல், இதுவரை உலகத்தின் எந்தப் பாஷையிலும் தோன்றவில்லை என்று போற்றப்படுகிறது.

பொதுஉடைமை அறிவின் நுழைவாயில் போன்று

விளங்கும் இச்சிறுநூல் 1935-ஆம் வருடம் வெளியிடப்பெற்றது. ஆகவே இதில் குறிப்பிடப்படும் மகாயுத்தம் 1914-18ல் நடந்த முதலாவது ஐரோப்பிய மகாயுத்தத்தையே குறிக்கும். இந்தியாவையே குறிப்பாக வைத்து ஆசிரியர் இந்நூலை எழுதியிருக்கிறார். இது அளவில் சிறியதாயினும், கருத்தாழத்திலும் தெளிவிலும் முக்கியம் பெற்று விளங்குகிறது.

சுருக்கமாக, ஆனால் மிகத் தெளிவாகப் புரியக் கூடிய பாஷையில் பொது உடைமைக் கொள்கையை விளக்கிக் கூறும் இந்நூலைத் தமிழில் கொண்டு வரவேண்டுமென்ற எனது ஆசையே இதைத் தமிழில் ஆக்கியதற்குக் காரணம்.

நடையில் தெளிவின்மையோ அல்லது வேறு குற்றங்குறைகளோ இருப்பின் அதற்கு நானே முழுப் பொறுப்பாளி.

சென்னை

16-12-46 கண. முத்தையா

# முதலாளிக் கொள்கையின் தோற்றம்

ஒரு மனிதன் வேறு எந்தத் தகுதியும் அற்றவனாயிருந்தும், கேவலம் தனது முதலின் பலத்தினால் பொருள்களை உற்பத்தி செய்யும் விலையுயர்ந்த சாதனங்களைப் பெற்று, அதன் மூலம் ஏராளமான மக்களுடைய உழைப்பின் பெரும் பகுதியைத் தனது சொந்த லாபத்திற்காகவும், தனக்கு உதவி செய்யும் முதலைப் பெருக்குவதற்காகவும் உபயோகித்துப் பணம் சம்பாதிப்பதற்குச் சிறந்த வழி முதலாளிக் கொள்கை.

இந்த விதமான முதலாளிக் கொள்கை, மனித சமுதாயம் வேட்டையாடி வாழ்க்கை நடத்திய அந்தக் காலத்தில் ஏற்பட்டிருக்க முடியாது. மனிதன் வேட்டையாடும் நிலையிலிருந்து தானியம் விளைவித்தல், விவசாயம் செய்தல் என்ற நிலைமைக்கு மாறிய பொழுது, அவனிடம் அசையும் பொருள்களும் அசையாப் பொருள்களும் வந்து சேரத் தொடங்கின. இந்தச் சொத்துக்களை மற்றவர்கள் பிடுங்கிக் கொள்வார்கள் என்ற பயமும் அதனுடன் வந்து சேர்ந்தது; இந்தப் பயத்தினால், பிடுங்கிக் கொள்ளக் கூடியவர்களை எதிர்ப்பதற்காக ஒரு நல்ல தலைவனின் தலைமையின் கீழ்ப் பாதுகாப்பு ஏற்பாடு செய்ய வேண்டி நேர்ந்தது. அந்தத் தலைவன் மிகுந்த சக்தி சாலியாகவும், பெருமையை விரும்புகிறவனாகவும் இருந்த போது அரசனாக ஆனான். அரச பரம்பரை ஏற்பட்டு, அரசு (இராஜ்யம்) அதிகமாகப் பரவிய காலத்தில், அரசன் தானே சேனையை நடத்த

விரும்பாததாலோ அல்லது தனது சில அதிகாரங்களை மற்றத் தகுதி வாய்ந்த மனிதர்களிடம் ஒப்புவிக்க விரும்பியதாலோ சேனாதிபதிகள் தோற்றுவிக்கப்பட்டார்கள். அரசனும் சேனாதி பதிகளும், மற்ற மனிதர்களின் உழைப்பின் ஒரு பகுதியை எவ்விதக் கூலியும் கொடுக்காமலேயே தங்கள் சொந்த லாபத்திற்காக உபயோகித்துக் கொண்டார்களென்பது உண்மை தான். ஆனால் அது முதலின் பலத்தினாலல்ல; தனது அரச சக்தியின் பலத்தினால். அப்படி எவ்விதக் கூலியும் கொடுக் காமலேயே பெற்றுக்கொள்ளப்பட்ட உழைப்பின் பாகம், வருங்காலத்திலும் உழைப்பை விலைக்கு வாங்குவதற்கு முதலாகச் சேமித்து வைக்கப்படவுமில்லை. அந்த அரச ஆட்சிக் காலத்தில், வியாபாரம் செய்கிற வியாபாரிகளும் வட்டிக்குப் பணம் கொடுக்கும் பணக்காரர்களும் இருந்தார்கள். அவர்களும், பிறருடைய உழைப்பின் ஒரு பகுதியை எவ்விதக் கூலியும் கொடுக்காமலேயே தங்கள் சொந்த லாபத்திற்காக உபயோகித்துக் கொண்டார்கள். ஆயினும் அந்த வியாபாரியும் வட்டித் தொழில் செய்கிறவரும் முதலாளி என்று சொல்லப் படுவதற்கில்லை. ஏனெனில், அவர்கள் வாழ்க்கைக்கு அவசியமான பொருள்களை, உற்பத்தி செய்யும் சாதனங்களைத் தங்களுடைய கையில் வைத்திருக்கவில்லை. அக்காலத்தில் சேணியன் தனது தறிக்கும், குயவன் தனது மண் சக்கரத்திற்கும், கொல்லன் தனது சம்மட்டி பட்டரைக்கும் சொந்தக்காரர்களாய்த் தானிருந்தார்கள். சில இடத்தில் இந்தத் தொழில் கருவிகள் சேமிக்கப்பட்டுப் பொருள் உற்பத்தி செய்யப்பட்டது. ஆனால் அப்படிச் செய்யப்பட்டது அரசர்கள் சேனாதிபதிகளின் செல்வாக்கை உபயோகித்துதான். தொழில் கருவிகளின் விலை அதிகமாயில்லாததால் தொழி லாளர்கள் அதிகக் கிராக்கி செய்து கொண்ட காலத்தில், மற்றவர்கள் கருவிகளைப் பெற்றுத் தங்களுக்குத் தேவை யானவைகளைத் தாங்களே தயாரித்துக் கொள்ள முடிந்தது. ஆகையால் பணக்காரர்கள் இவ்விதத் தொழிற்சாலைகளை அமைப்பதில் விருப்பமுடையவர்களாயில்லை.

உலகத்தில் நீராவி இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்ட காலத்திலிருந்துதான், உண்மையில் முதலாளிக் கொள்கை ஆரம்பமாகிறது. இயந்திரங்கள் கண்டு பிடிக்கப்பட்டதிலிருந்து பொருள்களின் உற்பத்தி வேகம் மிக அதிகமாய் விட்டது. முதலில் ஒரு சேணியன் தனது கைத்தறியின் மூலமாக நாள் முழுவதும் கஷ்டத்தோடு 7, 8 கஜம் துணி நெய்ய முடியுமானால், இப்பொழுது நீராவியால் இயங்கும் தறியின் உதவியால், ஒரு திறமையற்ற மனிதன் ஒரு நாளில் 50, 60 கெஜம் சுலபமாக நெய்துவிடுகிறான். இயந்திரத்தினால் நெய்யப்பட்ட இந்தத் துணி நிச்சயமாக மலிவாகத்தான் இருக்கும். ஏனெனில் பொருள்களின் விலைமதிப்பு அதற்காகச் செலவழிக்கப்பட்டுள்ள மனிதர்களின் உழைப்பைப் பொறுத்தே ஏற்படுகிறது. பொருள்கள் மலிவாயிருப்பதால் அவைகள் வேகமாக விற்பனையாவதும் சுலபமாயிருக்கிறது; குறைந்த காலத்தில் அதிகப் பொருள் செலவாவதால், பொருள்களை உற்பத்தி செய்பவர் குறைந்த லாபம் வைத்தும்கூட, எல்லாம் மொத்தத்தில் சேர்ந்து மிக அதிகமான வருமானமாகி விடுகிறது. அதிகமான வருமானம் கிடைப்பதாயிருந்தும் இயந்திரங்களின் விலை மிக அதிகமாயிருப்பதால் தொழிலாளர்கள் அதைத் தாங்களே வாங்க முடியாதவர்களாய் இருக்கிறார்கள். இவ்விதமாக நீராவிச் சக்தியின் மூலம் இயங்கும் இயந்திரங்களின் தோற்றத்தோடு கூடவே முதலாளிக் கொள்கையும் தோன்றிற்று.

நீராவியின் இயக்கும் சக்தியைப் பற்றிய இயற்கையான அறிவு 2000 வருடங்களுக்கு முன்னாலேயே ஆப்பிரிக்க மக்களுக்கு இருந்திருக்கலாம். ஆனால், உற்பத்தி வேலையில் அதை முதன்முதலாக ஐரோப்பியர்களே உபயோகித்தார்கள். 18ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் (1765 கி.பி) இங்கிலாந்தின் விஞ்ஞானியான ஜேம்ஸ்வாட்டன் முதன் முதலாக நீராவி இயந்திரத்தைக் கண்டுபிடித்தார். முதலில் மக்கள் இதன் உபயோகத்தை உணர முடியவில்லை. ஆனால், அது அதிக

காலம் மறைந்திருக்கவில்லை. குதிரைகள் அல்லது மாடுகளை உபயோகித்து, மனிதன் செக்கு, கலப்பை, வண்டி இவைகளை நடத்துவதுபோல், இந்த நெருப்பு - நீர் இவற்றின் சேர்க்கையால் தோன்றும் நீராவியை உபயோகித்து அநேக காரியங்கள் செய்ய முடியுமென்பதை மக்கள் உணர்ந்துகொண்டார்கள். கி.பி.1600ல் கிழக்கிந்தியக் கம்பெனி அமைக்கப்பட்டபின்பு, பலசரக்கு முதலியவையோடு இந்தியாவின் அழகிய துணிகளுக்கும் இங்கிலாந்தில் அதிகக் கிராக்கியிருந்தது. அதில் போதுமான அளவு லாபமுமிருந்தது. அப்போது இங்கிலாந்து முதலாளிகளின் மூளையை, 'நீராவியால் இயக்கப்படும் ராட்டினமும், தறியும் கண்டுபிடிக்கப்பட்டால் நாம் மிகுந்த மலிவான விலையில் துணிகள் தயாரிக்க முடியும்' என்ற எண்ணம் வாட்டிக்கொண்டே இருந்தது. முடிவில் அது வெற்றி பெற்றது; கி.பி.1785ல் நீராவியால் இயங்கும் ராட்டை தறியின் இயந்திரத் தொழிற் சாலை முதலாவதாக இங்கிலாந்தில் அமைக்கப்பட்டது. அதன் விளைவாகக் குறைந்த விலையில் துணிகள் உற்பத்தியாகத் துவங்கின. அந்த இயந்திரத்தில் அனேக குறைகளிருந்தும், ஆரம்ப காலத்தில் கைத்தறியின் உதவியால் நான்கு மனிதர்கள் தயாரிக்கக்கூடிய துணியை இந்த இயந்திரத் தறியின் உதவியால் ஒரு மனிதன் தயாரிக்க முடிந்தது. இந்த இயந்திரம் கண்டு பிடிக்கப்பட்டதால், நான்கு மனிதர்களுக்குப் பதிலாக ஒரு மனிதனுக்குத்தான் வேலை கிடைக்கிறது என்பதை உணர்ந்து கொள்ள தொழிலாளர்களுக்கு அதிக நாள் பிடிக்கவில்லை. இயந்திரங்களின் மூலமாக அதிக வருமானம் கிடைப்பதைக் கண்டு, அநேக புதிய புதிய தொழிற்சாலைகள் திறக்கப்பட்டன. சில வருடங்களில் அநேக தொழிலாளர்கள் வேலையற்ற வர்களாய் விட்டார்கள்! இதனால் தொழிலாளர்கள் கொதிப் படைந்து ஒரு மில்லில் வேலை நிறுத்தம் செய்ததோடு அதன் இயந்திரங்களையும் உடைத்தெறிந்துவிட்டார்கள். இவ்விதம் நீராவியால் இயங்கும் மில்களுக்கு விரோதமாக, இங்கிலாந்தில் தொழிலாளர்கள் மத்தியில் வெறுப்பு உணர்ச்சி பரவிக்

கொண்டிருந்த காலத்தில், ஜார்ஜ் ஸ்டீவன்சன் ரயில் இன்ஜினைக் கண்டு பிடித்தார். கி.பி. 1825ல் அவர் ஸ்டாக்டனுக்கும், டார்லிங்டனுக்கும் மத்தியில் இருப்புப்பாதையின் மீது சில சிறிய பெட்டிகளை இழுத்துக் கொண்டு மணிக்கு 12 மைல் வேகத்தில் இந்த இன்ஜினை ஓடச் செய்தார். உற்பத்தி செய்யப்படும் பொருள்களை மிக வேகமாகவும், குறைந்த செலவிலும் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு அனுப்புவதற்கு இந்த இன்ஜின் மிகுந்த உதவி செய்யுமென்பதை முதலாளிகள் கண்டு கொண்டார்கள். இதற்குக் கொஞ்ச காலம் முன்பு கி.பி. 1802ல் பல்ட்டன் நீராவியால் ஓடும் கப்பலைக் கண்டுபிடித்தார். இந்தக் கப்பலில் மரத்திற்குப் பதிலாக இரும்பு அதிகமாக உபயோகிக்கப்பட்டிருந்ததால், நெருப்பைப் பற்றிய பயம் குறைவாயிருந்தது. இந்த நீராவிக் கப்பல் தொழிற் சாலைகளின் முன்னேற்றத்திற்கு அதிக உதவி செய்தது. இந்தத் தொழிற்சாலைகளில் தயாராகும் பொருள்களை உலகத்தின் தூரதூரங்களிலுள்ள சந்தைகளுக்கு நீராவிக் கப்பலின் உதவியால் அனுப்ப முடிந்ததால், தொழிலாளர்களின் பிரச்சினையும் ஒருவாறு தீர்த்து வைக்கப்பட்டது.

அக்காலத்தில் இங்கிலாந்துதான் தொழிற்சாலையின் முக்கிய நாடாயிருந்தது. அதனால், உலகத்தின் சந்தையில் அதற்குப் போட்டி இல்லை. இயந்திரத்தின் மூலமாகத் தயாரிக்கப்படும் இந்த மலிவான பொருள்களுக்கு, உலகச் சந்தையிலிருந்த பிரியத்தால் ஒவ்வொரு வருடமும் புதிய புதிய தொழிற் சாலைகள் திறக்கப்பட்டிருந்தன. அவைகளில் வேலை செய்வதற் காக அதிகமான தொழிலாளர்கள் சேர்க்கப்பட்டார்கள்.

இங்கிலாந்தில் முதலாளிக் கொள்கையின் ஆரம்பம் எப்படி ஏற்பட்டது, நீராவியால் இயங்கும் இரயில், கப்பல் இவைகள் அதை எப்படி வளர்த்தன என்பதை மேலே கூறினோம். அதுவரை பணக்காரனாவதற்குச் சர்க்கார் உத்தியோகம், வியாபாரம், வட்டித்தொழில், ஜமீன்தார் முறை இவைதான் வழியாயிருந்தன.

ஆனால், இந்தத் தொழிற்சாலையின் வருமானத்தின் முன்னால் இவைகளை வருமானம் என்றே சொல்வதற்கில்லை. இங்கிலாந்தின் அநேகர் தொழிற்சாலை முதலாளிகள் ஆக முயற்சித்தார்கள். ஐரோப்பாவில் மற்ற நாடுகளும் இங்கிலாந்தைப் பின்பற்றத் தொடங்கின. மேற்கிலும் கிழக்கிலும் அக்காலத்தில் பிரான்ஸ் இங்கிலாந்திற்குப் போட்டியாயிருந்தது. அது இதைப் பார்த்துக் கொண்டு சும்மாயிருக்குமா? அதுவும் தொழிற்சாலைகளை அமைக்க ஆரம்பித்தது. இதன் பின் ஜெர்மனி, ஹாலந்து, ஆஸ்ட்ரியா முதலிய ஐரோப்பிய நாடுகள், பணம் சம்பாதிப்பதற்குச் சுலபமானதும் வேகமானதுமான இந்தச் சாதனத்தைத் தமதாக்கிக்கொள்ள முயற்சித்தன. 19ம் நூற்றாண்டில் முற்பாகம் முழுவதும் தொழிற்சாலைகளின் தோற்றம் அதாவது முதலாளிக் கொள்கையின் வளர்ச்சி, ஐரோப்பாவில் தான் வளர்ந்து கொண்டிருந்தது. இவ்விதம் தொழிற்சாலைகள் அதிகப் பட்டதால், இரண்டு விளைவுகள் ஏற்பட்டன. ஒன்று, இவ்வளவு அதிகமான பொருள்களுக்குப் போதுமான சந்தை இல்லாமையால் ஐரோப்பிய நாடுகளுக்குள் போட்டி வலுத்தது. மற்றொன்று சந்தையின் குறைவாலும், நாளுக்கு நாள் ஏற்படும் இயந்திரத்தின் வளர்ச்சியாலும், அதிகமான தொழிலாளர்கள் வேலையில்லாதவர்களானார்கள்.

19ம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை, பாரத நாடு அடிமைப்பட்டுப் போனபின்பு, தனது கர்வபோதையில் ஆழ்ந்திருந்தது. அது தனது வீட்டிற்கு வந்த பொருள்கள் மூலமும், ஐரோப்பிய மனிதர்களிடமிருந்தும் இயந்திர காலத்தைப் பற்றிய செய்திகளை அறிந்திருக்கத்தான் வேண்டும். ஆனால் பாரத நாட்டு வியாபாரிகளின் கவனம் தொழிற்சாலைகளின் பக்கம் செல்லவில்லை. ஒருவேளை அவர்களுக்கு இயந்திர அறிவு வராதிருந்திருக்கலாம். தொழில் வன்மை, முன்னேற்ற எண்ணம், ஐரோப்பிய மக்களுடன் தொடர்பு இவைகளில் இந்தியர்களுள் முதன்மை வகிக்கும் பார்சிகளே, முதலாவதாக இந்தியாவில் மில்களின் லாபத்தை உணர்ந்தார்கள். காவாஜி மான்பாய்டாவர்

கி.பி.1865ல் பம்பாயில் முதலாவது துணி மில்லை ஆரம்பித்தார். * அதைத் தொடர்ந்து ஆமதாபாத்தின் இந்து வியாபாரிகள் தங்கள் மில்களை அமைத்து விட்டார்கள்.

மேலே கூறியபடி, 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்தியாவில் மில்களின் அமைப்பும், முதலாளிக் கொள்கையின் உற்பத்தியும் ஆரம்பமாகி விட்டன. ஆனால் 19ம் நூற்றாண்டின் இறுதிவரை, இதன் போக்கு மிக மெதுவாகவே இருந்தது. காரணம்:-(1) நல்ல ஒற்றுமையோடு, ஒரு நூற்றாண்டின் அனுபவம் பெற்ற வெளிநாட்டுத் தொழிற்சாலையின் பொருள்களுடன், சந்தையில் போட்டி போட முடியாமை; (2) இயந்திரங்களைப் பற்றிய பயிற்சி மிகக் குறைவாயிருந்தமை; (3) பாங்க், இன்சூரன்ஸ் முதலிய தற்கால வியாபார சாதனங்களின் உதவி பெற முடியாமை; (4) இந்தியாவில் மிகுந்த செல்வாக்குப் படைத்த அன்னியநாட்டு வியாபாரிகள் இந்திய முதலாளிகள் தங்கள் நாட்டோடு போட்டி போடுவதை விரும்பாமை ஆகியவைதான்.

20ம் நூற்றாண்டின் ஆரம்ப 15 வருடங்களில், கல்வி, விளம்பரப் பிரச்சாரம் இவைகள் தொழிற்சாலைகளைப் பரப்புவதற்கு அதிக உதவி செய்தன. ஆயினும் அதன் வழியில் ஏற்பட்ட எத்தனையோ தடைகளினால் அதன்வேகம் அதிகப்பட முடியவில்லை. உண்மையில் சென்ற மகா யுத்த காலத்தில்தான், இந்தியாவில் தொழிற்சாலைகள் வளர்ந்தன. அக்காலத்தில் ஐரோப்பிய மக்கள் போரில் ஈடுபட்டு விட்டதால், அந்நாட்டுப் பொருள்கள் இந்தியாவிற்கு வருவது தடைப்பட்டுவிட்டது; யுத்தத்தின் தேவையால் அரசாங்கமும் இந்தியத் தொழிற்சாலை

---

★ இந்தியாவில் முதலாவது துணி மில், வங்காளத்தின் ஹுக்ளி நதிக்கரையில் கௌடீயா என்ற இடத்தில் கி.பி. 1815ல் ஒரு ஐரோப்பியரால் திறக்கப்பட்டது. ஆனால் இந்தியர்களின் முதலாவது துணி மில்லை ஆரம்பித்தவர் திரு.டாவர்தான்.

களின் வளர்ச்சிக்குத் துணை செய்தது. ஒரு முறை சக்கரத்தைச் சுழற்றிவிட்டால் பின்பு அதைத் தடுப்பது சுலபமல்ல. 1914க்குப்பின், இந்தியர்கள் விதவிதமான பொருள்களைத் தயார் செய்வதற்குப் பெரும் முதல்களைப் போட்டு ஆயிரக்கணக்கான தொழிற்சாலைகளை இந்தியாவில் திறந்தார்கள். இப்போது, இந்தியாவில் முதலாளிக் கொள்கை குழந்தைப் பருவத்திலிருந்து வாலிபப் பருவத்தில் கால் எடுத்து வைத்திருக்கிறது. அதோடுகூட, முன்பு ஐரோப்பிய நாடுகளின் முன்னால் இருந்த பிரச்சனைகளும் இன்று இந்தியாவில் தோன்றிவிட்டன.

## பொதுஉடைமைக் கொள்கை ஏன் தோன்றிற்று?

உலகத்தில் எந்த ஒரு விஷயமும் காரணமின்றித் தோன்று வதில்லை. முதலாளிக் கொள்கை தோன்றியபோது அது தோன்றுவதற்குரிய காரணங்கள் ஏற்கனவே தோன்றியிருந்தன. அதாவது:- (1) கொஞ்ச உழைப்பு அல்லது உழைப்பில்லாம லேயே பணக்காரர்களாக வேண்டும் என்ற மனிதர்களின் ஆசை; (2) இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டதின் மூலமாக மனிதர்கள் குறைந்த உழைப்பில் அதிகமான பொருள்களைத் தயார்செய்து, மலிந்த விலையில் விற்று அதனால் லாபமடையச் சந்தர்ப்பம்; (3) இயந்திரங்களின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களோடு சந்தையில் போட்டிபோட முடியாமையால், சுதந்திரத் தொழிலாளர்களின் தொழில் அழிந்து போனது; (4) அதிகத் திறமைக்கு அவசியமில்லாமலேயே ஒரு சாதாரண மனிதன் இயந்திரங்களின் மூலமாக அழகிய பொருள்களை உற்பத்தி செய்ய முடிந்தது. இதே விதமாகப் பொது உடைமைக் கொள்கை வெளியான பொழுதும், அது உற்பத்தியாவதற்கு உரிய காரணங்கள் ஏற்கனவே தோன்றியிருந்தன. ஒரு பொருளைத்

தயாரிப்பதற்கு மனிதர்களின் உழைப்பு எவ்வளவு தேவையாயிருக்கிறதோ, அவ்வளவுக்கு அதன் விலைமதிப்பு ஏற்படுகிறது. இதை உணர்வது கஷ்டமில்லை. பூமியைத் தோண்டுவது மிகக் கடினமான வேலை. சுரங்கத்தில் பலநாள் தோண்டி உழைத்த பின்பு ஒருநாள் ஒரு வயிரக்கனி கிடைக்கிறது. அதாவது, இந்தப் பலநாள் உழைப்பும் அந்த ஒருநாள் பலனில் அடங்கி இருக்கிறது. ஆகையால், அந்த வயிரக்கனியின் விலை அதிகமாயிருக்கிறது. ஒரு மனிதனுடைய அரைநாள் உழைப்பில் 'கோஹினூர்' கிடைத்து விடுமானால் அதனுடைய விலை இவ்வளவு அதிகமாய் இருக்கமாட்டாது. கையினால் செய்யப்படும் பொருளில் மனிதர்களின் உழைப்பு அதிகமாயிருப்பதால் அதனுடைய விலையும் அதிகமாயிருக்கிறது. இயந்திரங்களால் செய்யப்படும் பொருள்களில் மனிதர்களின் உழைப்புக் குறைவாய் இருப்பதால் அதன் விலையும் மலிவாயிருக்கிறது. இயந்திரங்களின் முக்கியமான வேலை, பொருள்களை உற்பத்தி செய்வதில் மனிதர்களின் உழைப்பைக் குறைந்த அளவில் உபயோகிக்கச் செய்வதுதான். இதன் விளைவு ஒரு பொருளைக் கையால் தயாரிப்பதற்கு எத்தனை மனிதர்களின் உழைப்புத் தேவையாயிருக்கிறதோ, அதே பொருளை இயந்திரத்தால் செய்வதற்கு அதைவிடக் குறைந்த மனிதர் களுடைய உழைப்புப் போதுமானதாயிருக்கிறது. உதாரணமாக, ஒரு கைத்தறியை எடுத்துக் கொள்வோம்! அதன் மூலம் ஒரு மனிதன் ஒரு நாளில் 8 மணி நேரம் உழைத்துக் கஷ்டத்தோடு 10, 12 கெஜம் துணி நெய்யமுடியும். ஆனால் அவனைவிடக் குறைந்த திறமையுடைய ஒருவன், இயந்திரத்தின் உதவியால் அதே அளவு காலத்தில் 60, 70 கெஜம் துணி நெய்யமுடியும். இந்த நெய்யும் சக்தி இயந்திரத்தின் வளர்ச்சியைப் பொறுத்து அதிகப் பட்டுக் கொண்டே போகிறது. இவ்விதம் 8 மணி நேரத்தில் ஒரு மனிதன் 60, 70 ஜெகம் துணி நெய்வதின் அர்த்தம், 6 மனிதர் களுடைய வேலையை ஒரு மனிதன் செய்வது. அதாவது 5 மனிதர்களை வேலையற்றவர்களாகச் செய்வது.

இயந்திரங்கள், மனிதர்களின் வேலையைப் பறித்துக் கொள்ளுகின்றன. இதை அக்காலத்து இங்கிலாந்தின் கல்வி அறிவு இல்லாத தொழிலாளரும் அறிந்து கொள்ள நாளாக வில்லை. சில வருடங்களுக்குப் பின்பு அதாவது 18ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், 19ம் நூற்றாண்டின் ஆரம்பத் திலும் இங்கிலாந்தின் தொழிலாளர்கள் அநேக மில்களை உடைத்தெறிந்து நாசமாக்கி விட்டதைக் காண்கிறோம். ஆனால் ஆரம்ப காலத்தில், தொழிலாளர்களின் இந்த உணர்ச்சி அவ்வளவு பயங்கரமானதாயில்லை. இதன் காரணம் - அக்காலத் தில் இயந்திரங்களின் வளர்ச்சி ஒன்றிரண்டு நாடுகளில் மட்டுமிருந்ததும், அதன் பொருள்களுக்கு எல்லாச் சந்தைகளும் திறந்திருந்ததும்தான். அது மட்டுமல்ல, இந்தத் தொழிற் சாலைகளால் நிரப்ப முடியாத அளவு சந்தைகளில் தேவை இருந்து கொண்டேயிருந்தது. அந்த ஆரம்ப காலத்தில் லாபம் நிச்சயமாகவும், நஷ்டத்தைப் பற்றிய பயமில்லாமலும் இருந்ததால், புதிய புதிய தொழிற்சாலைகள் திறக்கப்பட்டன. ஒவ்வொரு புதிய தொழிற்சாலை திறக்கப்படுவதாலும் அதிகமான தொழிலாளர்களுக்கு வேலை கிடைத்துக் கொண் டிருந்தது. இதே காரணத்தினால் 19ம் நூற்றாண்டின் ஆரம்ப 25 வருடத்தில், அந்நாட்டுத் தொழிலாளர்களின் உணர்ச்சி முதலாளிகளுக்கு விரோதமாக அவ்வளவு கடுமையாயில்லை. ஆனால் ஒரு நாடு தொழிற்சாலைகள் மூலம் லாபம் சம்பாதிப்பதைப் பார்த்துக்கொண்டு ஐரோப்பாவின் மற்ற நாடுகள் அதிக நாள் எப்படிச் சும்மாயிருக்கும்? மற்ற நாடுகளிலும் தொழிற்சாலைகள் திறக்கப்பட்டதால் சந்தைக்கு ஏராளமான பொருள் வர ஆரம்பித்தன. இதன் காரணமாகப் புதிய தொழிற்சாலைகள் திறக்க முடியாததால், முதலில் அமைந்த தொழிற்சாலையில் வேலையற்றுப்போன தொழிலாளர்களுக்கு, பின்னால் அமைந்த தொழிற்சாலைகள் வேலை கொடுத்து வந்த பழக்கம் தடைப்பட்டுப் போய்விட்டது. இயந்திரங்களில் புதிய புதிய வளர்ச்சிகள் ஏற்பட்டுக் கொண்டு வந்தன. இந்த இயந்திர

வளர்ச்சியால் முன்னால் 100 பேர் வேலை செய்த தொழிற்சாலையில், இப்போது 50 பேர் வேலை செய்வது போதுமானதாய் ஆகிவிட்டது. இவ்விதம் விஞ்ஞானத்தின் வளர்ச்சியும், புதிய இயந்திரங்களின் தோற்றமும் வேலை யற்றவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதில் வெற்றி பெற்றுவிட்டன. முற்காலத்தில் சிலபொருள்களை உபயோகிப் பவர்கள் குறைவாய் இருந்தார்கள். இயந்திரத்தினாலேற்பட்ட விலை மலிவால் அதை உபயோகிப்பவர்களின் எண்ணிக்கை அதிகப்பட்டதென்னவோ உண்மைதான். ஆனாலும் வேலை யற்றவர்களின் எண்ணிக்கை அதிகப்பட்டுக் கொண்டு போன விகிதாச்சாரத்தில், இந்த வாங்குபவர்களின் எண்ணிக்கை அதிகப்படவில்லை. இப்போது தொழிலாளர்கள் தங்களுக்குத் தொழிற்சாலைகளில் வேலை கிடைக்கவில்லை என்பதையும், மற்றொருபுறம் தங்களுடைய சுதந்திரக் கைத்தொழில்கள், விவ சாயம் இவைகள் தங்களிடமிருந்து பிடுங்கிக் கொள்ளப்பட்டு விட்டன என்பதையும் உணர்ந்து கொண்டார்கள். வயிற்றுப்பசி எந்தச் சாதாரண மனிதனையும் கொஞ்சமாகிலும் சிந்திக்கக் கட்டாயப்படுத்துகிறது. தாங்கள் ஒரு புறம் உபயோக மற்றவர்களாவதையும் மற்றொருபுறம் நாள்தோறும் அனேக மனிதர்கள் கோடீஸ்வரர்களாவதையும் கண்டார்கள். இந்தப் பெருகிக் கொண்டுவரும் பணம் தங்களுடைய உழைப்பின் சேர்க்கை என்பதை உணர்ந்து கொள்வது அவர்களுக்குச் சிரமமாயில்லை. முதலாளிக் கொள்கையானது, தொழிலாளர் களுக்கு இவ்வளவு கஷ்டங்களைக் கொண்டு வந்து சேர்த்தாலும், அவர்களுக்கொரு பெரிய நன்மையையும் செய்தது. அதாவது பெரிய பெரிய எண்ணிக்கையில் தொமிலாளர்களைத் தொழிற் சாலைகளுக்குப் பக்கத்தில் ஒன்று சேரும்படி செய்தது. நிலங்களிலும் தனித் தொழில்களிலும் தொழிலாளர்கள் அங்குமிங்கும் சிதறிக் கிடந்தமையால் தங்களின் துன்பங்களைப் பேசாது சகித்துக்கொள்ள வேண்டியவர்களாயிருந்தார்கள். ஆனால், தொழிற்சாலையின் தொழிலாளர்கள் தங்களின்

சேர்க்கையால் போராட வலிமை பெற்றிருந்தார்கள். ஆரம்பத்தில், அவர்கள் நோயையும் நோயின் தன்மையையும் தெளிவாகத் தெரிந்து கொள்ளாமலிருந்திருக்கலாம். ஆயினும், அக்காலத்திலேயே நோயிலிருந்து விடுதலையடைய, அவர்கள் கால்களையும் கைகளையும் அசைக்க ஆரம்பித்து விட்டார்கள். மனித சமுதாயத்தில் எக்காலத்திலும் தாங்கள் சௌக்கியமாயிருந்தும் மற்றவர்களின் துன்பத்தைப் பற்றிச் சிந்தித்தும் அதைப் போக்குவதற்காகத் தங்களுடைய எல்லாவற்றையும் கொடுத்தும் விடக் கூடிய மனிதர்கள் தோன்றிக்கொண்டே வந்திருக்கிறார்கள். முதலாளிக் கொள்கை இல்லாத காலத்திலும், அதன் தீமைகளை இவ்வளவு பயங்கரமான உருவத்தில் காண முடியாத காலத்திலுங்கூட, சொத்து சமமான முறையில் பிரிக்கப்பட வேண்டும் என்று பிரசாரம் செய்தவர்கள் இருந்தார்கள். கௌதம புத்தர், 2500 வருடங்களுக்கு முன்னாலேயே தனது பிக்ஷுக்களுக்குள் வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களைத் தேவையைப் பொறுத்துச் சரியாகப் பிரித்துக் கொள்ளவேண்டும் என்று விதி ஏற்படுத்தியதோடு கூட, தனி மனிதர்களின் சொத்துரிமை எல்லையை மிகச் சிறிதாக்கி சங்கம் அல்லது சமுதாயத்தின் சொத்துரிமை எல்லையை மிக அதிகப்படுத்ினார். 9ம் நூற்றாண்டின் நடுப் பாகத்தில் 'திபெத்'தின் சக்கரவர்த்தி முனி-சன்-போவும், 3 முறை தனது நாட்டின் சொத்துக்களை மக்களுக்குச் சமமாகப் பிரித்துக் கொடுத்தார். இவ்வித உதாரணம் உலகத்தின் மற்ற பாகங்களிலும் கிடைக்க முடியும். ஆனால் முதலாளிக் கொள்கையின் விளைவிற்குச் சரியான மருந்து, பொது உடைமைக் கொள்கை தான். அது எந்த ஒரு தனி மனிதனின் வள்ளல் தன்மையின் விளைவல்ல. தாராள மனப்பான்மை உடைய மனிதர்கள், இந்த 20ம் நூற்றாண்டிலும், எல்லாச் சச்சரவுகளுக்கும் பிறப்பிடமாயிருக்கும் இந்த இயந்திரங்களையே உலகத்திலிருந்து ஏன் வழியனுப்பி விடக்கூடாதென்று சிந்திக்கிறார்கள். ஆனால், முதலாளிக் கொள்கையின் நோய்க்குச் சிறந்த மருந்தான பொது

உடைமைக் கொள்கை விஞ்ஞான ரீதியானது. அதாவது விஞ்ஞான வளர்ச்சியின் லாபங்களை எல்லாம் பெற்றுக் கொண்டும் அதன் எதிர்கால வளர்ச்சிக்குரிய வழியை முழுவதும் திறந்து வைத்துக் கொண்டும், முதலாளிக் கொள்கையின் மூலம் ஏற்பட்ட தீங்குகளை மட்டும் போக்கி விடுவது. மின்சார விளக்குகளை எப்படி மேலிருந்து ஊதி அணைக்க முடியாதோ, அதேபோல் விஞ்ஞானத்தின் மூலம் தோன்றியிருக்கும் பிரச்சனை களைக் குருட்டுத் தனத்தினால் போக்கி விட முடியாது; விஞ்ஞானப் பொது உடைமைக் கொள்ளைக்காரர்கள், விஞ்ஞா னத்தின் வளர்ச்சியால் தோன்றியுள்ளவைகள் இயற்கையில் கெட்டவையல்ல என்பதை நன்கு அறிந்திருக்கிறார்கள். இந்த இயந்திரங்கள் தனி மனிதர்களின் லாபத்திற்காக உபயோகிக் கப்பட்ட பொழுதுதான் வேலையில்லாத் திண்டாட்டம் என்ற பெரிய பிரச்சனை தோன்றலாயிற்று. ஆகையால் விஞ்ஞானப் பொது உடைமைக் கொள்கைக்காரர்கள் இந்த இயந்திரங்களைத் தனி மனிதர்களின் லாபத்திற்காக உபயோகிக்காமல் முழுச் சமுதாயத்தின் நன்மைக்காக உபயோகிக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். விஞ்ஞான வளர்ச்சி 6 மனிதர்களின் வேலையை ஒரு மனிதன் செய்ய உதவி செய்தால் பாக்கி 5 மனிதர்களை வேலையற்றவர்களாகச் செய்து, அவர்களைப் பசியால் மாளச் செய்யக்கூடாது. வேலையின் நேரத்தை அதே 6 மனிதர்களுக்கும் பிரித்துக் கொடுத்து விடவேண்டும். 6 மனிதர்கள் 12 மணி நேரத்தில் நெய்யக் கூடிய துணியை ஒரே மனிதன் இயந்திரத்தின் உதவியால் அதே நேரத்தில் நெய்துவிடக் கூடுமானால் அந்த 12 மணிநேர வேலையை அந்த 6 மனிதருக்கும் தலைக்கு 2 மணி நேர விகிதம் பிரித்து கொடுத்துவிட வேண்டும். இதுதான் பொதுவுடைமைக் கொள்கை. வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு நம் முன்னால் பிரேரேபிக்கும் சிறந்த வழி. இதிலிருந்து பொது உடைமைக் கொள்கைக்கும் முதலாளிக் கொள்கைக்கும் அடிப்படையில் வேறுபாடு உண்டென்பது தெரியவருகிறது. இரண்டும் இயந்திரங்களின்

உபயோகத்தை ஆதரிப்பவை. ஆனால், முதலாளிக் கொள்கை சில மனிதர்களின் லாபத்திற்காக முழுச் சமுதாயத்தின் வாழ்க்கையையும் துன்பம் நிறைந்ததாகச் செய்யத் தயாராயிருக்கிறது. பொதுவுடைமைக் கொள்கை சில மனிதர்களின் தன்னலத்தை நிறைவேற்றாமல், முழுச் சமுதாயத்தின் சுக வாழ்க்கையை அதிகப்படுத்துகிறது. பொருள்கள் லாபத்தைக் கருதி உற்பத்தி செய்யப்படும் வரை; வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்குரிய மருந்துக்குறிப்பு (Prescription), அதாவது வேலை செய்யும் நேரத்தை எல்லாத் தொழிலாளர்களுக்கும் பிரித்துக் கொடுத்தல், உபயோகிக்கப்பட முடியாது. உண்மையில் சைக்கிள் எப்படி அது ஓடும்வரைதான் நேராக நிற்க முடியுமோ, அதே போல் லாபம் கிடைக்கும் வரையில்தான் முதலாளிக் கொள்கை நிலைத்திருக்க முடியும். லாபம் அதனுடைய உயிர் நாடி.

இன்று உலகத்தில் எங்குப் பார்த்தாலும் துன்பங்களே தென்படுகின்றன. தொழிற்சாலைகாரர்கள், வியாபாரிகள் மட்டும் சந்தை மந்தமாயிருப்பதைப் பற்றிக் குறைசொல்லவில்லை. விவசாயி, தொழிலாளிகளும்கூட அதை அனுபவிக்கிறார்கள். தொழிற்சாலைகள் நிறைந்த நகரங்களில் தொழிலாளர்களின் நிலைமையைச் சொல்லவேண்டுவதில்லை. ஐரோப்பா, அமெரிக்காவின் தொழில் மிகுந்த நாடுகளில் தங்கள் வயிற்றுப் பசியைக்கூட தீர்த்துக் கொள்ளமுடியாத வேலையற்றவர்களின் எண்ணிக்கை கோடிக்கணக்கில் பெருக்கிக் கொண்டு வருகிறது. அந்த நாடுகளில் எத்தனையோ ஆண், பெண்கள் தங்கள் வாழ்க்கையில் வெறுப்புற்றுத் தற்கொலை செய்துகொள்ளுகிறார்கள். மனித சமுதாயத்தின் இவ்வளவு பெரிய எண்ணிக்கையையுடைய வகுப்பிற்கு அதிகமான துன்பங்களை வைத்துச் சிலமனிதர்கள் மட்டும் சுகமாயிருக்கும்படி செய்வது, எந்த நோக்கோடு பார்த்தாலும் சரியென்று சொல்ல முடியாது.

முதலாளிக் கொள்கையால் ஏற்பட்ட தீங்கு இந்த வேலையில்லாத் திண்டாட்டம் ஒன்றுமட்டுமல்ல, அது

மற்றொரு பயங்கரமான ஆபத்தையும் மனித சமுதாயத்திற்குக் கொடுத்திருக்கிறது. அதுதான் உலகத்தில் யுத்தத்தின் மூலம் அமைதியைக் கெடுப்பது. ஒவ்வொரு முதலாளிக் கொள்கை நாடும், தன் நாட்டுத் தொழிற்சாலைகள் ஒழுங்காக நடந்து கொண்டிருக்க வேண்டுமென்று விரும்புகின்றன. ஆனால் பொருள்கள் உலகச் சந்தையில் தடையின்றி விற்கும்வரையில் தான் தொழிற்சாலைகள் தடையின்றி நடக்க முடியும். 19ம் நூற்றாண்டில் முதன் 25 வருடம்வரை உலகில் அநேகம் புதிய சந்தைகள் இருந்தன என்று மேலே நாம் குறிப்பிட்டோம். ஆனால் பிந்திய ஒரு நூற்றாண்டில் நிலைமை முற்றிலும் மாறிவிட்டது. இப்பொழுது பொருள்களை விற்பனை செய்வதற்குக் கண்டுப்பிடிக்கப்படாத புதிய சந்தைகள் எதுவு மில்லை. உண்மையில் உலகத்தின் எல்லா தொழிலற்ற நாடுகளையும் முதலாளிக் கொள்கை நாடுகள் தங்களுக்குள் பங்கு போட்டுக்கொண்டுவிட்டன. இங்கிலாந்து, உலகத்தில் அதிக மான சந்தைகளைத் தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டது. ஜெர்மனியில் தொழிற்சாலைகள் அதிகப்பட்டபடியால், அது புதிய சந்தைகளைத் தேட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதன் விளைவுதான் சென்ற ஐரோப்பிய மகாயுத்தம். அந்த யுத்தம் நடந்து கொண்டிருந்தபோது சந்தர்ப்பத்தை உபயோகித்து அமெரிக்காவும், ஜப்பானும் சந்தைகளைக் கைப் பற்றிக் கொள்ள துவங்கின; யுத்தம் முடிவடைந்து இவ்வளவு காலமான பின்பும் நிலைமையென்ன? அமெரிக்காவின் பொருள்களை இங்கிலாந்து தனது சாம்ராஜ்ஜியத்திற்குள் அனு மதிக்க மறுத்தால் அமெரிக்கா இங்கிலாந்தின் செல்வாக்கைப் போக்கடிக்கச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும். ஜப்பானைப் பற்றியும் இந்த விசயம் மிக அதிகமாகப் பொருந்துகிறது. இருப்பது இரண்டே ரொட்டிகள்; அதை உண்பதற்குத் தயாராயிருப்பது பல வாய்கள். உலகத்தின் நாடுகள் இந்த அமைதியின்மையை நன்கு உணர்ந்திருக்கின்றன. அதனால்தான், ஆயுத நீக்கத்திற்கு இத்தனை முயற்சிகள்

செய்கின்றன. ஆயினும், தங்களின் பொருள்களை விற்பதற்குச் சந்தைகளைப்பற்றிய தகராறு நாடுகளுக்குள் இருக்கும்வரை உலகத்தின் தலைமீது தொங்கிக் கொண்டிருக்கும் யுத்த வாள் ஒதுங்கிப்போக மாட்டாது. உலகத்தின் பெரிய பெரிய யுத்தங்களுக்கெல்லாம் ஒரே காரணம் முதலாளிக் கொள்கைதான். சந்தைகள் குறைந்து போவதற்கு மற்றொரு காரணமும் ஏற்பட்டிருக்கிறது. முன்பு தொழில் வளர்ச்சியில்லாத நாடுகள் இப்போது மிக வேகமாகத் தமது தொழிற்சாலைகளை அதிகப்படுத்திக்கொண்டு வருகின்றன. உதாரணமாக இந்தியாவையே எடுத்துக்கொள்வோம். மகா யுத்தத்திற்கு முன்னால் தனது தேவையில் 5-ல் ஒரு பங்கு துணியை மிக்க கஷ்டத்தோடு தயாரித்த இந்தியா, இப்போது 5-ல் 4 பங்கு துணியை சுலபமாகத் தயாரிக்கிறது. அரிக்கென் விளக்கு, பௌண்டன் பேனா, பென்சில், பிரஷ், பிளேட், பாட்டரி முதலிய அனேக பொருள்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள் இப்போது ஏராளமாகத் தோன்றிவிட்டன. இவ்வளவு தொழிற்சாலைகள் தோன்றுவதில் அர்த்தம் மற்ற நாடுகளிடமிருந்து அவ்வளவு சந்தையையும் பிடுங்கிக் கொள்வது என்பதுதான். முன்பு தொழில் வளர்ச்சியற்ற நாடுகள் அநேகமிருந்தன. இப்போது அவையாவும் தொழில் வளர்ச்சியடைந்து போட்டி போடுகின்றன. முன்பு மிகக் குறைவான பொருள்களைத் தயாரித்துக் கொண்டிருந்த ரஷ்யா இன்று மற்றொரு அமெரிக்காவாக ஆகிக்கொண்டிருக்கிறது. சீனா, துருக்கி, ஈரான் இவைகளை விட்டுவிடுவோம். ஆப்கானிஸ்தானம்கூடத் தொழிற்சாலைகளைப் பெருக்கிக் கொண்டிருக்கிறது.

சந்தைகளைப் பற்றிய போட்டியால் உலகியல் யுத்த பயம் உறுதிப்படுத்தப்படுகிறது. இயந்திரங்களின் உபயோகமும் இயந்திரங்களின் புதிய புதிய வளர்ச்சியும் சந்தைகளின் குறைவும், தொழிலற்ற நாடுகளின் தொழில் வளர்ச்சியும், வேலையில்லாத் திண்டாட்டத்தை அதிகப் பயங்கரமானதாக ஆக்கப் போதுமானது. ஆனால் இதற்கு மேலும் ஒரு காரணமும்

ஏற்பட்டிருக்கிறது. ஒவ்வொரு 10 வருடம் ஜனகணிதத்தையும் பார்த்தால், மக்கள் எண்ணிக்கை அதிகப்பட்டு வருவது தெரியும். இந்தியாவில் மட்டும் கி.பி.1921-லிருந்து 1931-வரையிலுள்ள 10 வருடத்தில் 3 கோடி மக்கள் அதிகப்பட்டிருக்கிறார்கள். முதலாளிக் கொள்கை சில மனிதர்களைப் பணக்காரர்களாக்கி அவர்களுக்குச் சுகத்தையும், போக வாழ்க்கைக்குரிய பொருள் களையும் கொடுக்க முடியும். மிக விலைமதிப்புடைய மோட்டார் கார், பெரிய மாளிகைகள், அதை அலங்கரிப்பதற்கு அனேகம் பொருள்கள், பாரிசிலிருந்து தினந்தோறும் வெளியாகும் புதிய புதிய பாஷன்கள் (Fashion) இவை போன்ற போக வாழ்க்கைக்குரிய பொருள்களை அது நிச்சயம் உற்பத்தி செய்ய முடியும். ஆனால், மேலே கூறப்பட்ட உலகத்தின் பிரச்சினைகளைப் போக்குவதற்கு, அதனிடம் நம்பிக்கை வைப்பது முட்டாள்தானம். இந்தப்பிரச்சினைகள் இப்போது மனித சமுதாயத்தை வாழ்வு அல்லது மரணமென்ற முடிவான நிலைமைக்குக் கொண்டுவந்துவிட்டன. யுத்த பயத்தையே எடுத்துக் கொள்வோம். விஞ்ஞானமானது கொடிய ஆயுதங் களையும், அபாயம் நிறைந்த விசப் புகைகளையும் பயங்கரமான புழுக்களையும் மனிதர்கள் கையில் ஒப்புவித்திருக்கிறது. அமைதிக்கு வழி கண்டுபிடிக்க முடியாவிட்டால் மனிதர்கள் இவைகளை உபயோகித்து உலகத்தையே அழித்துவிட முடியும். ஒரு மனிதன் தனது சட்டைப் பையில் மை நிறைந்த பௌண்டன் பேனாவை வைத்துக் கொள்வதற்குப் பதிலாக பயங்கரப் புழுக்கள் நிறைந்த அதே அளவுள்ள ஒரு குப்பியை வைத்துக் கொண்டு, ஆகாயக் கப்பலில் புறப்பட்டு லண்டன் அல்லது நியூயார்க் போன்ற ஒரு பெரிய நகரத்தின் மீது அந்தக் குப்பியிலுள்ள புழுக்களை கொட்டிவிட்டானானால் சில மணி நேரத்தில் அந்த நகரம் வெறும் பிணக்காடாகிவிடும். இதுவெறும் கற்பனைக் கதையல்ல. யுத்த சம்பந்தமான விஞ் ஞான வளர்ச்சி இதைவிடக் கொடிய ஆயுதங்களைக் கொடுத்திருக்கிறது.

முதலாளிக் கொள்கையினாலேற்பட்ட தீங்குகள் இன்னும் அனேகமுண்டு. முதலாளிக் கொள்கையின் பயங்கரமான விலைவு அதிகமான மனிதர்கள் கொடுமையான தரித்திரத்தில் உழல்வதே சிறந்த திறமையுடைய தகுதிவாய்ந்த ஏழைச் சிறுவர்கள் பலரை நாம் காண்கிறோம். அவர்களுக்கு சந்தர்ப்பம் கொடுத்தால் அவர்கள் சிறந்த பொருளாதார நிபுணர்களாகவும், விஞ்ஞானிகளாகவும், கலைவாணர்களாகவும் ஆவார்கள். ஆனால், அவர்களின் தாய் தந்தையரிடம் தங்கள் குழந்தைகளின் விருப்பத்திற்கும் தகுதிக்கும் ஏற்ற அவசியமான கல்வியை அளிப்பதற்குப் போதுமான பணம் கிடையாது. மற்றொருபுறம் திறமையும், தகுதியுமற்ற பணக்காரர்களின் குழந்தைகளைப் படிப்பிப்பதற்காக, ஆயிரக்கணக்கான ரூபாய்கள் வீணாக்கப் படுகின்றன. முதலாளிக் கொள்கையின் காரணமாகத்தான், மனித சமுதாயத்திற்குத் தேவையற்றதும் மனிதர்களின் திறமையைப் புதைக்கும் மயானம் போன்றதுமான வக்கீல் தொழில் தோன்றிற்று. பொதுவுடைமைக் கொள்கை யைப் பிறப்பித்த அனேக காரணங்களுள் மேலே கூறப் பட்டவை சில.

# நாம் திரும்பிப்போக முடியுமா?

முதலாவது இரண்டாவது அத்தியாயங்களில் நாம் முதலாளிக் கொள்கை, பொது உடைமைக் கொள்கையின் தோற்றத்தைப்பற்றிக் கூறினோம். முதலாளிக் கொள்கையால் ஏற்பட்ட கஷ்டங்களை உதாரணத்தோடு காண்பித்து, அதற்கு மருந்து பொது உடைமைக் கொள்கைதான் என்றும் கூறினோம். இயந்திரங்களின் பெருக்கம், அவற்றின் வளர்ச்சி, ஜன எண்ணிக்கையின் பெருக்கம் - இவைகள் உலகத்தில் பயங் கரமான வேலையில்லாத திண்டாட்டத்தைக் கொண்டு வந்திருக்கின்றன என்று விவரித்தோம். நாம் முன்

அத்தியாயங்களில் இந்தியாவின் தாங்கமுடியாத தரித்திரத்தைப் பற்றித் தெரிவித்திருக்கிறோம். அதை எப்படித் தீர்ப்பது என்பது ஒரு பெரிய பிரச்சினை. இந்தப் பிரச்சினையைத் தீர்க்க நமது நாட்டில் இரண்டு விதமான கூட்டத்தார் முயற்சிக்கிறார்கள். ஒன்று, பணத்தைக் கொண்டு சுகமாக வாழ்க்கை நடத்துகிறதும், பொது உடமைக் கொள்கைப் பூச்சாண்டியைக் கண்டு இரவு பகலாக நடுங்கிக் கொண்டிருப்பதுமான கூட்டம். இந்த வகுப்பு மக்களிடம் கொஞ்சம் தாராள மனம் இருக்கிறது. தங்கள் பக்கத்து வீடுகளில் உணவும், உடையுமற்றுத் தரித்திரத்தில் உழலும் மக்களைப்பற்றி ஓரளவு நினைத்துப் பார்க்கிறார்கள். ஆனால் அதைத் தீர்ப்பதற்கு வேறு வழி கண்டு பிடிக்க முடியாத போதும்கூட பொது உடைமைக் கொள்கை நடக்க முடியாதது, விரும்பத்தகாதது என்று கூறிவிடுகிறார்கள். யார் ''தனது சுகமே உலக சுகம்'' என்று கருதுகிறார்களோ, அவர்களிடம் அறிவிருந் தாலும்கூட இந்த விஷயங்களைப் பற்றிச் சிந்திப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. மற்றொரு வகுப்பார் நிலைமையின் பயங்கரத்தை நன்குணர்ந்து, அதைப் போக்குவதற்கு ஏதேனும் செய்யவேண்டும் என்று விரும்புகிறார்கள். இவர்களிலும் இரண்டு விதமான மனிதர்கள் இருக்கிறார்கள். ஒன்று, எந்தக் கோணத்திலிருந்து இந்தப் புத்தகம் எழுதப்படுகிறதோ, அந்தப் பொது உடைமைக் கொள்கைக்காரர்கள். மற்றொன்று, இந்தப் பிசாசுத்தனமான சச்சரவு நிறைந்த இயந்திரங்களை விட்டுவிட்டு, இயந்திரங்களின் பெயரே இல்லாத அந்தப் பழைய காலத்திற்குப் போய்விடுவோம் என்று கூறும் கூட்டத்தார். ''அக்காலத்தில் ஒவ்வொரு கிராமமும் ஒரு தனி உலகமாயிருந்தது. தச்சன், கொல்லன், சேணியன், உழவன் எல்லோம் அநுதாபத்தோடு ஒத்துழைத்துச் சுதந்திரத்தோடு வேலை செய்தார்கள். பசுமை நிறைந்த நிலங்களாலும், குளிர்ச்சிதரும் தோட்டங்களாலும் சூழப்பட்டு, இயற்கையின் மடியில் மகிழ்ச்சியோடும் அமைதியோடும் வாழ்க்கை நடத்தினார்கள். அவர்களின் பக்கத்துத் தபோவனங்களில் ரிஷிகளும், மகாத்மாக்களும்

அமைதியான ஆசிரமத்திலே, தங்களது அத்யாத்மீக ஆனந்தத்திலும் அன்பு வெள்ளத்திலும் மனிதர்களை மட்டு மல்ல, மற்ற உயிர்களையும்கூட மூழ்கச் செய்து கொண்டி ருந்தார்கள். இந்த இயந்திரங்களின் காரணமாய் நமது அந்தத் தங்க உலகம் அந்தச் சத்திய யுகம் போய்விட்டது. வாருங்கள். நாம் மறுபடியும் அங்கே போய்ச் சேருவோம்'' என்று சொல்கிறார்கள். ஆயினும், அந்தப் பொன்னுலகின் செயலான பிரமிட், சாய்ந்த கோபுரங்கள், சீனாவில் நெடுஞ்சுவர் இவைகளின் சரித்திரத்தை படிப்பவர்கள், மேலே கூறப்பட்ட நயத்தோடு கூடிய-மனதிற்கினிய-சித்திரத்தின் முக்கால் பாகம் பொய் என்பதைத் தெரிந்து கொள்ளுவார்கள். அந்த அடிமைப் பழக்கமிருந்த காலத்தில், மனிதர்களின் விலைமதிப்பு, இந்தக் 'கோரக்கலியுக'த்திலுள்ள அளவுகூடக் கிடையாது. ஆனாலும், கொஞ்ச நேரத்திற்கு நாம் அந்தச் சித்திரத்தை உண்மை யானதென்றே வைத்துக் கொள்வோம்; நாம் 2000, 3000 வருடங்களுக்கு முந்திய காலத்திற்குத் திரும்பிப் போக முடிந்தால், இயந்திரங்களின் பெருக்கம், அவற்றின் வளர்ச்சி இவைகளினால் தோன்றிய கஷ்டங்களைப் போக்கிவிட முடியும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், நமக்குப் பின்னால் திரும்பிப்போக உரிமை இருக்கிறதா? இயந்திரங்களின் தோற்றம், ஒரு மனிதனுடைய ஒரு மணி நேர மூளைப் போராட்டத்தின் பலனா? அதனுடைய ஆரம்பம் மிகப் பழைய காலம், நான்கு கால் பிராணி தனது நான்கு கால்களுடைய வேலைகளையும் பின்னங்கால் இரண்டினிடமும் ஒப்புவித்து, முன்கால் இரண்டையும் பூமியிலிருந்து விடுதலை பெறச்செய்து இரண்டுகால் பிராணியாக மாறிய அன்றிலிருந்தே, இயந்திர நாகரிகம் ஆரம்பமாகிறது. முன்கால் இரண்டினாலும் தடியையும், கல்லையும் எறிய ஆரம்பித்த அன்றே வளர்ச்சிப் படலம் துவங்கி விட்டது. மனிதன் மனிதத்தன்மையைப் பெற்றதிலிருந்து இயந்திரப் பிராணியாகவே இருந்து வந்திருக்கிறான். வேறுபாடு, இயந்திரத்தின் அளவில்தான். நமது

நண்பர்கள், இயந்திர வளர்ச்சியின் முதற்பாகத்தை நினைவுகூர மறுக்கிறார்கள். கையால் நடத்தப்படும் குயவன் சக்கரம், ராட்டை, ஏற்றம், வண்டி இவைகளெல்லாம் இயந்திரங்கள்தான் என்று நினைக்கவே மறுக்கிறார்கள். நீராவி, எண்ணெய், மின்சாரம் இவைகளால் நடத்தப்படுபவைகள் தான் இயந்திரம் என்று நினைக்கிறார்கள். வியவகார ரீதியாகப் பார்த்தால் இதில் ஒன்றும் குற்றமில்லை. தற்காலப் பயங்கரமான நிலைமையைத் தோற்றுவித்ததற்கு முக்கிய காரணமான நீராவி, எண்ணெய், மின்சாரம் இவைகளினால் இயக்கப்படும் இயந்திரங்களை இந்த உலகத்திலிருந்து போக்கிவிட முடியுமா? இந்த இயந்திரங்கள் அறிஞர்களின் மூளையிலிருந்து தோன்றியவைகள். அந்த அறிஞர்கள் எப்படிப்பட்டவர்கள்? தங்கள் வாழ்நாள் முழுவதும் களைப்படையாமல் உழைத்து இயற்கையின் ஏதேனும் ஒரு இரகசியத்தைக் கண்டுபிடித்துவிட்டால், அதைவிடத் தங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கக் கூடியது உலகில் வேறெதுவுமில்லை என்று நினைப்பவர்கள். அவர்களின் ஆராய்ச்சியும் தவறானதென்று உங்களால் கருதப்பட்டால், உங்களுடைய உத்தரவினால் அவர்கள் நெருப்பின் கொடிய ஜ்வாலையில் எரியப்படவும், சக்கரத்திலிட்டுப் பிழியப்படவும், 2000 வருடங்களுக்கு முன்போலவே இன்றும் மகிழ்ச்சியோடு தயாராயிருப்பவர்கள். இந்தத் தகராறு மூளை; அதாவது சைத்தானின் தொழிற்சாலை இருக்கும்வரை இயந்திரங்களின் அடிப்படையை எப்படி நசுக்க முடியும்? நீங்கள் நினைக்கிறபடி, பின்னால் திரும்பிப் போவது அவ்வளவு சுலபம் அல்ல என்பது இப்போது தெரிகிறது. இதற்காக, மனிதர்களில் உயர்ந்த மூளையுடையவர்களைக் கொன்று குவிக்க வேண்டும். அப்படிச் செய்ய அமைதியின் பக்தர்களும், சத்திய யுகப் பிராணிகளுமான நமது நண்பர்கள் விரும்பமாட்டார்களே! ஆனால் அவர்கள், ''விஞ்ஞானிகளையும், சிந்தனையாளர்களையும் கொல்ல வேண்டிய அவசியமில்லை; அவர்கள் வாழ அனுமதிப்போம். ஆனால் அவர்களால் கண்டுபிடிக்கப்படும் பொருள்களை

உபயோகிக்காதபடி ஏற்பாடு செய்துவிடுவோம். பின்பு அவர்கள் தங்களின் முயற்சி பிரயோஜனம் அற்றதாய்ப் போவதைக் கண்டு, அவர்களே அவ்விதம் சிந்திப்பதை விட்டு விடுவார்கள். இவ்விதம், உலகம் தனது பயங்கர விரோதியிடமிருந்து கொஞ்ச நாளில் விடுதலையடைந்து விடும்; அல்லது யாரேனும் ஒரு பைத்தியம் இந்த ஆராய்ச்சியை விடாவிட்டால், ஒன்று, அவருக்கு இரசாயனசாலை முதலிய வசதிகள் கிடைக்காமையால் அவருடைய வேலை நின்றுவிடாவிட்டாலும், கஷ்டமானதாக ஆகிவிடும். மற்றொன்று, அவர்கள் வெற்றி பெற்றாலும் அது குரங்காட்டியின் பொம்மையைப் போல ஒரு விளையாட்டுப் பொருளாய்விடும்'' என்று சொல்லக்கூடும்.

இவ்விதம் நினைப்பவர்கள், முதலில் விஞ்ஞானத்தின் வெற்றியை உபயோகிப்பவர்கள் யார் என்பதைப் பற்றியும், அவர்களுடைய சரியில்லாத இந்தக் கெட்ட உபயோகத்தை விட்டுவிடும்படி செய்யச் சக்தியுண்டா என்பதைப் பற்றியும் சிந்திக்க வேண்டும். இந்த ஆராய்ச்சியின் விளைவை உபயோகிப்பவர்கள் உலகத்தின் கோடீஸ்வரர்கள்; முதலாளிகள்; வியாபாரிகள். அவர்களுடைய விமானங்க்ள் ஆகாயத்தில் காற்று வேகத்தில் ஓடி, நாடுகளிடையே உள்ள தூரத்தைக் குறைக்கின்றன. அவர்களுடைய 30,000, 40,000 டன் நிறையுள்ள கப்பல்கள் கடலின் இயத்தைக் கிழித்துக் கொண்டு ஒரு நாட்டுப் பொருளை மற்றொரு நாட்டுக்குக் கொண்டு சேர்க்கின்றன. அவர்களுடைய ரயில், மோட்டார் போன்ற ஆயிரக்கணக்கான பொருள்கள் உலகத்திற்கு இன்றியமையாததாக ஆகிவிட்டன. இதோடுகூட, இன்று உலகத்தின் எல்லா நாட்டு ஆட்சியும் அவர்கள் கையில் தானிருக்கிறது. ஆகையால், அவர்களை வசப்படுத்தும் சக்தியை நீங்கள் பெற முடியாது. நீங்கள், ரஸ்கின், காந்தி இவர்களுடைய சொல்லுடன் கூட உங்கள் கட்சியை எடுத்துச் சொன்னால், அவர்களுக்கு அது கொஞ்ச நேரப் பொழுது போக்குக்கு உபயோகமாயிருக்கலாம். சில

வேலையில்லாத நேரத்தில், உங்கள் கேலிப் பேச்சைக் கேட்பதற்கும் அவர்கள் தயாராயிருக்கலாம். ஆயுத ஒழிப்பு மாநாட்டில், தங்கள் தொண்டைகளைக் கிழித்துக் கொண்டு பிரசங்கங்கள் செய்கிறார்கள் இங்கிலாந்து, அமெரிக்க இராஜதந்திரிகள். ஆனால், அவர்களின் பெரும் முதலால் நிரப்பப்பட்டுள்ள, குண்டு-வெடி மருந்து செய்யும் தொழிற்சாலைகள் மனிதர்களைக் கொன்று குவிக்கும் ஆயுதங் களைத் தங்கள் நாட்டைக் காப்பாற்றுவதற்காக மட்டுமின்றி, சீனாவை யுத்த நெருப்பில் பொசுக்குவதற்காகவும் செய்து குவிக்கின்றன. தங்கள் நாட்டு அரசாங்க சபைகள் தடுத்தும்கூட, ஜப்பானுக்கு ஆயுதங்கள் விற்பதை அவர்கள் நிறுத்தவில்லை யென்றால், அவர்கள் உங்களுடைய உலர்ந்துபோன கேலிப் பேச்சைக் கேட்டு ஊசி முதல் கப்பல்வரை செய்யும் தங்கள் தொழிற்சாலைகளை மூடி விடுவார்களென்று நம்புகிறீர்களா? அவர்களுடைய பணத்தால் வளர்க்கப்பட்ட அடிமைப் புரோகித வர்க்கம் உங்களைச் சும்மா விட்டுவிடுமா?

இயந்திரங்களைப் பெரிய அளவில் உபயோகிப்பது அரசாங்கங்கள்தான். ரயில், ஆகாய விமானம், கப்பல், பீரங்கி, டார்பிடோ, கம்பியில்லாத் தந்தி இவைகள் அரசாங்கங்களுக்கு உயிர்நாடி. பக்கத்து நாடுகளிடம் இந்தப் பொருள்களெல்லாம் இருக்கும்வரை எந்த ஒரு அரசாங்கமும் இவற்றை விட்டு விடச் சம்மதிக்காது. செங்கிஸ்கானுடைய சேனை பசிபிக் கரையிலிருந்து டேன்யூப் கரைவரை வெற்றி பெற்றதற்குக் காரணம், அவனுடைய ஆயுதங்களுள் வெடிமருந்தும் சேர்ந் திருந்தது தான். இந்தியாவில் பாபர் வெற்றி பெற்றதற்குக் காரணம் அவர் வெடிமருந்துப் பீரங்கிகளை உபயோகித்தது தான். ஐரோப்பியர்கள் ஆசியாவில் வெற்றிபெற்றதற்கும், அவர்களிடம் மிகுந்த சக்தி வாய்ந்ததும் - நெருப்புமயமானதுமான ஆயுதங் களிலிருந்ததுதான் காரணம். 2500 வருடங்களுக்கு முன், இந்தியா வில் மரச் சுவர்களால் ஆன கோட்டைகள் பாதுகாப்புக்குப்

போதுமானவை என்று கருதப்பட்டன. அம்பின் தாக்குதலைத் தடுப்பதற்குக் கவசங்கள் போதுமானதாயிருந்தது. ஆனால், பின்பு ஆயுதங்களின் சக்தி எப்படி வளர்ந்ததோ அதே போல செங்கல், கல் இவைகளால் மிகக் கனமாகக் கட்டப்பட்ட சுவர்களை யுடைய கோட்டைகள் அமைக்கப்பட்டன. பீரங்கிகள் மிகுந்த சக்திசாலியான பின்பு, எஃகுக் கோட்டைகளுக்கு மிகுந்த அவசியம் ஏற்பட்டது. ஆனால், ஆண்டவர்ப் போன்ற பிளக்க முடியாத உறுதியான எஃகுக் கோட்டையையும், ஜெர்மன் பீரங்கிகள் 24 மணி நேரத்தில் உடைத்தெறிந்துவிட்டன. இன்றைய ஆகாய விமான காலம் அந்தக் கோட்டைகளையும் உபயோகமில்லாமல் செய்துவிட்டது. இப்போதைய எந்தச் சரியான அரசாங்கமும் தன்னை வளர்ச்சிபெற்ற ஆயுதங்களால் அலங்கரித்துக் கொள்ளவே விரும்புகிறது. இந்நிலைமையில் உங்களுடைய பேச்சை யார் கேட்பார்கள்?

ஏதாவது ஒரு நாடு தன்னுடைய அறிவை இழந்துவிட்டு, இயந்திரங்களைப் பகிஷ்கரிக்கச் சம்மதிக்கிறது என்று வைத்துக் கொள்வோம்; அதனுடைய நிலைமை என்ன ஆகும்? அது ஒரு ஜெயில் கைதியாகலாம். அதாவது, அது ஏதேனும் ஒரு பலமுள்ள நாட்டிற்கு நிரந்தர அடிமையாக ஆகி விடவேண்டும். அந்த பலமுள்ள நாடு, இவர்களைப் போன்ற ஐம்பது, நூறு இலட்சியவாதிகளுக்கு ஆத்ம சுத்திக்காக வனத்தில் தவம் செய்யவும் உண்ணாவிரதமிருக்கவும் வசதி செய்து கொடுக் கலாம். ஆனால், நாட்டின் லக்ஷக்கணக்கான மக்கள் சுக வாழ்க்கையை நிரந்தரமாக மறந்து விட வேண்டியதுதான். ஏனென்றால், விடுதலை விஞ்ஞானத்தின் உதவி இன்றிக் கிடைக்காது. அதை நீங்கள் இந்த மக்களுக்கு மறைத்து விட்டீர்கள். ஆகவே எந்த ஒரு மரியாதையுள்ள அரசாங்கமும், தன்னைக் காத்துக் கொள்வதற்கு அதி முக்கிய சாதனமான யுத்த இயந்திரங்களை விட்டுவிடச் சம்மதிக்காது. நீங்கள் எந்த ஒரு இயந்திரத்தையாவது யுத்த சம்பந்தமற்றது என்று குறிப்பிட முடியுமா? ஒரு நாட்டின் பார்லிமெண்டில் ஒரு சத்தியுகவாதி,

யுத்த சம்பந்தமில்லாத எல்லா இயந்திரங்களையும் நாட்டிலிருந்து போக்கிவிட வேண்டும் என்று ஒரு மசோதாக் கொண்டு வந்தால், அதைச் சர்க்கார் தரப்பில் எதிர்ப்பின்றி ஏற்றுக்கொள்ளப்படலாம். ஏனெனில், எந்த இயந்திரமும் யுத்த சம்பந்தம் இல்லாதது அல்ல என்று சர்க்கார் காட்டமுடியும். மிதான செலவு செய்தல் என்ற விளம்பரத்தோடு ஒரே கூட்டை அனேக முறை உபயோகிக்கும் இந்தக் காலத்தில், சட்டத்தை அச்சிடுவதற்குக் காகிதமும் மையும் செலவிடுவது வீண் செலவு என்று கருதினால், அரசாங்கம் இதைத் தடை செய்யும். இப்போது, தங்களுடைய சத்திய யுகத்திற்குத் திரும்பிச் செல்ல டி நலாளிகளும், அரசாங் கங்களும் சம்மதிக்கமாட்டார்களென்பது தெளிவாகிவிட்டது. ஒரு மூக்கரையனுடைய வழியைப் பின்பற்றக்கூடச் சீடர்கள் கிடைக்கும் பொழுது, உங்களுடைய சுயநலமில்லாத நல்லெண்ணத்தோடு வெளிவரும் எண்ணங்களைச் செயலில் கொணரச் சில மனிதர்கள் கிடைப்பார்களென்பதில் சந்தேக மில்லை. அவர்களிடம் பணமிருக்குமானால் மேல் நாட்டில் நிர்வாண இயக்கத்தாரைப் போன்று நகருக்கு வெளியே, தங்களுடைய உத்யான வனங்களையும் ஆசிரமங்களையும் அமைப்பார்கள். பின்நோக்கிச் செல்லுவதற்கு மிகப் பெரிதும், விலக்க முடியாததுமான இரண்டு கஷ்டங்களை மேலே சொன்னோம். அதைவிட இன்னும் அனேக காரணங்கள் காண்பிக்க முடியும். பின்னோக்கிச் செல்வதற்காக இன்று அறிவைப் பரப்புவதற்கு மிகவும் உதவியாயிருக்கும் அரசு இயந்திரம், செய்தித்தாள்கள் முதலிய அனேக இயந்திர வசதிகளை விட்டுவிட வேண்டும். மறுபடியும் பனை ஓலையிலும், மரப்பலகையிலும், தோலிலும் எழுதிப் படிக்கத் துவங்க வேண்டும். புத்தகங்கள் இன்மையால் அனேக விஷயங்களை மனனம் செய்து வைத்துக் கொள்ள வேண்டி வரும். முற்காலத்தில் இவைகளைக் கஷ்டத்தோடு செய்து வந்தார்கள். இப்போது வசதியான சாதனங்கள் பல தங்கள் கண்

முன்னால் இருப்பதைப் பார்த்துக்கொண்டு, அப்படிச் செய்வது நாவினால் சொல்வதைப் போல அவ்வளவு சுலபமல்ல.

நீங்கள் சொல்வதைப் போல் அந்தச் சத்திய உலகத்திற்கு திருப்பிச் செல்வதில் வெற்றி பெற்றால், இயந்திரங்களால் ஏற்பட்டுள்ள வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சினை ஓர் அளவு தீர்க்கப்படும். ஆனால், வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு மக்கள் பெருக்கம் என்ற மற்றொரு பெரிய காரணமிருக்கிறது. உலகத்தில் சில தொழில் வளர்ச்சியுள்ள நாடுகளைத் தவிர்த்து மற்ற எல்லா நாடுகளிலும் மக்கள் எண்ணிக்கை பெரிய அளவில் அதிகரித்துக் கொண்டு வந்திருக்கிறது. 1931ம் வருட ஜனக் கணிதப்படி சென்ற 10-வருடத்தில் இந்தியாவில் மட்டும் 3 கோடி மக்கள் அதிகப்பட்டிருக்கிறார்கள். ஐக்கிய மாகாணத்திலும் பீகாரிலும் அனேக ஜில்லாக்களில் ஒரு மனிதனுக்குக் கால் ஏக்கர் விகிதம் கூடப் பயிரிடும் நிலம் கிடைப்பது கஷ்டமாயிருக்கிறது. அங்கே புதிய நிலங்களை உற்பத்தி செய்வதற்குக் காடுகளோ, தரிசு நிலங்களோ கிடையாது. பீகாரின் சாரான் ஜில்லாவிலும் ஐக்கிய மாகாணத்தில் கோரக்பூர் ஜில்லாவிலும், ஒரு மனிதனுக்கு ஏக்கரில் 5ல் ஒரு பாகம் கூடப் பயிர் நிலம் கிடைப்பது கஷ்டமாயிருக்கிறது. அந்த ஜில்லாக்களின் லட்சக்கணக்கான மனிதர்கள், கல்கத்தா முதலிய நகரங்களுக்குச் சென்று தொழிற்சாலையில் வேலை செய்கிறார்கள். அப்படி இருந்தும் அங்குள்ள ஏழ்மையை எழுத்தில் எழுத முடியாது. உங்களுடைய சத்திய யுகத்திலும் உணவு, உடை பெறுவதற்கு ஒரு மனிதனுக்கு 2 ஏக்கர் விகிதம் பயிர் நிலம் வேண்டும். மேய்ச்சல் தரிசு, ரிஷிகளுக்கு ஆசிரமம் முதலியவைகளுக்கு ஏற்பாடு செய்யும் பொழுது இன்னும் அதிகமான நிலம் வேண்டும். இந்த நிலத்தை எங்கிருந்து கொண்டு வர முடியும்? சாரான் ஜில்லாவின் 24 லக்ஷம் மக்களை 5 லக்ஷமாகக் குறைக்க முடியுமா? நீங்கள் கர்பத்தடையை ஆதரிக்க 'மாட்டீர்கள். ஹிம்சையின் வழியை ஒருநாளும் ஏற்றுக் கொள்ளவும் மாட்டீர்கள். ஒருக்கால் நீங்கள்

உங்களுடைய மனதை ஒரு முறை கல்லாக ஆக்கிக் கொண்டு, அந்த மக்களை 5 லக்ஷத்திற்குக் குறைத்துவிட்டாலும், மறுபடியும் 4, 5 தலைமுறைகளில் வளர்ந்து அதே எண்ணிக்கைக்கு வந்து விடுமே! மக்கள் பெருக்கத்தைத் தடுப்பதில் தொழிற்சாலைகளின் வளர்ச்சி ஓரளவு உதவிசெய்யும். இங்கிலாந்து, பிரான்ஸ் முதலிய இயந்திர வளர்ச்சியுள்ள நாடுகளில், மக்கட் பெருக்கம் தடைப்பட்டுவிட்டது. கர்ப்பத் தடையையும், இயந்திர வளர்ச்சியையும் ஏற்றுக் கொள்ளும் பொது உடைமைக் கொள்கைக்காரர்கள் இதைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. ஆனால் பின்னே திரும்பிச் செல்ல விரும்பும் சத்திய யுகவாதிகள் இதைத் தீர்க்க முடியுமா? அவர்களுடைய புலனடக்கமும், பிரம்மச்சரியமும் சில பேருக்கு உபயோகமாயிருக்கலாம். ஆனால் அவைகள் சமுதாயத்தில் ஏமாற்றத்தையும், இரகசியக் குற்றங்களையும் தோற்றுவித்துவிடும் என்பதில் சந்தேகமில்லை.

அவர்கள், ''நாங்கள் கொஞ்சம் செய்கிறோம்; பாக்கியைக் கடவுள் கவனித்துக் கொள்ளுவார்'' என்று சொல்லக்கூடும். நாங்கள் சொல்லுகிறோம் ''இல்லை ஐயா, நீங்கள் ஒன்றும் செய்ய வேண்டாம். எல்லாவற்றையும் கடவுளிடமே விட்டு விடுங்கள். பொது உடைமைக் கொள்கைக்காரர்கள் செய்வதெல்லாம், கடவுளின் செயல்தான் என்று உங்கள் மனத்திற்கு உணர்த்துங்கள்'' என்று. கடவுளைப்பற்றி நாம் பின் அத்தியாயங்களில் கூறுவோம்.

இப்போது பின்னோக்கி, ஓடுவதென்பது நம்மால் ஆகக்கூடாத காரியம் என்று நன்கு தெரிகிறது. நமது பிரச்சினைகளை நாம் முன்னேறித்தான் எதிர்க்க வேண்டும்.

நமது வறுமை போக்கும் வழி பொது உடைமைக் கொள்கையே.

நாம் மூன்றாவது அத்தியாயத்தில் பின்னோக்கிச் செல்ல முடியாதென்பதை விளக்கிச் சொன்னோம். வயிற்றுப் பசியை

உணராத எழுத்தாளர்கள் கையில் பேனா கிடைத்ததும் இந்தியாவைப் பூலோக சுவர்க்கம் என்று வர்ணிக்கத் துவங்கி விடுகிறார்கள். இந்தியா என்பதற்கு அர்த்தம், சில ராஜாக்கள், ஜமீன்தார்கள், பணக்காரர்கள் என்பதானால், அவர்கள் கூறுவது ஓரளவுக்குப் பொருந்தும். இந்தியாவைத் தமது கண்களால் ஒரு தரம்கூடப் பார்க்காத ஐரோப்பாவின் ஆண், பெண்கள் பலர், நமது நாட்டு மகாராஜாக்களைப் பார்த்துவிட்டு, இந்தியாவைப் பற்றித் தவறான அபிப்ராயம் கொண்டுவிடுகிறார்கள். ஆனால் நமது நாட்டின் உண்மையான நிலைமை என்ன? இந்தியாவின் பெரும்பான்மையான மக்களின் தரித்திர நிலையைப் பற்றி வெளிநாட்டார்கள் கற்பனைகூடச் செய்யமுடியாது. ஐரோப்பிய மக்கள் எவ்விதமாவது வாழ்க்கை நடத்துவதை அதாவது பசியிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்வதை, 'ரொட்டி வெண்ணெய்க்கு நாளைக் கடத்துவது' என்று சொல்லுகிறார்கள். நமது நாட்டு ஏழை மக்களுக்கு இது கனவில் கூடக் காண முடியாத விஷயம். இங்கு அறுவடைக் காலத்தில் அவர்கள் எப்படியோ வயிற்றை நிரப்பிக் கொள்ளுகிறார்கள்; பாக்கி நாட்களில், இவர்கள் எப்படிக் காலம் கழிக்கிறார்கள், எப்படி உயிரோடிருக்கிறார்கள் என்பது ஒரு ஆச்சரியகரமான விஷயம். பீகார், ஐக்கிய மகாண ஏழைக் கிராமவாசிகளை எடுத்துக் கொள்ளுவோம். சித்திரை மாதத்தில் அறுவடை நடக்கும் பொழுது கூலி வேலை பார்த்தோ, பிச்சை வாங்கியோ, வயல்களில் உதிர்ந்து கிடக்கும் கதிர்களைப் பொறுக்கியோ தங்கள் வயிற்றை நிரப்பிக் கொள்ளுகிறார்கள். வைகாசி பிற்பகுதியிலேயே நிலைமை மாறிவிடுகிறது. ஆடி மாதம் வருவதற்குள், சித்திரையில் செழித்திருந்த அவர்கள் உடல் உலர்ந்து, வாடிவிடுகிறது. மழை ஆரம்பத்திலிருந்து கீரைகளும், தழைகளும்தான் இவர்களின் உயிருக்கு ஆதரவளிக்கின்றன. அந்த வருடத்தில் மாம்பழங்கள் அதிகமாகக் கிடைத்தால், அவர் களுக்கு மாங்கொட்டையால் செய்யப்பட்ட ரொட்டிகள் சில கிடைக்கலாம். அவர்களுடைய ஏழ்மைத்தனத்தின் ஒரு வருடக்

கதையைச் சொல்ல ஆரம்பித்தால், ஒன்றிரண்டு மாதங்கள் தவிரப் பாக்கி நாளெல்லாம் வேதனை தரக்கூடிய சம்பவங்களே நிறைந்திருக்கும். நகரங்களிலும் ரயில்வே ஸ்டேஷன்களுக்குப் பக்கத்திலும், உங்களால் எறியப்பட்ட எச்சில் துண்டுகளை நாயின் வாயிலிருந்து பிடுங்கித் தின்று வயிற்றுப் பசியைத் தீர்த்துக்கொள்ளும் அனேக மனிதர்களை நீங்கள் காண முடியும். நமது நாட்டில் வேலையில்லாமல் திண்டாடும் கோடிக் கணக்கான மக்களுக்கு வேலை கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யும் வரை இவர்களை ''வேலை செய்யாமல் பிச்சை வாங்கும் சோம் பேறிகள்'' என்று கேலி செய்ய முடியாது. அதிர்ஷ்டவசமாக நமது நாடு இயற்கையாகவே குளிர் குறைந்த நாடாயிருக்கிறது. இன்றேல், உடுக்கவே துணி இல்லாத இந்த மக்களை வருடந்தோறும் குளிர் லக்ஷக் கணக்கில் அள்ளிக் கொண்டு போய் விடும். லக்ஷக்கணக்கான மனிதர்கள் ஒரு கிழிந்த வேஷ்டி, அதிகமாகப் போனால் ஒரு சிறு துண்டு - இவற்றோடு திருப்தியடைந்து விடுகிறார்களா? அவர்களுக்கு உடலை முழுவதும் மூடக்கூடிய துணிகள் கிடைத்தால் அவற்றை வேண்டாமென்று தூர எறிந்து விடுவார்களா? நமது படித்த சகோதரர்கள், அவர்களுடைய அழுக்குத் துணிகளைப் பார்த்து முகத்தைச் சுழிக்கிறார்கள். நாள்தோறும் கஷ்டத்தோடு தனது வயிற்றைச் சிறிது குறைத்து 10 அணாவிற்கு ஒரு துணி வாங்குகிறவன், 8 நாளைக்கு ஒரு முறை சோப்பு வாங்கக் காசுக்கு எங்கே போவான்? சிலர் கருமித்தனமாக நடந்து கொண்டாலும் அதற்குக் காரணம் எதிர்கால உணவைப் பற்றிய பயம்தான்.

நோய்! அந்த ஏழை மக்களுக்கு யமனுடைய அழைப்பைக் கொண்டுவரும் பொருள். எனது அனுபவம் ஒன்றைக் கூறுகிறேன். ஒரு கிராமத்தில் ஒரு குடும்பம் கொஞ்சம் கொயினாவும், இரண்டு மூன்று வாரப் பத்திய உணவும் கிடைக்காமையால், 2, 3 வருடத்திற்குள் அடியோடு அழிந்து போய்விட்டது. இவ்வித உதாரணங்கள் இந்தியாவின் ஒவ்வொரு

மூலையிலும் உங்களுக்குக் கிடைக்கும். மேலே கூறப்பட்டவைகள் உயிர் வாழ்வதற்குத் தவிர்க்க முடியாத பொருள்கள். நிற்க, மனிதன் மனிதனாவதற்குக் கல்வி இன்றியமையாத சாதனம். அரசாங்கம், ஒவ்வொரு கிராமத்திலும் பள்ளிக் கூடங்களைத் திறக்க முடியாது. கஜானாவில் பணமில்லை என்று சுலபமாகச் சொல்லிவிடும். எல்லாக் கிராமங்களிலும் பள்ளிக்கூடங்கள் திறக்கப்பட்டுவிட்டாலும், எல்லா மனிதர்களும் தங்கள் குழந்தைகளைப் படிக்க அனுப்ப முடியுமா? ஆறு, ஏழு வயதுச் சிறுவர்கள் மாடு மேய்த்தோ, குழந்தைகளுக்கு விளையாட்டுக் காட்டியோ தனது வயிற்றை வளர்க்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கும் பொழுது, அவர்கள் பள்ளிக்கூடத்திற்குப் போனால் சோற்றுக்கு என்ன செய்வார்கள்? சுருக்கமாகச் சொன்னால் நமது நாட்டின் ஏழ்மைத் தனத்திற்கு உலகத்தில் உவமானமே கிடையாது. அந்த ஏழை மக்களுக்கு, உலகத்தின் மற்ற நாடுகளைப்பற்றி ஒன்றுமே தெரியாது. ஆகையால் அவர்கள் தங்களுக்குள்ளே தங்கள் ஏழ்மைத் தனத்தைப்பற்றி நினைத்து விதியென்று சகித்துக் கொள்ளுகிறார்கள். இந்த ஏழ்மைத்தனத்தின் காரணங்களுள் சிலவற்றைப்பற்றி வாசகர்கள் தெரிந்த கொண்டிருப்பார்கள். மக்கள் எல்லாக் காரணத்தையும் அந்நிய ஆட்சியின் தலைமீது போட்டுத் தாங்கள் விடுதலை பெற விரும்புகிறார்கள். சுயராஜ்யம் கிடைத்ததும் நமது துன்பங்களெல்லாம் விலகிப் போய்விடும் என்று நினைக்கிறார்கள். சுதந்திரமுடைய நாடுகளில், வருடந்தோறும் ஏழ்மைத் தனத்தைத் தாங்க முடியாமல் ஆயிரக்கணக்கான மனிதர்கள் தற்கொலை செய்து கொள்ளவில்லையா? அந்நிய ஆட்சியாலும், வெளிநாட்டு வியாபாரத்தாலும் நாட்டிற்கு வெளியே போகும் பணத்தை இந்தியாவின் 40 கோடி மக்களுக்கும் பிரித்துக் கொடுத்தால், அதுவும் இந்த ஏழை மக்களுக்குச் சாதாரண மனித வாழ்க்கைத் தேவைக்குப் போதுமானதல்ல என்று தெரியவரும். சுதந்திர அரசாங்கம் தொழில் வளர்ச்சிக்கு உதவி செய்யுமானால்

நிலைமை ஓரளவு சீர்திருத்தப்படும் என்பதில் சந்தேகமில்லை. ஆயினும், நமது நாட்டு மக்களில் பெரும்பாலோர் ஐரோப்பிய ஏழைகளைவிட மோசமாகவே இருப்பார்கள். நமது நாட்டின் ஏழ்மை தீர்க்க முடியாததல்ல. நமக்கு நாட்டில் எல்லா வசதிகளுமிருந்தும் நாம் வாழ முடியாதவர்களாயிருக்கிறோம். ஏனெனில், அந்தச் சாதனங்களை நாம் சரியாக உபயோகிக்க முடியவில்லை. மனிதர்களின் உழைப்புத் தான் பணம். இந்தியாவின் 40 கோடி மக்களில் 20 கோடி மக்கள் நிச்சயம் நன்கு உழைக்கக் கூடியவர்கள். அவர்களுள் மிகக் கொஞ்சப் பேர்கள் பணக்காரர்களான காரணத்தினால் வேலை செய்வது அவமானம் என்று கருதுகிறாாகள். அது மட்டுமல்ல; அவர்களுடைய உடலைக் கவனித்துக் கொள்வதற்கும், அவர்களுத்குத் தொண்டு செய்வதற்கும் பல மனிதர்கள் தேவையாயிருக்கிறது. அவர்கள் தாங்களும் சோம்பேறிகள்; மற்றவர்களுடைய உழைப்பையும் திருடுபவர்கள். ஆனால் மற்ற வேலை செய்யத் தயாராயிருக்கும் எல்லா மனிதர்களுக்கும் வேலை கிடைக்கிறதா? எந்த ஒரு முதலாளிக் கொள்கை நாட்டிலும் எல்லோருக்கும் வேலை கிடைக்கமாட்டாது. மில் முதலாளிகளுக்கும் ஜமீன்தார்களுக்கும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையில்தான் தொழிலாளர்கள் தேவை. மகாராஜாக்கள், பணக்காரர்களின் தொண்டு வேலை உற்பத்தி வேலையைப் போன்று சிரமமில்லாதது. ஏனெனில், அவர்களின் வேலை மனித வாழ்க்கைக்குத் தேவையான எந்தப் பொருளையும் உற்பத்தி செய்வதல்ல. உழைப்பும் சம்பளமும் ஒன்றை ஒன்று பற்றி நிற்கின்றன. உழைப்பால் உணவு, உடை முதலிய பொருள்கள் உற்பத்தி செய்யப்படும் பொழுது, இவைகள் பணம் என்ற மாற்று உருவத்தில் சம்பளமாகக் கொடுக்கப்படுகின்றன. வாழ்க்கைக்குத் தேவையான பொருள் கள் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படும் பொழுது சம்பளமும் தாராளமாகக் கொடுக்கப்பட வேண்டும். ஆனால் முதலாளிக் கொள்கை எல்லா வேலைகளையும் லாபத்தின் நோக்கோடு செய்விக்கிறது. நாம் ஏற்கனவே விவரித்துள்ளபடி லாபத்தின்

வழியிலேற்பட்டுள்ள அனேக தடைகளால் முதலாளிக் கொள்கை நாட்டில் எல்லோருடைய உழைப்பையும் உபயோகிக்க முடியவில்லை. இதனால் தான் முதலாளிக் கொள்கையில் உழைப்பு வீணாக்கப்பட்டுப் பெரிய அளவில் அழிக்கப்படு கிறது. இங்கு நாம் ஒரு உதாரணம் கொடுக்கிறோம். சென்ற ஜனவரியில் பீகாரில் பயங்கரமான பூகம்பம் ஏற்பட்டது. நகரங்களிலும், கிராமங்களிலும், லக்ஷக்கணக்கான வீடுகளும் போக்குவரத்துக்குப் பாதைகளும், பாலங்களும் அழிந்து போய்விட்டன. அவைகளை மறுபடியும் அமைப்பது ஒர தலைமுறை வேலை என்று கருதப்படுகிறது. இது ஏன்? பீகாரில் கல், செங்கல், சரளைக்கல், மரம் இரும்பு இவைகளுக்குக் குறைவா? அல்லது உழைப்பாளிகளுக்குச் குறைவா? இல்லை. அந்த எல்லையில் மட்டும் ஒரு கோடி மனிதர்கள் இருக் கிறார்கள். அவர்களுள் குறைந்தது 50 லக்ஷம் பேர் வேலை செய்யத் தயாராயிருந்தார்கள். முங்கேருக்குப் பக்கத்தில் எங்கு பார்த்தாலும் மலைகள். மலையடி வாரமும், சாலமரம் நிறைந்த காடுகளும் மிகத் தூரத்திலில்லை. ஜரியாத் தொழிற்சாலையின் நிலக்கரிகள் தேடுவாரற்றுக் கிடக்கின்றன. டாடாவின் இரும்புத் தொழிற்சாலை மிகத் தூரத்திலில்லை. அப்படி இருந்தும், அழிந்துபோன பீகாரைத் திருத்தியமைக்க ஒரு தலைமுறை காலம் வரை காத்திருக்கவேண்டிய அவசியம் என்ன? காரணம், இந்தப் பொருள்களெல்லாம் நாட்டிற்குச் சொந்தமாயில்லாமல் தனிமனிதர்களுக்குச் சொந்தமாயிருப்பது தான். அந்தத் தனி மனிதர்கள், அதாவது முதலாளிகள் தங்களின் லாபத்தைப் பெறாமல் இப்பொருள்களை உபயோகிக்க அனுமதிக்க மாட்டார்கள். உழைப்பின் விலையை அவர்கள் லாபத்தைப் பொறுத்தே நிர்ணயிக்கிறார்கள். முதலாளிகளுக்கு, 50 லக்ஷம் மனிதர்களுக்குக் கொடுக்கக்கூடிய கூலியைவிட அதிகமான லாபம் கிடைக்குமானால், அவர்கள் இந்த உபயோகத்திற்காக முதலைக் கொடுப்பார்கள்.

உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் நாட்டின் செல்வத்தை

வளர்ப்பதற்காகத்தான் என்று அவர்களால் நினைக்கவும் முடியாது. இந்தத் தனிமனித சொத்துரிமை, அதாவது முதலாளிக் கொள்கையின் லாப வரவு செலவால் தான் பீகாரை அமைப் பதற்கு அனேக வருடங்கள் காத்திருக்க வேண்டியிருக்கிறது. இன்று பீகாரில் பொது உடைமைக் கொள்கை ஆட்சி இருக்குமானால் என்ன நடக்கும்? அந்தப் பூமி அதிர்ச்சி ஏற்பட்ட மறுவாரமே, வேலை செய்யத் தகுதி வாய்ந்த அந்த 50 லக்ஷம் மனிதர்களும் திருத்தியமைக்கும் வேலையில் ஈடுபட்டு விடுவார்கள். ஒவ்வொரு மனிதனும் 50 கூடை வீதம் மண்ணெடுத்தானானால், ஒரு நாளில் 20 கோடி கூடை மண் வயலிலிருந்து எடுக்கப்பட்டு, பாதைகளில் நிரப்பப்பட்டு விடும். மழை நின்றதும், இந்த 50 லக்ஷம் மனிதர்களும் மணலால் மூடப்பட்டுள்ள கால்வாய்களை ஒழுங்குப்படுத்தவும், வீடு களையும், மாளிகைகளையும் கட்டவும் ஆரம்பித்தால், அழிந்துபோன பீகாரை முன்னைவிட அழகுடையதாக அமைக்க எவ்வளவு காலம் செல்லும்? வாழ்க்கைக்குத் தேவையான எல்லாப் பொருள்களும் பீகாரில் இருப்பதால், அவைகளை விநியோகிப்பதன் மூலம் இவர்களுடைய கூலிப் பிரச்சனையும், சுலபமாகத் தீர்ந்துவிடும். அதிகமாகப் போனால் ஒரு வருடத்திற்கு உடுக்கும் துணிகள் வெளி மாகாணங்களிலிருந்து வரவேண்டி நேரும். அடுத்த மாகாணங்கள் பொது உடைமைக் கொள்கையுடையதாக இல்லாவிட்டாலும் கூட அதனுடைய சந்தைத் தேவை குறையும். இதனால் பீகார் தானும் முன்னேற்றம் அடைவதோடு, தனக்கு உதவி செய்தவர்களுக்கு உதவி யாயிருக்கிறது.

பொது உடைமைக் கொள்கையின் நோக்கம் எல்லா நாட்டையும், அதாவது உலகத்தையே ஒரே ஐக்கியப்பட்ட குடும்பமாக ஆக்கி, நாட்டின் எல்லாச் சொத்துக்களையும் அந்தக் குடும்பச் சொத்தாக ஆக்கி விடுவதுதான். வாழ்க்கை நடத்துவதற்குத் தேவையான எல்லாப் பொருள்களையும் உற்பத்தி செய்வதற்கு இந்தியாவில் எல்லா வசதிகளும்

இருக்கிறது. இப்போது நமது வேலை வருடாந்தரத் தேவைகளைக் கணக்கெடுத்து அவற்றைத் தயாரிப்பதற்காகச் சமுதாயத்தின் எல்லா மனிதர்களுக்கும் வேலைகளைப் பிரித்துக் கொடுத்து விடுவது. உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களைத் தேவைக்கேற்ப விநியோகிப்பது; எல்லா மனிதர்களுக்கும் உணவு, உடை, நல்ல வீடு, நோய்க்கு மருந்து, குழந்தைகளுக்குக் கல்வி இவற்றிற்கு ஏற்பாடு செய்து விடுவது; அவ்வளவுதான். மற்றவர்களில் உழைப்பைத் திருடுவதன் பெயர் லாபம். அதற்குப் பொதுஉடைமைக் கொள்கையில் இடமே இல்லை.

நாம் மேலே கூறியவைகளால், நமது நாட்டின் கொடி ஏழ்மையைப் பொது உடைமைக் கொள்கையால் தான் போக்க முடியுமென்பது உறுதியாகிறது. அதுதான் நல்ல நல்ல உபயோகத்தோடு மக்களனைவருக்கும் வேலையைக் கொடுக்கக் கூடியதாகும்.

# நமது ஜாதி நோயும் பொது உடைமைக் கொள்கையும்

ஆரியர்கள் வந்த பின்பு, அதாவது 3500 வருடங்களுக்கு முன்னாலேயே, கருப்பன், வெள்ளையன் அல்லது சூத்திரன், ஆரியன் என்ற பிரச்னை இந்தியாவில் தோன்றிவிட்டன. ஆரியர்கள் வெற்றிபெற்ற வகுப்பாராகையால், தங்களுடைய எல்லா விஷயங்களிலும் கர்வம் உடையவர்களாயிருந்தார்கள். ஜெயித்தவன் - ஜெயிக்கப்பட்டவன் என்ற பேதத்தை மறந்து விடுவதற்கு இவர்கள் பொது உடைமைக் கொள்கைக் காரர்களல்ல. அவர்களுடைய உடலின் உருவமும், நிறமும் ஜெயிக்கப்பட்டவர்களினுடையதிலிருந்து வேறுபட்டிருந்தது. கருத்த குட்டையான தட்டைமூக்குள்ள ஆரியரல்லாதவர்களின் கலப்பால், தங்களுடைய வெள்ளை நிறம், நீண்ட மூக்கு, நல்ல

உயரம் இவற்றை இழந்துவிட அவர்கள் விரும்பவில்லை. இந்த உணர்ச்சியானது அனேக சமயங்களில் கொடிய உருவம் பெற்றிருக்கலாம். இதன் காரணமாக அந்த இருள் மயமான தனிமையில் அமெரிக்காவைப் போன்று இந்த நாட்டிலும் 'கொலைத் திருவிழா' நடத்தப்பட்டிருக்கும். இந்த 20ம் நூற்றாண்டில், அந்த அவமானம், வேற்றுமை உணர்ச்சிநிறைந்த படுதாக்களை விலக்குவதற்கு முன்பாக வேலை முடிந்துவிட்ட பின்பும் எத்தனையோ போராட்டங்களுக்கும், கஷ்டங்களுக்கும் தேவையிருக்கும் பொழுது, அந்தக் காலத்திலே நிலைமை எவ்வளவு பயங்கரமானதாயிருக்கும்! இதை அனுமானிப்பது அவ்வளவு கஷ்டமல்ல. ஆரியர்களின் பழைய கிரந்தங்களும், நமக்கு அதைப்பற்றின சில சூசகங்களைத் தருகின்றன. ஆரியர்களுடைய இந்த எல்லாக் கர்வங்களுக்கும் காரணம், அவர்களுடைய வெள்ளை நிறமும், வெற்றி உணர்ச்சியும்தான். சமூக பகிஷ்காரம் எவ்வளவோ கடுமையாயிருந்து, தினசரிப் பழக்கத்தால் ஏற்பட்ட இரத்தக் கலப்பைத் தடுக்க முடியவில்லை; வர்ணாசிரம தருமத்தை, மிகக் கண்டிப்பாகப் பின்பற்றும் தற்காலத் தமிழ்நாட்டுப் பிராமணர்களில் பொரும்பாலோர்களின் நிறத்தைப் பார்த்தால், சிந்து நதிக்கரை ஆரியர்கள் அவர்களைச் சூத்திரர்கள் என்று விலக்கித் தள்ளி விடுவார்கள். இன்றுள்ள ஆரியர்களின் ஜாதிகளில் ஏதேனும் ஒன்றை எடுத்துக் கொண்டால், அவற்றுள் அநேகர் ஆரியரல்லாதவர்களின் உருவமும், நிறமும் பெற்றிருப்பதைக் காணலாம். ஆரியரல்லாத ஜாதிகளிலும் அநேகர் உருவத்திலும் நிறத்திலும் உயர்ந்த ஆரியர்களை ஒத்திருப்பதைக் காணலாம். இவ்விதம் நிறக்கலப்பால் பழைய நிற பேதத்திற்குரிய காரணம் இல்லாமலேயே போய்விட்டது. இன்று அந்நியநாட்டுக்கு அடிமைப் பட்டுப்போன பின்பு பழைய வெற்றிக் கர்வத்தை நினைப்பது சிரிப்புக்கிடமான விஷயம். இவ்வளவான பின்பும், அந்த விரோத உணர்ச்சி முன் போலவே இருக்கிறது.

ஆரியர், ஆரியரல்லாதவர் என்ற வேற்றுமை ஒழிந்து

கொண்டு வந்தாலும், பின்னாலேற்பட்ட ஆயிரக்கணக்கான ஜாதிகளின் அமைப்பால், நிலைமை அதிகமாகக் கெட்டு விட்டது. இந்தத் தனித்தனி ஜாதிகள், இரத்தக் கலப்பின் கூடுதல்-குறைச்சல் அளவாலும், தொழில் முறை பற்றியும் ஏற்பட்டன. அக்காலத்தில், குறைந்த பட்சம் ஆரியர் களுக்குள்ளாவது 'கொள்வினை' 'கொடுப்பினை' நடந்து வந்தது. இதனால் ஜாதிகளின் பிரிவினை அதிகமாகத் தெரியவில்லை. ஆனால் இன்று எல்லா ஜாதிகளும் தனித்தனி உலகமாக ஆகிவிட்டன. மற்ற ஜாதிகளைவிடத் தன் ஜாதியில் தனித்துவம் எதுவும் இல்லாவிட்டாலும், மணம் முதலிய சம்பந்தங்கள் தங்கள் ஜாதிக்குள்ளேயே கட்டுப்படுத்தப்பட்டன. முன்னால் இவ்வளவு ஜாதீய உணர்ச்சி கிடையாது. ஆனால், சென்ற நூற்றாண்டினிறுதியில், ஒவ்வொரு ஜாதியும் தங்களுக்குள் ஐக்கியப்பட்டு மற்ற ஜாதியாரிடமிருந்து தனித்து வாழ்வதற்கு ஆழமான அகழிகளைத் தோண்டிக் கொண்டன. இதன் விளைவால் பொதுஜன வாழ்க்கையில் பெரிய, வெறுக்கத்தக்க வாழ்க்கை நிலை ஏற்பட்டது. மாகாணங்கள் ஜில்லாக்கள் வரை தனித்தனி ஜாதிகளின் கூட்டங்களைக் காணலாம். பிராமணக் கட்சி, அவர்களுக்குள்ளும் எத்தனையோ வகுப்பு, க்ஷத்திரிய, வைசியக் கூட்டம்; அவர்களுக்குள்ளும் எத்தனையோ பிரிவு - இப்படி எங்கு பார்த்தாலும் நினைவில் வகுத்துக் கொள்ள முடியாத அளவு எத்தனையோ ஜாதிப் பிரிவினைகள். இந்த ஜாதிப் பிரிவினையின் விளைவால், தகுதி வாய்ந்த மனிதர்கள், டெபுடிக் கலெக்டர், புரொபசர் போன்ற பெரிய பதவிகளைப் பெற முடியாமற் போகிறது. தகுதியற்றவர்கள், தங்கள் ஜாதியில் பிறந்த பெரிய உத்தியோகஸ்தர்களின் சிபாரிசால் அந்தப் பதவிகளைப் பெற முடிகிறது. அரசாங்க உத்தியோகத்தில் மட்டு மல்ல; இன்னும் அனேக இடங்களிலும், கல்வி ஸ்தாபனங்களி லும் கூட இந்தப் பயங்கரமான நோய் பரவி இருக்கிறது. அங்கு மாணவர்கள் உயர்ந்த வகுப்பில் தேறுவதற்கு ஜாதியும் கவனிக் கப்படுகிறது. வியாபாரம் முதலிய இடங்களில் இந்த

வேற்றுமை சொந்த வீட்டு விஷயம் என்று சொல்லப்பட்டு வருகிறது.

ஜாதியைப் போன்றே மாகாண உணர்ச்சியும் இந்தியாவில் மிகக் கசப்பான உருவத்தைப் பெற்றிருக்கிறது. அங்கும் இந்த அற்பத்தனமான வேற்றுமைகள் காணப்படுகிறது. ஏதாவது ஓரிடத்தில் ஒரு மனிதன் புகுந்துகொண்டு விட்டானானால், தகுதி - தகுதியின்மைக் கவனிக்காமலேயே தனது மாகாண வாசிகளை அங்கு நிரப்ப விரும்புகிறான். ஜாதிச் சகோதரனுக்கப் போலவே, மாகாணச் சகோதரனுக்காகவும் எந்த அக்கிரமமும் செய்யக் கூடாததல்ல. ஒரு சர்வகலாசாலை உபாத்தியாயரைப் பற்றி, அவர் மற்ற மாகாணவாசிகளை அதிக எண்ணிக்கையில் தேர விடுவதில்லை என்று சொல்லப்படுவதுண்டு. அது மட்டுமல்ல; சக்தியில்லாத தனது மாகாணவாசி தேர்ச்சியடைவதற்காக, அவர் வியாசங்கள் எழுதிக் கொடுப்பதுண்டு. இப்படிப்பட்டவர்களை, நீங்கள் நேரில் பார்த்தால் அவர்கள் கெட்டவர் களல்ல, மரியாதைக்குரிய கனவான்கள் என்று தெரிந்து கொள்வீர்கள். அப்படி இருந்தும், அவர்கள் இவ்விதம் செய்ய ஏன் சம்மதிக்கிறார்கள்? நாட்டின் இந்த வெறுக்கத்தக்க பிரிவினைதான் காரணம்.

கௌன்சில், ஜில்லா போர்டு, முன்சிபாலிட்டி இவைகளின் தேர்தல் சமயத்தில், இந்த ஜாதி-மாகாணம் முதலிய வேற்றுமை உணர்ச்சி நாற்றம் அதிகமாகப் பரவுவதைக் காணலாம். மத சம்பந்தமான தீங்குகளைப் பற்றிப் பின்னால் சொல்லுவோம். ஆனால் இந்த ஜாதிமாகாண வேற்றுமை உணர்ச்சி, மத வேற்றும்மையைவிட அதிகக் கெடுபிடியானது. இதைத் தீர்ப்பதற்குப் பொது உடைமைக் கொள்கையைத் தவிர்த்து, வேறு மருந்து கிடையாது. பொருளாதார லாபமும், செல்வாக்கும் பெற எல்லோரும் விரும்புகிறார்கள். அந்த விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக எந்த வேலையைச் செய்வதற்கும் மனிதர்கள் தயாராகியிருக்கிறார்கள். மணம் முதலிய

சம்பந்தங்களின் தொடர்பால் ஜாதி உணர்ச்சியை வலுப்படுத்திக் கொள்வது, அவர்கள் ஆசைகள் நிறைவேறுவதற்கு உதவியாயிருக்கிறது. அதை உபயோகித்து ஒவ்வொருவரும் லாபமடைய விரும்புகிறார்கள். இவ்வித லாப ஆசையில் பெரிய பெரிய லட்சியவாதிகளும் வழுக்கி விழுந்து விடுகிறார்கள். ஒவ்வொரு சிந்தனா சக்தியுள்ள இந்தியனும் நமது நாட்டின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணம். நமது சமுதாயத்தை ஆயிரம் துண்டுகளாகப் பிரித்து வைக்கும் ஜாதி வேற்றுமைதான் என்பதைச் சுலபமாக உணர்ந்து கொள்ள முடியும். இந்தியச் சரித்திரத்தின் எந்த ஒரு அரசியல் சம்பவத்தை எடுத்துக் கொண்டாலும், அதன் அடிப்படையில் ஜாதி வேற்றுமை காரணமாயிருப்பதைக் காணலாம். பொது உடைமைக் கொள்கைக்காரர்களல்லாத அரசியல்வாதிகளும் இந்த நோயின் கொடுமையை நன்கு உணர்கிறார்கள். இந்த நோயிலிருந்து விடுதலையடையாதவரை நாம் சுதந்திரமாக மூச்சுவிட முடியாது என்று அவர்களுக்கு நன்கு தெரியும். இதனால்தான் அவர்கள் தீண்டாமை விலக்குப் போன்ற ஜாதீயக் கொள்கைகளில் ஆவேசம் கொள்கிறார்கள்.

பொது உடைமைக் கொள்கையைக் கிட்டவும் நெருங்க விடாத இந்தப் போராட்டம், நாட்டை ஒற்றுமைப் படுத்துவதில் வெற்றி பெற முடியுமா? இல்லை, ஒரு நாளும் முடியாது. ஏனெனில் இந்த ஜாதி-மாகாண வேற்றுமைகள் வெறும் சமூக வேற்றுமைகள் மாத்திரமல்ல; அதோடு கூடப் பொருளாதார வேற்றுமையும் இணைக்கப்பட்டிருக்கிறது. உயர்ந்த ஜாதியின் அறிவாளிகள் தாழ்த்தப்பட்டவர்களின் முன்னேற்றத்திற்காக ஏன் இவ்வளவு ஆத்திரம் அடைகிறார்கள்? தற்போது கல்விப் பிரசாரமும், அந்நிய நாட்டார்கள் தொடர்பும், தாழ்த்தப்பட்ட மக்களிடையே சுயமரியாதை உணர்ச்சியைக் கொண்டு வந்து விட்டதென்பதையும், அவர்கள் தலைமுறை தலைமுறையாக அநுபவித்து வந்த இந்த அவமானத்தை இனியும் சகிக்க மாட்டார்களென்பதையும் நன்கு உணர்ந்திருப்பதால் தான்.

ஆனால் உயர் ஜாதி மக்களின் கோயில்களையும், குளம் - கிணறுகளையும் திறந்து விடுவதால் மட்டும் அவர்களின் துன்பமும், வேற்றுமை உணர்ச்சியும் அழிந்து விடுமா? இல்லை. தாழ்த்தப்பட்டவர்களுக்கு அவர்களுடைய வாழ்க்கையை நடத்துவதற்குள்ள தடைகளைப் போக்குவது, கோவில்களையும் குளங்களையும் திறந்து விடுவதைப் போல அவ்வளவு சுலபமல்ல. ஒரு சக்கிலியன் துணிக்கடை வைத்தால் ''இன்சால்வென்ட்'' ஆகாமல் தப்ப முடியுமா? ஒரு தாழ்த்தப்பட்டவன் பழம் அல்லது மிட்டாய்க் கடை ஒன்றைத் திறந்தால் அவன் கதி என்ன ஆகும்? பள்ளிக்கூடங்களில் எத்தனை தீண்டத்தக்காத உபாத்தியாயர்கள் மக்களால் துன்புறுத்தி அனுப்பப்பட்டிருக்கிறார்கள்? டார்ஜிலிங் ஜில்லாவில் தீண்டத்தகாத ஜாதி டாக்டர் ஒருவர், உயர் ஜாதி மக்கள், அவருடைய கையில் மருந்து வாங்கிச் சாப்பிட மறுத்ததின் காரணமாக தனது வேலையை விட்டுவிட நேர்ந்தது. தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்க்கை வழியில் உள்ள தடைகளே உயர்ஜாதி மக்களின் லாபத்திற்குச் சாதனம். ஆகையால் அதை அவர்கள் எப்படிச் சுலபமாக விட்டுவிட முடியும்? தாழ்த்தப் பட்டவர்கள் கோவில், சாஸ்திரம் இவற்றின் பகிஷ்காரத்தி லிருந்து விடுதலை பெறலாம், ஆனால் அவர்களைப் பிடிப் பதற்கு அந்தப் பொருளாதார வலை வீசப் பட்டிருக்கிறதே?

மேலே கூறப்பட்டவற்றால், இந்த ஜாதி வேற்றுமைகள் பொருளாதார வாழ்க்கையில் அதிக முக்கியம் பெற்றி ருக்கிறதென்பது தெளிவாகிறது. ஒடுக்கப்பட்ட மக்கள், பொருளாதாரத் துறைகளிலும் பலமாக அடக்கி வைக்கப் பட்டிருக்கிறார்கள். முதலாளிக்கொள்கையின்படி, ஒவ்வொரு மனிதனும் தனது சொத்துக்கு எஜமானன். அவன் விரும்புகிறபடி அதை உபயோகிக்க முடியும். ஆகையால் தனது தீண்டத்தகாத சகோதரர்கள் முன்னேறுவதற்காகச் சந்தர்ப்பம் கொடுக்கும்படி அவனை எப்படிக் கட்டாயப்படுத்த முடியம்? இந்த ஜாதி நோய்க்கு மருந்து நமக்கு பொது உடைமைக் கொள்கையில்தான்

கிடைக்கும். ஏனெனில், அதுதான் தனி மனிதர்களின் பொருளாதார லாப வேரையே வெட்டுகிறது. குறிப்பிடத்தக்க பொருளாதார லாபமில்லாவிட்டால், எந்த மனிதனும் வெட்கமற்றுக் கெட்ட செய்கையைச் செய்யமாட்டான். வேலைகள் தகுதியைப் பொறுத்துக் கிடைக்கும்பொழுது சிபாரிசின் ஆதாரம் எத்தனை நாட்கள் நிலைத்திருக்க முடியும்? ஜாதீயக் கட்டுப்பாட்டையும், பழக்கத்தையும் முக்கியமாக ஆதரிப்பவர்கள் யார்? யாரிடம் பணமிருக்கிறதோ அவர்கள் தான் அவர்கள் பணத்தின் பலத்தால் மற்றவர்களின் அபிப்பிராயத்தின் மீது தங்கள் செல்வாக்கை உபயோகிக்கிறார்கள். பொது உடைமைக் கொள்கை அவர்களின் கையில் பணமிருக்க அனுமதிக்காது. பின்பு பிரபுக்கள், பணக்காரர்களின் செல்வாக்கு, அவர்களின் திறமை, தகுதியைப் பொறுத்தே கூடுதல் - குறைதலாகிவிடும். ஜாதி உறவும் கட்டுப்பாடும் அதிகப்படுவதற் குக் கல்வி, புத்தி, நேர்மை அவைகள் யாவும் பணத்தை விட முக்கியமானதல்ல என்பது எல்லோருக்கும் தெரியும். ஜாதீய்வாதிகள் கையிலிருந்து இந்தப் பணத்தைப் பிடுங்கி விடுவதென்பதற்கு அர்த்தம், அவர்களின் செல்வாக்கை அழித்துவிடுவது என்பதுதான். அதன்பின் புத்தி, கல்வி, அறிவு இவைகள் வேற்றுமையின்றி முக்கியத்துவம் பெற்றுவிடும். சிறிய சிறிய ஜாதிகள் ஒழிந்து, நாடு முழுவதும் ஒரே சமுதாயமாக அமைந்துவிடும். அப்பொழுது சம உணர்ச்சியும், சம அறிவும் படைத்த ஒரு பிராமணப் பெண்ணும், பிராமணரல்லாத வாலிபனும் - மணம் செய்து கொள்வதில் எவ்விதத் தடையுமிருக்காது. சம அறிவில்லாத ஒரு பிராமண வாலிபனும் ஒரு பிராமணப் பெண்ணும் மணம் செய்து கொள்ளும்படி யாரும் காட்டாயப்படுத்தவும் முடியாது. ஆழ்ந்து கவனித்தால், இந்த ஜாதீய வேற்றுமை உணர்ச்சியை உறுதிப்படுத்த விரும்புகிறவர்கள், அதை உபயோகித்துப் பொருளாதார லாபம் பெற விரும்பும் சுயநலவாதிகளென்பது நன்கு தெரியும். ஒரு முறை அவர்களுடைய பொருளாதாரச்

சுயநலத்தைத் தடுத்து விடுங்கள்; பின்பு இந்தப் பெரிய ஜ. நீய மாளிகை வீழ்ச்சியடைய நேரஞ் செல்லாது. மற்ற சீர்திருத்த முயற்சிகளெல்லாம், நோயின் வேரை வெட்டாது நுனியைக் கசக்குவது போலத்தான். அவைகள் எவ்வளவு அதிக காலம் வேலை செய்தாலும், அடிப்பாகம் வரை சென்று இந்த நீண்டநாள் செல்வாக்கை அழிக்க முடியாது.

# நல்ல குழந்தைகளும் பொது உடைமைக் கொள்கையும்

நமது நாகரிக அரசாங்கங்கள் தனது நாட்டு மக்களின் தேகாரோக்கியத்தில் கவனம் செலுத்துகின்றன. அவைகள் இதற்காக ஆயிரக்கணக்கான டாக்டர்களை நியமித்திருக் கிருக்கின்றன. இதே நோக்கோடுதான் நகரங்களின் முனி சிபாலிட்டிகள் சாக்கடை சுத்தம் செய்தல் முதலிய வேலைகளைச் செய்து வருகின்றன. உண்மையில் தெருச் சுத்தம், மின்சாரம், தண்ணீர் முதலியவற்றுக்கு ஏற்பாடு செய்யும் முனிசிபாலிட்டி களின் வேலை, பூர்த்தியடையாத ஒருவகைப் பொது உடைமைக் கொள்கைதான். காண்ட்ராக்டரிடம் காண்ட்ராக்ட் கொடுத்தபின் இந்த வேலையும் லாபத்திற்குரிய வியாபாரமாக, ஆகிவிடுகிறது. பொது உடைமைக் கொள்கை, வேலைகளை அழகாகவும், ஒழுங்குடனும் நடத்தி வைக்க முடியாதென்று சொல்கிறார்கள். லண்டன், பாரிஸ் போன்ற நகரங்களில் பெரிய முனிசிபாலிட்டி களின் வேலைகளே இவர்களுக்குச் சரியான பதில். தெரு, தண்ணீர், மின்சாரம் முதலியன ஏறக்குறைய நாட்டின் சொத்தாகவே மதிக்கப்படுகிறது. வைத்தியம், சுத்தம் செய்தல் முதலியவற்றிற்காக இவ்வளவு பெரும் பணம் செலவிடப்படு வதன் நோக்கம், மனிதர்கள் கொடிய நோய்களிலிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டும்; சுகத்தோடு இருக்க வேண்டு மென்பதுதான். ஆனால் நோய்களில் மிக ஆபத்தானது,

பரம்பரையாக வரும் நோய்தான். இதைத் தொலைப்பதற்கு வழி, மேலான உயர்ந்த குழந்தைகளைப் பெறுவதுதான். குஷ்டம் போன்ற வெறுக்கத்தக்க நோய்களை எடுத்துக் கொள்வோம். அது ஒரு மனிதனுக்கு மட்டும் ஆபத்தானதல்ல, வருங்காலப் பரம்பரைகளுக்கும் பரவிக் கொண்டே போகக்கூடியது. அது ஒரு மனிதனை மக்களின் பார்வையில் வெறுக்கத்தக்கவனாக்கி, அவனைக் கரைத்துக் கரைத்துக் கொல்லுகிறது. அது மட்டுமல்ல; ஆரம்ப காலத்தில் அது தனது பக்கத்திலிருக்கும் மக்களிடையே லக்ஷக்கணக்கான கிருமிகளைப் பரவச் செய்து, அனேகரை நோயாளியாகச் செய்கிறது. இவ்விதக் குஷ்ட நோயாளனுக்குப் பிறக்கும் குழந்தைகள் அனேகமாக அந்த நோய்க்கு இரையாகியே இருக்கும். ஏதேனும் காரணம் பற்றி அடுத்த தலைமுறையில் காணப்படாமலிருந்தாலும், 3-வது தலை முறையில் அது காணப்படும். குஷ்ட சம்பந்தமான புத்தகங்களை நீங்கள் நிச்சயம் படித்தால், உலகத்தில் அந்த நோய் குறை வதற்குப் பதிலாக அதிகப்பட்டுக்கொண்டே வருகிறதென்பது தெரியவரும். இந்தியாவில் பாங்குடா ஜில்லா போன்ற இடங்களில் இதன் வளர்ச்சி மிக அதிகமாக இருக்கிறது. சாம்பரான் ஜில்லாவில் ஒரு கிராமத்தில் முதலில் 6ல் ஒரு பகுதி மக்கள் குஷ்ட நோயாளிகளாய் இருந்தார்கள். பின்னால் அது வளர்ந்து வளர்ந்து அந்தக் கிராமமே குஷ்ட நோயாளர்களால் நிறைந்துவிட்டது.

குஷ்ட நோயைத் தடுப்பதற்கு வழி கண்டுபிடிக்க எத்த னையோ வருடங்களாகப் பெரிய பெரிய டாக்டர்கள் முயற்சி செய்து கொண்டு வருகிறார்கள். மனித சமுதாயத்தை இந்த அரக்கனுடைய பிடியிலிருந்து விடுவிப்பதற்கு வழி கண்டு பிடிக்கப்பட்டாலும், அதைச் சரியாகப் பிரயோகிக்க முடியாது. ஏனெனில் முதலாளிக் கொள்கை சொல்லளவில் அராஜகத் திற்கும் ஒழுங்கின்மைக்கும்தான் விரோதி என்று சொல்லிக் கொள்கிறது. ஆனால் தனி மனித சொத்துரிமையும், அதன் தீய உபயோகமும் உண்மையில் ஒழுங்கின்மையை வளர்ப்பவைகள்.

குறைந்த பக்ஷம் நாட்டின் நோக்கோடு பார்த்தால் குஷ்டம் தீர்க்க முடியாத நோயல்ல. குஷ்ட நோயாளிகளைத் தனி இடத்தில் குடியிருக்கச் செய்து, அவர்கள் குழந்தைகள் பெறும் உரிமையையும் பறித்துவிட்டால், அது பக்கத்து மக்களிடையே பரவவும் முடியாது; வருங்காலச் சந்ததிகளைப் பீடிக்கவும் முடியாது. ஆனால் இந்த வேலையைப் பொது உடைமைக் கொள்கைதான் திறமையோடு செய்யமுடியும். அதை இப்பொழுது நாம் விளக்குவோம்: காரணம் தேடிப் பார்த்தால் இந்த நோய்க்குப் பரம்பரைக் காரணத்தைவிடப் பெரிய காரணம் விபசாரம் என்று தெரியவரும். தனி மனிதனிட மிருந்து சொத்துரிமை பிடுங்கப்பட்டுவிட்டால் இந்த விபசார நிலையங்கள் இருக்க முடியுமா? ஒரு மனிதன் பகிரங்கமாகவோ, மறைமுகமாகவோ விபசார விடுதிக்குச் செல்வதற்கு அவனிடம் போதுமான பணம் வேண்டும். ஒரு வேசை விபசாரம் செய் வதற்குக் காம உணர்ச்சியைவிடப் பணத் தேவையின் தூண்டு தல்தான் காரணம். இந்தப் பணத் தேவையின் நிலைமையால் அனேக ஆண்களின் சதை உணர்ச்சியைப் பூர்த்தி செய்யக் கட்டாயப்படுத்தப் படுகிறாள். இதனால் வெண்குஷ்டம், வெட்டை போன்ற அருவருப்பான நோய்களின் பிறப்பிடமாக ஆகிவிடுகிறாள். பொது உடைமைக் கொள்கையில் தனி மனித சொத்துரிமைக்கும், அதைத் தீய வழியில் உபயோகிப்பதற்கும் இடமே கிடையாது. ஆகையால் அது விபசாரவிடுதிகளையும், அதன் மூலம் பரவும் குஷ்டம் போன்ற நோய்களையும் போக்குவதற்குச் சிறந்த மருந்தாக இருக்கிறது.

மதவாதிகளும் விபசாரத்தை எதிர்க்கிறார்கள். ஆயினும் அவர்களின் எதிர்ப்பு வெறும் பூசி மெழுகுதல்தான். அவர்களின் எத்தனையோ பூஜை இடங்களுக்கு வேசைகள் அவசியம் என்று கருதப்படுகிறது. அவர்களின் சொர்க்கம் வேசைகளில்லாமல் அலங்கரிக்கப்படவே முடியாதது. அப்சரஸ்கள், தேவதாசிகள் இவர்களின் அவசியத்தை வற்புறுத்துகிறவர்கள், விபசாரத்தை எப்படிப் போக்க முடியும்? நாட்டிற்கு மிகுந்த தீமையைக்

கொடுக்கும் இந்த வெறுக்கத்தக்க தொழிலை வளர்ப்பது முதலாளிக்கொள்கையும், தனி மனித சொத்துரிமையும்தான். நமது நாட்டுப் பணக்காரர்கள், மகாராஜாக்களின் பக்கம் உங்கள் பார்வையைக் கொஞ்சம் செலுத்தினால் இதன் உண்மை தெரியும். அவர்களுக்கு உணவு, உடை போன்று வேசைகளும் வாழ்க்கைக்கு இன்றியமையாதவர்களாகிவிட்டனர். மகாராஜாக் களின் தர்பாரிலிருந்து வேசைகளுக்கு ஒழுங்கோடு சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறது. மற்ற அரசாங்க ஊழியர்களின் சம்பளம் 6 மாதம் வரை பாக்கி இருந்தாலும், இந்தத் தர்பார் வேசைகளின் சம்பளத்தில் ஒருமாதம் கூடத் தவக்கம் ஏற்படக் கூடாது. இந்தத் தர்பாரிலிருந்து கொடுக்கப்படும் சம்பளம், நேராகக் குஷ்டம், வெட்டை போன்ற நோய்களை வளர்ப் பதற்குப் போய்ச் சேருகிறது.

மனித சமுதாயத்தை உருவழிந்து போகச் செய்யும் இந்தக் கொடிய குஷ்ட நோயின் பிரச்சினையைப் பொது உடைமைக் கொள்கைதான் தீர்க்க முடியும் என்பது தெளிவாகிறது. பணத்தை உபயோகிப்பதற்கும், தடங்கலில்லாமல் குழந்தைகளைப் பெறுவதற்கும், தனி மனிதர்களுக்குத் தடையற்ற உரிமை இருப்பதுதான் சமுதாயத்தில் வெறுக்கத்தக்க கொடிய நோய்கள் பரவுவதற்குக் காரணம். முதலாளிக் கொள்கை அரசாங்கங்கள் இவ்வித நோய்களைத் தடுத்து நிறுத்தச் சட்டங்கள் செய்தாலும், அவைகளை ஏழை மக்களின் மீதுதான் பிரேயாகிக்க முடியும். பணக்காரன் தனது பணத்தின் பலத்தினால் குறிப்பிட்ட காலம் வரை தப்பித்துக்கொள்ளுவான்; அல்லது சட்டத்தின் பிடி யிலேயே அகப்படமாட்டான். குஷ்ட நோய் ஆரம்ப நிலையில் தான் கொடிய புழுக்களைப் பரப்புகிறது. ஆனால் அந்தச் சமயத்தில் நோய் வெளிப்படையாகத் தெரியாமலும், அதிகப் புண் இல்லாமலுமிருப்பதால், பணக்கார நோயாளி தன்னைச் சட்டத்தின் பிடியிலிருந்து காப்பாற்றிக் கொள்வது சுலபமாக இருக்கிறது. சில சமயங்களில் அவன் கடைசிவரை கூட்டம், சபை முதலியவற்றில் கலந்து கொள்ள முடிகிறது. இவ்வித

மனிதன் நமது வெறுப்பிற்கு மட்டும் பாத்திரமானவன் என்று நாம் கூறவில்லை. அவன் நமது அநுதாபத்திற்குப் பாத்திர மானவன். அதுமட்டுமல்ல; அவனுடைய வேதனையும் அவநம்பிக்கையும் நிறைந்த வாழ்க்கையை எவ்வளவு தூரம் முடியுமோ அவ்வளவு தூரம் மகிழ்ச்சியுடையதாகச் செய்ய வேண்டுவது சமுதாயத்தின் கடமை. ஆனால், அவன் தன்னைப் போல் ஆயிரக்கணக்கானவர்களை உற்பத்தி செய்வதற்குச் சந்தர்ப்பம் கொடுப்பது, நாம் அவனிடம் உண்மையான அநுதாபம் காட்டுவதாகாது.

குஷ்டத்தைவிட உலகத்தில் இன்னும் அனேகக் கொடிய நோய்களிருக்கின்றன. அவற்றைப் போக்குவதற்கு வழிகள் இன்னும் சரியானபடி கண்டுபிடிக்கப்படவில்லை. ஆயினும் கர்ப்பத்தடை, தனிப்படுத்தி வைத்தல் இவைகளின் மூலமாக வளர்ச்சியை முற்றிலும் தடுக்க முடியும். க்ஷயம், காசம் முதலிய நோய்கள் வீட்டில் ஒருவருக்கு ஏற்பட்டுவிட்டால், அது அந்த வீடு முழுவதையும் காலியாக்கி விடுகிறது. அதுவும் தொடர்பாலும், குழந்தைகள் மூலமும் பரவக் கூடியது. இந்தத் தற்கால முறையில் இவைகளையெல்லாம் பார்த்துக் கொண்டும், கேட்டுக் கொண்டும் நாம் ஒன்றும் செய்ய முடியாத நிலை யிலிருக்கிறோம். ஏனெனில், நமக்கு எந்த நிலையிலும் தனி மனித சுதந்திரம் மிகப் புனிதமானது. ஒரு வீட்டில் நெருப்புப் பிடித்தால் கிராமம் முழுவதும் நாசமாகி விடும். ஆயினும், நமது பக்கத்து வீட்டுகாரன் தனது வீட்டைக் கொளுத்துவதைத் தடுக்க முடியாது.

உடல் மாற்றங்களைவிட, மனோ நிலைமைகள் அதிகமாகத் தாய் தந்தையிடமிருந்துதான் வருகிறதென்பது டாக்டர்களின் அபிப்பிராயம். பொருளாதாரக் கஷ்டமும், பரம்பரை நோய்த் தொடர்பும் விலக்கப்பட்டுவிட்டால் நமது சிறைசாலைகள் யாவும் காலியாகிவிடும். குற்றவாளிகளில் 100க்குத் 90 பேர் பொருளாதாரக் கட்டாயத்தால் தான் கொலை, களவு செய்

கிறார்கள். பாக்கி 10 பேரில் அநேகமாக எல்லோரும் மனோபலவீனத்தாலும், சில வினாடி தோன்றும் ஆத்திரத்தாலும் குற்றம் செய்கிறார்கள். இந்த இரண்டு தன்மைகளும் ஏறக்குறைய தாய் தந்தையிட மிருந்தே கிடைக்கின்றன. தற்போது இங்கிலாந்து போன்ற நாட்டு அரசாங்கங்கள், இவ்வித மனிதர்கள் குழந்தைகள் பெறுவதைத் தடுத்துச் சட்டங்கள் செய்ய முயற்சிக்கின்றன. ஆனால் இந்தச் சட்டங்களைப் பணக் காரர்களிடையே பிரயோகிக்க முடியுமென்று நினைக்கிறீர்களா? மனோசம்பந்தமான நோய்கள், பணக்கார சமூகத்தையே அதிகமாகப் பீடிக்கிறது.

மிருகங்களுக்கு நல்ல சந்தானங்களை உற்பத்தி செய் வதற்காகச் சென்ற நூற்றாண்டில் அதிக முயற்சி செய்யப்பட்டது. உடல் நலனும், பலமுமுடைய ஜோடிகளைத் தேர்ந்தெடுத்து விஞ்ஞானிகள் நல்ல பசு, குதிரை முதலிய மிருகங்களை உற்பத்தி செய்வதில் வெற்றி பெற்றார்கள். அவர்களுடைய இந்த வெற்றி, கன்றுகள் பிறப்பதற்கு முன்னேயே அவைகளின் நிறம், உருவம் முதலியவைகளைப் பற்றி உறுதியோடு சொல்லக்கூடிய நிலைமையை அடைந்துவிட்டது. ஆனால் இந்தக் கடந்த நூற்றாண்டில் மனித சமுதாயத்தின் நிலைமை என்ன? அவர் களுடைய உடல் மனோநிலைகள் நாளுக்கு நாள் வீழ்ச்சி யடைந்து கொண்டே போயிற்று. நீங்கள் சுகாதார அறிக்கையையும், குற்ற அறிக்கையையும் படித்தால் இது தெளிவாகத் தெரியும். இதற்காகச் சில வைத்தியசாலைகளையும், சிறைச்சாலைகளையும் அதிகப்படுத்தியதைத் தவிர வேறு என்ன செய்தார்கள்? இதனால் நோயின் உண்மையான காரணம் கொஞ்சமாவது போக்கப்படுமா? மனித சமுதாயத்திற்கு மிக முக்கியமான தேவை - உயர்ந்த குழந்தைகளைப் பெறுவதுதான். அதற்கு எவ்விதத் தடையுமில்லாத வசதிகள் வேண்டும். ஆனால் இன்றைய சமுதாயத்தின் தலைவர்களான முதலாளிகளும், அவர்களால் விலைக்கு வாங்கப்பட்ட மதக் குத்தகைக் காரர்களும் இதைப்பற்றிச் சுதந்திரமாகச் சிந்திப்பதற்கேனும்

அனுமதிப்பார்களா? அவர்கள் ''இவையெல்லாம் கடவுளின் வேலைகள். ஆண், பெண்களின் தொடர்பு மதத்தின் ஓர் அங்கம். அதில் தலையிட யாருக்கும் உரிமையில்லை. மனிதர்கள் குழந்தைகளைப் பெறுவதற்காகத் தகுதி பார்த்து இணைப்பதற்கு மிருகங்களல்ல. ஆண் பெண்களின் புனிதமான தொடர்பை இவ்விதம் வெட்டிவிடுவதால் உலகில் வெட்கம், மரியாதை எதுவுமில்லாமல் போய்விடும்'' என்று சொல்லிவிடுவார்கள். அப்படிச் சொல்வதோடு சும்மா இருப்பார்களா? இல்லை. தங்கள் முழுச் சக்தியையும் உபயோகித்து எதிர்ப்பார்கள். அவர்களுடைய இந்தக் குருட்டு நடத்தையால், நிலைமையின் பயங்கரம் கொஞ்சமேனும் குறையுமா? அது நாளுக்கு நாள் அதிகப்பட்டுக்கொண்டே போகும். இதைப் போக்குவதற்கு மனித சமுதாயம், தானே கச்சை கட்டிக் கொண்டு தயாராகாதவரை, அது பெருகிக்கொண்டே போகும். ஆண் பெண் தொடர்பில் இரண்டு விஷயங்களிருக்கின்றன. ஒன்று, சதை உணர்ச்சி. மற்றொன்று, குழந்தை உற்பத்தி. முதலாவது விஷயத்தை உங்கள் விருப்பம்போல் சொந்த விஷயம் என்று வைத்துக் கொள்ளுங்கள். ஆனால் இரண்டாவது விஷயம் மனித சமுதாயத்தின் நிகழ்கால வருங்காலத்தில் தொடர்புடையவை. அதைச் சொந்த விஷயமாகக் கருத முடியாது. திருட்டு, கொலை முதலியவை ஒரு மனிதனின் சொந்த விருப்பப்படி அனுமதிக்க முடியாதது போல், குழந்தை உற்பத்தியும் தனிமனிதனின் சொந்த விருப்பத்திற்கு விடக்கூடியதல்ல. தற்காலத்தில் விஞ்ஞானம், குழந்தை உற்பத்தி இல்லாமலேயே சதை உணர்ச்சியை நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய வழியைக் கண்டு பிடித் திருக்கிறது. உடல், மனம் பலவீனமுள்ள குழந்தைகளை உற்பத்தி செய்யக்கூடிய மனிதன், குழந்தை பெறும் உரிமைக்காகப் பிடிவாதம் பிடிக்க என்ன உரிமை இருக்கிறது? அந்தப் பிடிவாதத்தைச் சமுதாயம் ஏன் ஒப்புக் கொள்ள வேண்டும்? அந்தப் பிடிவாதத்தின் காரணத்தை ஆராய்ந்து பார்த்தால் தாய் தந்தையர்களின் கருத்து, நோய், கிழப்பருவத்தில்

உதவி பெறுவதற்காகவும், தங்களின் சொத்துக்கு வாரிசாக விட்டுச் செல்வதற்காகவுமே என்பது தெரியவரும். பொது உடைமைக் கொள்கையில், கிழப்பருவத்திலும் நோய் காலத்திலும் மனிதர்களைப் பராமரிக்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறது. தனிமனித சொத்துரிமைக்கு அங்கு இடமே இல்லை. ஆகையால் குழந்தை உற்பத்தியை துர்விநியோகம் செய்வதற்குரிய இந்த இரண்டு காரணங்களும் பொது உடைமைக் கொள்கை நாட்டில் ஏற்படமாட்டாது.

# பொதுஉடைமைக் கொள்கையும் கடவுள்-மதமும்

மதத்தின் உண்மையான உருவம் யாது? மனித ஜாதியின் குழந்தைப் பருவ மனோ பலவீனமும், அதனால் தோன்றிய மூட நம்பிக்கைகளும் சேர்ந்ததுதான் மதம். மதத்தில் இதைவிட வேறேதேனும் இருக்கிறதென்றால், அது புரோகிதர்களும், அதிகாரிகளும் ஆடுகள் தங்கள் 'கிடையை' விட்டு வெளியே போகாமலிருப்பதற்காகச் செய்யும் ஏமாற்று வஞ்சனைகள்தான். மனிதர்களின் மனோ வளர்ச்சியோடு கூடவே மதமும் எத்தனையோ அம்சத்தில் மாற்றம் அடைந்திருக்கிறது. பெயரில் எத்தனையோ மாற்றம் பெற்றிருக்கிறது. ஆயினும், அந்த மாற்றத்தால் அதன் உள் உருவத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. அது 5000 வருடங்களுக்கு முன் போலவே இன்றும் ஆயிரக்கணக்கான மூட நம்பிக்கைகளையும் மனிதர்களின் மனோ அடிமைத்தனத்தையும் ஆதரிக்கிறது. மூலம் பழையது தான்; உறை மட்டுந்தான் மாற்றப்பட்டிருக்கிறது. நமது படித்த சகோதரர்கள் பிசாசு, பூதம், மந்திரம், தந்திரம் இவைகளைக் கண்டு முகத்தைச் சுழித்துக் கொள்கிறார்கள். ஆனால் அதே விஷயத்தைப் புதிய உருவத்தில் 'தியாசபி'

போன்ற சுவாராஸ்யமான சொற்களில் விஞ்ஞானத்தோடு கலந்து கொடுத்தால், பெரிய பெரிய அறிவாளிகளும் தங்கள் அறிவை விற்றுவிடத் தயாராகிவிடுகிறார்கள். நீங்கள் மதத்தின் சரித்திரத்தையும், அதன் இறந்தகால, நிகழ்காலத் தலைவர்களின் வாழ்க்கை விவரங்களையும் கவனத்தோடு படித்தீர்களானால், மதத்தில் முதல் தரமான பக்கா அயோக்கியவர்களும் பைத்தியங் களும்தான் நிறைந்திருப்பதைக் காண்பீர்கள். இந்தியாவில், உள்வாழ்க்கையைக் கவனித்துப் பார்த்தால் ''ராஸ்புட்டி''னின் சிறிய பெரிய அம்சம் என்று கருதக்கூடிய அனேக ''சித்த புருஷர்கள்- மகாத்மாக்கள்'' இருந்திருக்கிறார்கள். ஒரு புனித நகரத்தில் கொஞ்சகாலத்திற்கு முன்பு ஒரு ''மகாத்மா'' இருந்தார். அவர் உயிரோடிருக்கும் பொழுதே அவரை ''ஜீவன் முக்தர்'' என்று மக்கள் வணங்கினார்கள். உண்மை வெளியான பொழுது அவ்விடத்து விஷயம் தெரிந்த மக்கள், அவருடைய வைப்பு ஸ்திரீயின் இரண்டு புத்திரர்களைக் காட்டி, ''மகாத்மாவுக்குச் செலுத்தப்பட்ட காணிக்கைகளெல்லாம் இவர்களைப் பணக் காரர்களாக்குவதற்கே'' என்று கூறினார்கள். மற்றொரு புண்ணிய நகரில் ஒரு சித்த புருஷர் இருந்தார். அவருடைய பக்தர்கள் அவரைக் கடவுளின் அவதாரம் என்றே நினைத்தார்கள். வெளி ஊர்களிலிருந்து அநேக பக்தர்கள் அவருடைய நடை உடை பாவனைகளைக் கண்டு புளகிதமடைந்து வந்து வணங்கத் துவங்கினார்கள். இவருடைய உள்வாழ்க்கை எப்படி இருந்தது? அவர் ஒரு வேலைக்காரியோடு தவறான தொடர்பு வைத்திருந்தமை கண்டு மக்களால் அடித்துத் துரத்தப்படும் நிலைமையை அடைந்தார். தனிமனிதர்களின் அனுபவத்தில் இந்த மாதிரி உதாரணங்கள் அனேகம் கிடைக்கும். இவ்வித உதாரணங்களைக் கண்டு மனிதனின் புத்தியின் மீது இரக்க முண்டாகிறது. அந்தத் தூர்த்தர்களுக்காக அல்ல; அவர்களின் மதம், வஞ்சனையால் உலகத்தை ஏமாற்றித் தண்டச்சோறு தின்பதுதான். யாரேனும் ஒருவர் அந்த ஏமாற்று வேலையில் அதிக வெற்றி பெற்றிருந்தால், அதற்குக் காரணம்

''ஹிப்னாடிசம்'' முதலிய சில மனோசக்திகள் தான். அதன் பலத்தைக் கொண்டு அவனும், அவனைப் பின்பற்றுகிறவர்களும் ஆயிரக்கணக்கான பொய்ப் பிரசாரங்களைச் செய்கிறார்கள். அதன் உண்மையான காரணத்தை அறிஞர்கள் பரிசோதித்துக் கண்டு பிடிக்கவும் முடியாதபடி முடிந்தவரை தடுக்கிறார்கள்.

மதத்திற்கும் கடவுளுக்கும் பிரிக்க முடியாத சம்பந்த மிருக்கிறது. கடவுளில்லாத மதம் ஒருவிதமான நாஸ்திகமே. அதை நாம் இங்கு மதமென்றே சொல்ல முடியாது. அப்படிச் சொல்ல வேண்டுமானால் மதத்தினுடைய வஞ்சனை, மோசம் அதில் எவ்வளவு இருக்கிறதோ அதைக் கொண்டுதான் சொல்ல வேண்டும். நல்லது, கடவுள் என்பதுதான் என்ன? மனித ஜாதியின் குழந்தைப் பருவத்தினுடைய பயம் நிறைந்த இதயத்தால் தோற்றுவிக்கப்பட்ட ஒரு உருவத்தின் மலர்ச்சி. மனிதர்கள் காட்டுமிராண்டி நிலையிலிருந்த காலத்தில், அதாவது அவர்களுடைய அறிவு வளர்ச்சி தற்கால ஐந்து வயதுக் குழந்தை யினுடையதைப் போன்றிருந்த காலத்தில், அவர்கள் இருட்டு, தெரியாத இடம், அறிமுகமில்லாத பொருள் இவைகளைக் கண்டு பயமடைந்தார்கள். மின்னல், நெருப்பு போன்ற சக்தி வாய்ந்த பொருள்கள் அவர்களுக்கு மிகுந்த பயத்திற்குக் காரணமாயிருந்தன. அதிலிருந்து அவர்கள் தேவதைகளைக் கற்பனை செய்யத் துவங்கினார்கள். மெது மெதுவாக இறந்து போன வீரர்களும், பலசாலிகளும் இந்தத் தேவக்கூட்டத்தில் இடம் பெற்றார்கள். ஒவ்வொரு ஜாதியிலும் இவ்விதம் அனேக தேவதைகளிருந்தன. அவைகளின் சக்தி, மேன்மை, பெருமை இவைகளுக்காக மனித ஜாதிகளுக்குள் போட்டி இருந்து கொண்டேயிருந்தது. தங்கள் ஜாதித் தேவதைகளுக்குள்ளும்கூடச் சிறிது பெரிது என்ற தகராறு இருந்தது. பின்னால் ''யார் பெரியவர், யார் பெரியவர்'' என்று தேடியதன் பலனாய், 'உலகத்தைத் தோற்றுவித்த' ஒரே கடவுள் சிருஷ்டிக்கப்பட்டார். மனிதர்களின் மனோ வளர்ச்சியோடு கூடவே அவரிடத்திலும் அனேக நல்ல குணங்கள் சேர்க்கப்பட்டன. இவ்விதம்தான்

கடவுளின் உற்பத்தி ஏற்பட்டது. உண்மையில் கடவுள் மனிதனுடைய மானசீக புத்திரன்.

''இவ்விதம் கடவுளின் அடிப்படை, கற்பனை உலகிலிருந்தாலும், இறந்த காலத்தில் இந்த நினைவால் எத்தனையோ மனிதர்கள் மகிழ்ச்சியும், உதவியும் பெற்றிருக்கிறார்கள்'' என்று சொல்லுவதை நாம் மறுக்கவில்லை. ஆனால், இதன் காரணமாக மனித சமுதாயம் லக்ஷக்கணக்கான வேதனைகளையும் அனுபவித்திருக்கிறது. ஒரு கடவுளை வணங்கும் மதத்தை விட, பல கடவுளை வணங்கும் மதம் எத்தனையோ மடங்கு தாராளமுள்ளது. ஏனெனில் அவர்களின் கடவுள் எண்ணிக்கை அதிகமாயிருப்பதால், அங்கு மற்றக் கடவுளர்களையும் அனுமதிப்பது சுலபமாயிருக்கிறது, ''ஒரு கடவுள் வாதி''களோ அப்படிச் செய்து தங்கள் ஒரே கடவுள் அடிப்படையை அசையவிட மாட்டார்கள். நீங்கள், ஒரு கடவுள்வாதி மதங்களின் கடந்த 2000 வருடச் சரித்திரத்தைப் பார்த்தால், அது நாகரிகம், கலை, கல்வி, எண்ணச் சுதந்திரம் இவற்றோடு மனிதனின் உயிருக்கும்கூடப் பெரிய விரோதியாயிருந்திருக்கிறது என்பது தெரியவரும். அவர்கள் ஆயிரக்கணக்கான பெரிய புத்தகாலயங்களையும், கோடிக்கணக்கான புத்தகங்களையும் நெருப்பிலிட்டு விட்டார்கள். உருவம் பெற்ற அழகையும் - கோமள உணர்ச்சியையும், எத்தனையோ கலை நிபுணர்களின் அழகிய சிற்பங்களையும், ஓவியம் நிறைந்த மாளிகைகளையும் நாசமாக்கி விட்டார்கள். ஆயிரக்கணக்கான கல்வி ஆசையுடையவர்களையும், அறிஞர்களையும் கொன்று எண்ணச் சுதந்திரத்தின் கழுத்தை முறித்து விட்டார்கள். மனிதர்களின் மனோ வளர்ச்சியைக் குறைந்த பக்ஷம் ஓராயிர வருடத்திற்குத் தடுத்த தோடல்லாமல், முன்னால் பெற்றிருந்த வெற்றிகளையும் பெரும்பாகம் அழித்து விட்டார்கள். குற்றமற்ற ஆண்களையும் பெண்களையும் கொன்று குவித்தார்கள். இதுதான் அவர்கள் மதத்தைப் பரப்புவதற்கு முக்கிய வழியாயிருந்தது. அவர்கள் சென்ற நாட்டிற்கெல்லாம் நெருப்பையும் கத்தியையும்தான்

கொண்டு சென்றார்கள். முதலில் இவர்களுடைய வலையில் பிடிபட்ட ஜாதியாரோ வெற்றி மயக்கத்திலிருந்தார்கள். அவர்களுக்குத் தங்களுடைய உயிருள்ள ஜாதியின் ஒழுங்கு அழிந்து கொண்டே போகிறதென்ற எண்ணமே தோன்றவில்லை. அந்த மயக்கம் கலைந்தபொழுது, தங்கள் முன்னோர்களின் எல்லா நல்ல செயல்களும் நாசமாகி விட்டதை உணர்ந்தார்கள். ஜெர்மன் மக்களிடையே ''ஒரு கடவுள் கொள்கை'' கத்தியின் பலத்தாலேயே பரப்பப்பட்டது. அக்காலத்தில் பழைய மதத்தோடுகூட ஜெர்மன் மக்களின் மனிதத் தன்மையும் நசுக்கப்பட வேண்டுவது அவசியம் என்று கருதப்பட்டது. அவர்களுடைய எழுத்தும் பயனற்றது என்று கூறப்பட்டது. அவர்களுடைய இலக்கியங்கள் தேடித் தேடி நெருப்பிலிடப் பட்டன. அவர்களுடைய கோவில்களை அழித்ததோடு மட்டு மல்லாமல் ஒக்கு மரங்களை வணங்கிக் கெட்டுவிடுவார்களோ என்ற பயத்தால், லக்ஷக்கணக்கான பெரிய 'ஒக்' மரங்களையும் வெட்டிவிட்டார்கள். 'ஒரு கடவுள் வாதி'களின் இவ்வித யுத்தவர்ணனை ஆசியாவில் மட்டுமல்ல, அமெரிக்காவின் நாகரிகத்தையும் அழிப்பதற்குக் காரணமாயிருந்தது. தனது பெயரால் நூற்றுக்கணக்கான வருடங்களாக இவ்விதப் பயங்கரமான கொடுமைகள் செய்யப்படுவதையும், இரத்த ஆறு ஓடச் செய்வதையும் பார்த்துக் கொண்டிருந்தும், இவைகளைத் தடுப்பதற்காக அந்தக் கடவுள் வராவிட்டால் அவர் இல்லை என்பதற்கு இதைவிட வேறு என்ன காரணம் வேண்டும்?

இப்போது கடவுளும் மதமும் அவ்வளவு பயப்படத்தக்க பொருளல்ல என்று சொல்லப்படலாம். உண்மையில் இது சரியா? மதத்தினுடைய விஷப்பல் பிடுங்கப்பட்டு விட்டதா? குறைந்த பக்ஷம் இந்தியாவில் இன்றும் மக்கள் இந்த மதத்தால் இளைத்துப் போயிருக்கிறார்கள். நெடுகிலும் மதவாதிகள் கொலை செய்துகொண்டுதான் வருகிறார்கள். ''இவைகள் மதத்தின் குற்றமல்ல, செல்வாக்கிற்காகவும், பணத்திற்காகவும் செய்யப்படுபவை'' என்று நீங்கள் சொல்லலாம். இது முற்றிலும்

சரி. ''ஒரு கடவுள்வாதி''களின் பெரிய பெரிய யுத்தங் களுக்குள்ளும், இந்தப் பணம், செல்வாக்கு இவைகளின் ஆசை வேலை செய்துகொண்டிருந்தது. உண்மையில், அது செல்வாக்கு, பணம் இவைகளின் ஆசையின் விளைவுதான். ஆயினும் அது சாதாரண மக்களுக்கு முன்னால் சாந்தமான விரும்பத்தக்க உருவத்தில் வைக்கப்பட்டது. நீங்கள் மதத்தை எவ்வளவு கழுவித் துடைத்தாலும், எத்தனை சுத்தம் செய்தாலும் அது பழைமையின் பக்தனாகவும், எதிர்கால முன்னேற்றத்தின் விரோதியாக வுந்தானிருக்கும். அது, பக்தி சிரத்தை என்ற பெயரால் எப்போதும் நமது கழுத்தில் பிணத்தைக் கட்டத் தான் முயற்சிக்கும். இந்த உலகம் ஒவ்வொரு வினாடியும் மாற்ற மடைந்து கொண்டு வருகிறது. அதன் மாற்ற வேகத்தில் சென்ற காலம், நிரந்தரமாகச் சென்ற காலமாகவே இருந்துவிடும். அது நிகழ்கால உருவம் பெறமுடியாது. இவ்வித நிலைமையில் அசையாத் தன்மையையுடைய மதம் நமக்கு ஒரு நாள் உதவி செய்ய முடியாது. உலகத்தின் வேகத்தோடு நாமும் ஒட்டி ஓடவேண்டும். ஆனால் இந்த மதம் நம்மைப் பின்னுக்கிழுக்க விரும்புகிறது. நாம் பின்னடைவதால் உலகச் சக்கரம் நம்மை எதிர்பார்த்து நின்றுகொண்டிருக்குமா? சமுதாயக் கஷ்டங்களைத் துடைத்தல், உபயோகமற்ற, விரும்பத்தகாத குழந்தை உற்பத்தியைத் தடுத்தல், பொருளாதாரப் பிரச்சினைகள் தீர்த்தல் இவையெல்லா விஷயத்திலும் மதம் நமக்கு முழுத் தடை யாயிருக்கிறது. நம்முடைய பிரச்சினைகளை இன்னும் அதிகச் சிக்கலாக்குவதும், முன்னேற்ற விரோதிகளுக்குத் துணை செய் வதும்தான் மதத்தின் கடமையாயிருக்கிறது.

''சென்ற நூற்றாண்டின் கதையைச் சொல்லிக் கொண்டிருக் கிறீர்கள். அப்போது பெரிய பெரிய விஞ்ஞானிகள் எல்லோரும் மதத்தை எதிர்த்தார்கள். ஆனால் இன்று, சிறந்த விஞ்ஞானிகள் எல்லாம் நேரான வழிக்கு வந்து விட்டார்கள். அவர்கள் கடவுளுக்கும் மதத்திற்கும் போஷகர்களாகிவிட்டார்கள்'' என்று நீங்கள் சொல்லலாம். உள் இரகசியத்தை அறியாமல் மேலாகப்

பார்ப்பதால் உங்களுக்கு இப்படி மயக்கம் ஏற்படுகிறது. இதற்கு அந்த விஞ்ஞானிகள் என்ன செய்வார்கள்? இன்று உலகம் விதி விலக்கின்றி இரண்டு பகுதிகளாகப் பிரிந்து கொண்டு போகின்றது. ஒன்று, தனி மனித சொத்துரிமையை மாற்றாமல் வைத்திருக்க விரும்பும். அதாவது மறைமுகமாகவோ நேர்முகமாகவோ முதலாளிக் கொள்கையை வளர்க்கும் கூட்டம். மற்றொன்று சமுதாயத்தின் நன்மைக்காகப் பொது உடைமைக் கொள்கையை ஆதரிக்கும் கூட்டம். சென்ற நூற்றாண்டில், தனி மனிதப் பொருளாதாரச் சுயநலத்தை மாற்றாமல் வைத்திருக்க விரும்பிய விஞ்ஞானிகள் இருந்திருக்கலாம். ஆயினும் அப்போது, மதத்திற்கு விரோதமாக அவர்கள் தங்கள் எண்ணங்களைத் தெளிவாகச் சொல்ல முடியும். காரணம், அப்போது பொது உடைமைக் கொள்கை வெறும் கனவா யிருந்தது. அதன் வெற்றியில் அவர்களுக்கு நம்பிக்கையில்லை. ஆனால் இப்போது, பொதுஉடைமைக் கொள்கை உலகத்தில் கெட்டியான பொருளாய் விட்டது. ஆகையால் முதலாளிக் கொள்கைக்காரர்கள், பொதுஉடைமைக் கொள்கைக்கு விரோத மாக விதவிதமான சூழ்ச்சிகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள். பயமுறுத்தியும், ஆசை காட்டியும் எத்தனையோ நம்பிக்கை தளர்ந்த விஞ்ஞானிகளைத் தங்கள் பக்கம் இழுத்துக் கொள்ளுகிறார்கள். நான் இங்கிலாந்திலிருந்த காலத்தில் ஒரு மரியாதைக்குரிய கனவான், ''நோபல்'' வெகுமதி பெற்ற ஒரு விஞ்ஞானியைப் பற்றி, ''அவர் மதத்தையும், மூடநம்பிக்கை களையும் பிரசாரம் செய்வதில் ஏன் இவ்வளவு ஆத்திரம் காட்டுகிறார் தெரியுமா? அவருடைய விஞ்ஞான் அறிவு முடிவடைந்துவிட்டது. அவர் வேலை பார்க்கும் சர்வ கலாசாலை, ஒரு விதத்தில் கோடீஸ்வரக் குடும்பத்தின் சொந்தச் சொத்துப் போன்றது. அந்த விஞ்ஞானி எப்படியாவது நன்றியை வெளிப்படுத்துவது தனது கடமையென்று கருதுகிறார்'' என்று கூறினார். மதத்தை ஆதரிக்கும் எல்லா விஞ்ஞானிகளும் இந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று நான் கூறவில்லை.

எத்தனையோ விஞ்ஞானிகள் தாங்களே முதலாளிகள். ஆகையால், முதலாளிக் கொள்கையைக் காப்பதற்குச் சிறந்த ஆயுதமான இந்த மதத்தை ஆதரிக்கிறார்கள். இன்னும் சிலர் உழைப்பாளர்களின் வாழ்க்கைக் கஷ்டத்தை நன்கு உணர்ந்திருக்கிறார்களாகையால், அந்த வகுப்பில் கலந்துகொள்ள அஞ்சுகிறார்கள். இன்னும் சிலர் சோம்பலான மனம், புதிய விஷயங்களைக் கிரகித்துக் கொள்ளும் சக்தியில்லாத வயதை அடைந்துவிட்டவர்கள். மனிதனின் ஆயுளில் முதல் 40, 45 வருடம் வரைதான் அவன் சுதந்திரமாகச் சிந்திக்கவும், தனது எண்ணங்களைப் பரப்பவும் சக்தியுடையவனாக இருக்கிறான். பின்னாளில், மங்கலான மாலை நேரத்தைப் போன்று, மனம் தெளிவற்றதாய் இறந்தகால நினைவின் துணைகொண்டு பழமையையே பற்றி நிற்கிறது. உலகில் இந்த விதிக்கு விலக்காயிருப்பவர்கள் மிகக் குறைவு.

இவ்விதம் உலகில் எந்த எண்ணத்திற்கும் இரண்டு கட்சிகள் இருக்கின்றன. இந்த நிலைமையில் யாருடைய அபிப்ராயத்தையும் பற்றிக்கொண்டு நடப்பது நன்மையல்ல. நீங்கள் உங்களறிவைச் சுதந்திரமுள்ளதாக வைத்துக்கொள்ளவேண்டும். சுயேச்சையான சிந்தையின் தோன்றும் முடிவையே பின்பற்றி நடக்கவேண்டும். கடவுளின் உற்பத்தியைப்பற்றி நாம் கூறினோம். இப்போது அதன் அடிப்படையைப் பற்றி ரசமற்ற கேலிசெய்ய விரும்பவில்லை. ஆனால் கடவுளை ஒப்புக் கொள்ளுபவர்கள் உலகத்தின் எஜமானரான கடவுளைப்போல் இங்கும் அதை ஆளுகிறவன், அதாவது ஒரு அரசன் இருக்க வேண்டுமென்றும் ஒப்புக் கொள்ளுகிறார்களென்பதை நாம் உறுதியாகச் சொல்லி விட விரும்புகிறோம். அனேக நூற்றாண்டுகளாக இந்த அரசர்கள், கடவுளின் பிரதிநிதிகள் என்ற தோரணையில் தான் ஆட்சி செய்து வந்திருக்கிறார்கள். பொதுஉடைமைக் கொள்கை, உலகத்தின் எல்லாச் சக்தியும் கற்பனைக் கடவுளின் கையிலிருக்கிறதென்று நினைக்காமல், இயற்கையிலும், மனித சமுதாயத்தினிடமும் இருப்பதாகக்

கருதுகிறது. கடவுள் நினைவு, நமது எல்லா வேலைகளிலும் துன்பத்தை உண்டாக்குகிறது. கடவுள் நினைவுதான், நமக்கு நாமே எஜமானர்களல்ல என்பதைக் கற்றுத்தருகிறது. எத்தனையோ மதங்கள், கடவுளின் வேலையில் தலையிடக் கூடா தென்பதற்காகக் கர்ப்பத்தடையை எதிர்க்கின்றன. மக்கள் எண்ணிக்கையைக் குறைக்கவேண்டிய அவசியம் நேர்ந்தாலும் அதைப்பற்றி அவற்றிற்குக் கவலை இல்லை. சென்ற வருஷம் நான் காஷ்மீர் நாட்டின் 'வாலிஸ்தான்' பகுதிக்குச் சென்றிருந்தேன். அது ஒரு வரண்ட மலைப்பிரதேசம். அங்கு விருப்பப்படி தண்ணீர்க் கால்வாய்களோ, பயிர் நிலங்களோ உண்டாக்க முடியாது. நாங்கள் சென்ற பொழுது வழியில் ஒரு கிராமத்தில் தங்கினோம். கிராம மக்களின் ஏழ்மை வர்ணிக்க முடியாதது. 50 வருடங்களுக்கு முன்னால் அங்கு 5 வீடுகள் தானிருந்தனவென்றும், இப்போது 20 வீடுகள் இருக்கின்ற வென்றும் தெரிந்துகொண்டோம். எங்கள் ஜெர்மானிய நண்பர் அவர்களிடம் ''உங்களுடைய கிராமத்தில் வெள்ளாண்மை செய்து முடியாததாயும் வாழ்க்கை நடத்துவது மிகக் கஷ்டமாயுமிருக்கும் போது, நீங்கள் ஏன் இவ்வளவு குழந்தை களைப் பெறுகிறீர்கள்?'' என்று கேட்டார். ''யார் குழந்தைகளைக் கொடுக்கிறாரோ, அவர் அவற்றைக் காப்பாற்றமாட்டாரா?'' என்று பதில் கிடைத்தது. ''ஆம்; அவர் காப்பாற்றாவிட்டால், காலரா, அம்மை, பசி முதலியன நிச்சயம் காப்பாற்றிவிடும்'' என்று எங்கள் ஜெர்மானிய நண்பர் கூறினார். இல்காஸா நகரில் ஒரு முசல்மான் கனவான் ''எங்கள், மதத்தின் விதிப்படி தாய் தந்தையர்களுக்குப் போதுமான குழந்தைகள் கிடைத்து விட்டால் அவர்கள் 'ஹஜ்' யாத்திரை போக வேண்டிய அவசியமில்லை'' என்று தனது நம்பிக்கையைத் தெரிவித்தார். இந்துக்களும்கூட, ''குழந்தை இல்லாதவனுக்கு நற்கதியில்லை'' என்று சொல்லுகிறார்கள்.

இவ்விதம் நீங்கள் எவ்விதம் சிந்தித்தாலும், கடவுள் நினைவு நமது எல்லாவித முன்னேற்றத்திற்கும் தடை என்ற முடிவிற்குத்தான் வரமுடியும். மனோ அடிமைத்தனத்தின் பலமான விலக்கு கடவுள் நினைவு. சுரண்டுபவர்களின் சக்தி வாய்ந்த ஆயுதம் கடவுள் நினைவு. அதன் உதவி கொண்டு அவர்கள், ''ஏழை-பணக்காரன் என்பது அவரால் செய்யப்பட்டது. அவர் செய்வதெல்லாம் சரியாகவே செய்கிறார். அவருடைய விருப்பப்படி உன்னை விட்டுவிடு. இந்த சில வருட வாழ்க்கையைப் பற்றி என்ன கவலை? உனக்காக இறந்த பின்பு அவர் எத்தனையோ இன்பங்களை வைத்திருக்கிறார். இயந்திரங்களைப்போன்று எல்லா உயிர்களையும் அவர் நடத்துகிறார். மனிதர்கள் அவர் கைப்பொம்மைகள்!'' என்றெல்லாம் சொல்லுகிறார்கள். இந்த நினைவுகள் நமக்கு நாமே எஜமானர்களாகச் செய்யுமா? கடவுளில்லா விட்டால் இந்த உலகத்தை யார் படைத்தார்களென்று நீங்கள் கேட்கலாம். ஒவ்வொரு பொருளுக்கும் படைப்பவர்கள் அவசியமா? அப்படி அவசியமானால் கடவுளைப் படைத்தவர்கள் யார்? அவர் தானே தோன்றினாரென்றால், இதே விஷயத்தை இயற்கை பற்றியும் ஏன் ஒப்புக் கொள்ளக் கூடாது?

கடவுள் முதலாளிக் கொள்கைக்காரர்களுக்குப் பெரிய உபயோககரமான ஆயுதம் என்பதை நீங்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். கடவுள் நினைவு ஏற்கனவே தோன்றியிருக்காவிட்டால், இப்போது அவர்கள் அதைத் தோற்றுவித்திருப்பார்கள். இதே காரணத்தால்தான் களைத்துப் போன அறிவுடைய சுரண்டுகிறவர்களை வளர்க்கும் எத்தனையோ விஞ்ஞானிகள் மதத்தையும், கடவுளையும் ஆதரித்துப் பேசு கிறார்கள். நமது தாய்நாட்டை பொறுத்த வரை இந்த மத உணர்ச்சி மறையாமலிருக்குமளவும், அமைதி, சுதந்திரம் இவற்றைக் கனவில்கூடக் காண முடியாது.

# பொது உடைமைக் கொள்கையும் பெண்ணடிமையும்

பழங்காலத்திலிருந்து இன்றுவரை, பெரும் பகுதி ஆண்கள் அடிமைத்தனத்திலேயே வளர்ந்து வந்திருக்கிறார்கள். ஆனால் பெண்களின் நிலைமையோ இது விஷயத்தில் இன்னும் மோசமாயிருக்கிறது. பெண்கள் சுதந்திரத்திற்குத் தகுதி யற்றவர்கள் என்ற நம்பிக்கை வளர்க்கப்பட்டிருக்கிறது. ''பெண், குழந்தைப் பருவத்தில் தந்தையாலும் வாலிபப்பருவத்தில் கணவனாலும், முதுமைப் பருவத்தில் மகனாலும், காப்பாற்றப் பட வேண்டியவள். அவளுக்குச் சுதந்திர உரிமையில்லை'' என்ற பழங்கால சுலோகத்தின் மூலம் பெண்களுக்கு அடிமைச் சாசனம் பக்காவாகக் கிடைத்திருக்கிறது. ஐரோப்பாவின் கிறிஸ்தவப் பாதிரிகளும், சில நூற்றாண்டுகளுக்கு முன்வரை, ''பெண்களுக்கு ஆத்மா இல்லை'' என்று சொல்லி வந்தார்கள். இந்துக்களும் பெண்கள் கணவனின் பாதி அங்கம் என்று கருதுகிறார்கள். கணவன் இறக்கும் போது, அவனுடைய பாதி அங்கமான மனைவியும் இறந்து விடுகிறாள். இதை மெய்ப்பிப்பதற்காகச் சென்ற நூற்றாண்டு வரை இந்தியாவில் ஒவ்வொரு வருடமும் ஆயிரக்கணக்கான விதவைகள் கணவனின் பிணத்தோடு வைத்து எரிக்கப்பட்டார்கள். ஆனால் இந்தப் பாதி அங்க விதி, கணவனைப் பொறுத்தவரை ஒரு நாளும் ஒப்புக்கொள்ளப் பட்டதில்லை. உண்மையில் எல்லா நாடுகளிலும் ஆண் களுக்கும், பெண்களுக்கும் வெவ்வேறு தனித்தனிச் சட்டங் களும், ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. இந்துக்கள் சந்தர்ப்பத்திலும், அச்சந்தர்ப்பத்திலும் தொண்டையைக் கிழித்துக் கொண்டு கூச்சலிட்ட பதிவிரதா தர்மம், வஞ்சனையின் எல்லைக்குப் பெரிய உதாரணம். ஆயிரக்கணக்கான வருடங் களாகப் பெண்களுக்கு விரோதமாக ஒரவஞ்சமாக ஒரு பெரிய சூழல் தயாரிக்கப்பட்டு வந்தது. மதம், ஆசாரம், சமுதாயம்

முதலிய விஷயங்களில் அவர்களுக்கு ஆண்களிலிருந்து நேர்மாறான தனிவழிகள் செய்யப்பட்டன. சரியாக சிந்திக்க முடியாதபடியும், புத்தி மயக்கம் ஏற்படும் பொருட்டும், அவர்களுடைய குழந்தைப் பருவத்திலிருந்தே மிக அதிகமாக மத சம்பந்தமான கதைகளால் காதை நிரப்பி மூட நம்பிக்கையைத் தோற்றுவித்து வந்தார்கள். இன்றுவரை, அனேக நாடுகளில் அவர்கள் கல்வியினிடமிருந்தும் மறைத்து வைக்கப் பட்டிருக்கிறார்கள். பழங்காலத்திலேயே ''கோஷா'' போன்ற சகிக்க முடியாத பழக்கம் அவர்களுக்காக ஏற்பாடு செய்யப் பட்டது. மதமும் தனது நூல்களின் மூலம் அதைக் கடவுளின் விருப்பம் என்று சொல்லிப் பலப்படுத்தியது. எல்லாவற்றையும் விடப் பெரிதான பொருளாதார அடிமைத்தனம் என்ற அடிமைச் சங்கிலி அவர்கள் கால்களில் மாட்டப்பட்டிருக்கிறது.

மேற்கு நாடுகளிலிருந்து, பெண்களின் சுதந்திரப் போராட் டம் சென்ற நூற்றாண்டில்தான் நடந்தது. இந்தியாவிலோ அது இப்பொழுதுதான் ஆரம்ப நிலைமையிலிருக்கிறது. இந்நிலை யிலும், ஆண்கள் பெண்களுக்கு எவ்விதச் சுதந்திரம் கொடுக்க விரும்புகிறார்களோ அதனால் உண்மையில் பெண்கள் சுதந்திரமுடைய முடியுமா? சுதந்திரம், சுதந்திரம் என்று கூச்சலிடுவது வெறும் போலி வார்த்தையைத் தவிர வேறு ஒன்றில்லை. பொருளாதார முறையில் சுதந்திரம் கிடைக்காத வரை மணம் அவர்களுக்கு வாழ்க்கை நடத்துவதற்குரிய தொழிலாகக் கருதப்படும் வரை சுதந்திரம் என்று சொல்வதும் வெறும் கேலிக்கூத்துத்தான். பொருளாதாரச் சுதந்திரம் என்பதன் அர்த்தம், பெண்கள் வாழ்க்கை நடத்துவதற்குப் பிறருடைய உதவியை எதிர்பார்க்காதிருத்தல் என்பதுதான். இந்தியாவிலேயே விருப்பமிருந்தும், சந்தர்ப்பம் கிடைத்தும்கூட அப்படிச் சுதந் திரத்தோடிருப்பதற்கு, சமூதாயத்தின் ' ஒரவஞ்சகமும், கொடுமையும் இடங் கொடுப்பதில்லை. மேற்கு நாட்டிலுங் கூடப் பெண்களை அத்தனை சுதந்திரத்தோடில்லை. ஜெர்மனி போன்ற நாடுகளில் தற்போது சட்டங்கள் செய்து, மணமான

பெண்கள் உத்தியோகம் பார்ப்பதைத் தடுத்துவிட்டார்கள். மணம் என்ற தொழில் அவர்களுக்குக் கிடைத்துவிட்ட பின்பு அவர்கள் வேலை செய்து இரண்டு காசு சம்பாதிக்க வேண்டிய அவசிமென்ன என்று கருதுகிறார்கள் போலும்! பெண்கள் சம்பாதிக்கவும், உடை, உணவு, வீடு, பிரயாணம் முதலிய செலவிற்கு ஆண்களின் முன்னால் கைநீட்ட வேண்டிய அவசியமில்லாமலும், பிரசவகாலம், நோய், முதுமை இவை களில் கணவன் மகன் முதலியவர்களை நம்பி வாழ வேண்டிய நிர்ப்பந்தமில்லாமலும் செய்து விட்டால், அதுதான் அவர்களுக்கு உண்மையான சுதந்திரம். ஆனால் முதலாளிக் கொள்கையில் இவையெல்லாம் நடக்க முடியுமா? முதலாளிகள், தங்கள் தொழிற்சாலைகளில் பெண்களுக்கும் இடம் கொடுத் திருக்கிறார்களென்பதில் சந்தேகமில்லை. அவர்கள், 'நாங்கள் பழங்கால ஓரவஞ்சனையை விலக்கிப் பெண்களும் நாள்தோறும் சம்பாதிப்பதற்குச் சந்தர்ப்பம் கொடுத்திருக்கிறோம்' என்று பெருமையோடு சொல்லக்கூடும். ஆனால் இது அவர்களுடைய ஒரு ஏமாற்றுத்தான். அவர்கள் தொழிற் சாலைகளில் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் குறைவான கூலி கொடுக்க முடியும் என்ற காரணத்தால்தான் வேலை கொடுக்கிறார்கள். ஐரோப்பாவில் நாளொன்றுக்கு ஒரு ஆணுக்கு 3 ரூபாய் சம்பளம் கொடுக்கவேண்டி நேர்ந்தால், பெண்கள் ஒன்றரை ரூபாய் சம்பளத்தில் கிடைக்கிறார்கள். இவ்விதம் பெண்கள் கிடைப்பதால், ஆயிரக்கணக்கான ஆண்கள் வேலையற்றவர் களாகி விடுகிறார்கள். நாம் முதலாளிகளின் சுய நலத்தால் கோடிக்கணக்கான மக்கள் வேலையற்றவர்களாகி விடுகிறார்க ளென்ற விபரத்தை ஏற்கனவே கூறியிருக்கிறோம். சில பெண்களுக்கு வேலை கொடுப்பதின் கருத்து, அந்தத் தொழி லாளர்கள் உழைப்பில் இன்னும் அதிகப் பங்கைச் சுலபமாகத் திருடலாம் என்பதுதான்.

பெண்களின் சுதந்திரம் பொது உடைமைக் கொள்கை மூலந்தான் ஏற்படமுடியும்; ஏனெனில், பொது உடைமைக்

கொள்கை அவர்களுக்கு வாழ்க்கையின் எல்லா இடங்களிலும் சம அந்தஸ்துக் கொடுப்பதோடு, பொருளாதாரச் சுதந்திரமும் கொடுக்கிறது. அது ஒவ்வொரு பெண்ணும் தனது வேலைக்குச் சம்பாதிப்பதை ஆதிரிப்பதால், ஆண்களோடு சம அந்தஸ்த்தில் அவர்கள் வாழ்வதற்குச் சந்தர்ப்பமளிக்கிறது. பொது உடைமைக் கொள்கை, இயந்திரங்களின் உதவியை லாபத்திற்காக நாடுவதில்லை. மனிதர்களின் வாழ்க்கைத் தேவைக்கு அவசியமான பொருள்களை விரைவிலும், பூரண உருவத்திலும் தயாரிப்பதற்காவும் வேலை நேரத்தைக் குறைத்து வாழ்க்கைச் சுகங்களை அனுபவிப்பதற்கு அதிக சாவகாசம் கிடைப்பதற்காகவுமே உபயோகிக்கிறது. பொது உடைமைக் கொள்கை தொழிற்சாலைகள், காரியாலயங்கள், சேனை முதலிய எல்லா இடங்களிலும் பெண்களைத் தடையின்றி அனுமதிப்பது, அவர்களின் உழைப்பைத் திருடவோ அல்லது ஆண்களை வேலையற்றவர்களாகவோ செய்யவோ அல்ல. பெண்கள் சுதந்திரமும், வளர்ச்சியும் பெற வேண்டும் என்பதற்காகவே அது இந்த வேலையைச் செய்கிறது. தனது முழு லட்சியத்தையும் அடைவதற்கு இன்னும் நீண்ட தூரம் போகக்கூடிய நிலைமையிலிருக்கிற பொதுஉடைமைக் கொள்கை நாடு இதற்கு ஒரு உயிருள்ள உதாரணம். அங்கே, பெண்களும் ஆண்களோடு சமமாக வேலை செய்யவும், சம்பளம் பெறவும் சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பிரசவத்தின் முன்னும் பின்னும் பலவீன நிலைமையைக் கருதி, 3 மாத ஓய்வோடு முழுச் சம்பளமும் கொடுக்கப்படுகிறது. இவ்விதம் நோயிலும் பலவீனமான சந்தர்ப்பங்களிலும் அவர்களைப் பராமரிக்கும் பொறுப்பை நாடு ஏற்றுக் கொள்கிறது. இந்த வேலை, முதலாளிக் கொள்கையின் சக்திக்கு அப்பாற்பட்டது. எல்லோருக்கும் வேலை, வேலை செய்ய முடியாதபோதும் முழுச் சம்பளம் இவற்றை நினைத்தாலே அவர்கள் மூளை சுழல ஆரம்பித்து விடும்.

''இவ்விதம் பெண்களுக்கும் பொருளாதாரச் சுதந்திரம்

கிடைத்துவிட்டால், குடும்ப சுகம் உலகத்திலிருந்து போய் விடும்; கணவனுக்கும் மனைவிக்கும்முள்ள இனிய தொடர்பு அற்றுப்போய்விடும்; தாய் தந்தை, மக்களுக்குள்ள புனிதமான பரம்பரை அன்பு, இறந்தகால விஷயமாகி விடும்; ஆண் பெண்களி நல்லொழுக்கத்தில் பயங்கரமான புரட்சி ஏற்பட்டு விடும்; மனித வாழ்க்கை மிருக வாழ்க்கையாக மாறிவிடும்'' என்று பலர் சொல்கிறார்கள். பெண்களின் மனிதத்தன்மையைக் கொஞ்சம்கூடப் பொருட்படுத்தாதவர் தான் இப்படியெல்லாம் சொல்லுகிறார்கள். இவர்கள் இந்த ஆடம்பரமான - சாரமற்ற வார்த்தைகளுக்காவும் ஆண்களின் எல்லை கட்டப்பட்ட சுதந்திரத்திற்காகவும் பெண்களை ஆடுகளைப்போல் பலியிடு வதுதான் கடமை என்று நினைக்கிறார்கள். அதோடு, உலகத்தின் ''நல்லொழுக்கக்காரர்''களின் உள் நாற்றத்தை நன்கு தெரிந்து கொண்டும் கண்துடைக்க விரும்புகிறார்கள். பொது உடைமைக் கொள்கைக்காரன், ''மனித வாழ்க்கை'', ''மிருக வாழ்க்கை'' என்ற சொற்களைக் கேட்டுப் பயந்து போய்விடக் கூடியவனல்ல, ஏனெனில் முதலாளிக் கொள்கையில் எவ்வளவு மிருக வாழ்க்கையிருக்கிறதோ, அதில் நூற்றில் ஒரு பங்குகூடப் பொது உடைமை வாழ்க்கையில் இடம் பெற முடியாதென்பது அவனுக்கு நன்கு தெரியும். பணக்காரர்கள் பணத்தின் பலத்தால் நாள்தோறும் அநேகம் பெண்களைத் தமது சதை உணர்ச்சியைத் திருப்திப் படுத்துவதற்காகக் கட்டாயப்படுத்தவில்லையா? மதக் காப்பாளர்களும் நல்லொழுக்கத் தண்டோராப் போடு பவர்களுமான மகாராஜாக்கள் - நவாப்புகளின் அந்தப்புரங்கள் மிருக வாழ்க்கையின் பெரிய புகலிடமல்லவா? சுத்தம் செய்யாத கக்கூஸைப் போன்று சகிக்க முடியாத நாற்றம் நிறைந்த உள் வாழ்க்கையுடையவர்கள் ''நல்லொழுக்கத்''தைப்பற்றித் தாளம் கொட்டித் தற்புகழ்ச்சி செய்துகொள்வது வெட்கங்கெட்ட தனத்தின் கடைசி எல்லையல்லவா? அவர்களுடைய இந்த ஆடம்பரமான மூட வழியில் கலந்துள்ள, அல்லது அவர்களால் விலைக்கு வாங்கப்பட்ட அடிமைகள்தான் இதை எதிர்ப்பதில்

தயங்குவார்கள். ஆண்கள், பெண்களை மட்டுமல்ல; அகில உலகத்திலும் மக்கள் ஒருவரையொருவர் ஏமாற்றாமலும் வஞ்சனை செய்யாமலுமிருக்க வேண்டுமென்று பொது உடைமைக் கொள்கைக்காரன் உறுதியாக விரும்புகிறான். ஒரு பகுதியை முடமாக்கியோ அல்லது விலைக்கு வாங்கியோ அன்பு செலுத்த முடியாதென்பதும் ஒரு பக்கத்தின் விருப்பத்திற்கு விரோதமாகச் சமுதாயமோ அல்லது தனி மனிதனோ அச்சமூட்டிக் காதலைப் பெற முடியாதென்பதும், அவனுக்கு நன்கு தெரியும். உண்மையான அன்பு -காதலுக்குப் பொது உடைமைக் கொள்கையில்தான் இடமுண்டு. ஏனெனில் அங்கு ஆசை காட்டுதலுக்கோ, பலாத்காரத்திற்கோ சிறிதும் இடமில்லை. இவ்விதம் பெண்களின் உண்மையான சுதந்திரம் பொது உடைமைக் கொள்கையில்தான் கிடைக்கமுடியும். ஏனெனில் அதுதான் எல்லாச் சுதந்திரங்களுக்கும் பிறப்பிடமான, பொருளாதார சுதந்திரத்தைத் தோற்றுவிக்கிறது. அது சுதந்திரத்தின் விரோதியான மதம், கடவுள், சமூகம் எதையும் பொருட்படுத்துவதில்லை. அது திருமணத்தைப் பெண்களின் வாழ்க்கைக்குரிய தொழிலாகச் செய்வதில்லை. அது பெண்கள் ஆண்களை விடக் குறைவான தகுதியுடையவர்களல்ல என்று கருதுகிறது. ''உண்மையான இல்லாள்'', ''உண்மையான தாய்'', ''பெண்ணின் புனிதமான கடமை'', ''கற்புக் கொள்கை'' என்பன போன்ற பெண்களுக்குக் கொடுமை செய்யும் சொற்களின் சுழலிலே அது அகப்பட்டுக் கொள்வதில்லை.

# பொது உடைமைக் கொள்கையும் முசோலினி ஹிட்லர் தோரணையும்

இயந்திரங்களின் காரணத்தால் தோன்றியுள்ள மனித சமுதாயத்தின் தற்காலப் பிரச்சனைகளைப்பற்றி, நாம் ஏற்கனவே நன்கு விளக்கியிருக்கிறோம். அதைப் போக்குவதற்குப் பொது

உடைமைக் கொள்கைதான் வழி என்பதையும் விவரித்துக் கூறியிருக்கிறோம். முதலாளிக் கொள்கை சமீப காலம் வரை பொது உடைமைக் கொள்கையை ஒரு கற்பனைக் கனவு என்று கருதி வந்தது. ஆகையால் அது பொது உடைமைக் கொள்கையின் பக்கம் கவனத்தோடு பார்க்கவில்லை. ஆனால் உலகத்தின் மிகச் செழிப்பான ஐந்தில் ஒரு பங்கு நிலத்தில் பொது உடைமைக் கொள்கையின் செல்வாக்கு நிலைத்து விட்டதைக் கண்டதும், அதனுடைய பார்வை மாறிவிட்டது. தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, அது புதிய உருவமும் எடுத்தது. இத்தாலியில் முசோலினியின் பாசிசமும், ஜெர்மனியின் ஹிட்லரின் நாஜிசமும் அதே பழைய முதலாளிக் கொள்கையின் புதிய உருவங்கள்தான். காலம் செல்லச் செல்ல, மற்ற முதலாளிக் கொள்கை நாடுகளும் பொது உடைமைக் கொள்கையைத் தடுப்பதற்காக அவசியம் இவ்விதம் ஏதேனும் செய்யுமென்பது தெளிவாகத் தெரிகிறது. கடந்த ஒரு நூற்றாண்டில் முதலாளிக் கொள்கையின் பெயர் முதலாளிகள் கூட அதை உபயோகிப் பதற்குத் தயங்கக்கடிய அளவு கெட்டுப் போய் விட்டது. ஆகையால், ''பாசிசம் முதலாளிக் கொள்கையின் அடிமை யல்ல''வென்று முசோலினி சொல்கிறார். ஹிட்லரும் தனது கட்சிக்கு ''நாஜி'' அல்லது தேசீய சமுதாயக் கொள்கை என்று பெயர் வைத்திருக்கிறார். ஆகையால் இக்கொள்கைகளை ஆதரிப் பவர்கள், ''எங்கள் கொள்கையை முதலாளிக் கொள்கை என்று சொல்ல முடியாது'' என்று தீவிரத்தோடு சொல்கிறார்கள். தற்காலக் கஷ்டங்களைப் போக்குவதற்குப் பொது உடைமைக் கொள்கை எப்படி முயற்சிக்கிறதோ, அதே போல் நாங்களும் அவற்றைப் போக்கவே முயற்சிக்கிறோம் என்பது அவர்கள் கூட்சி. நல்லது; இயந்திரத்தாலும், முதலாளிக் கொள்கையாலும் தோன்றியிருக்கும் நமது கஷ்டங்களை இவைகள் எவ்வளவு தூரம் போக்குகின்றன என்று கவனிப்போம். நாம் அந்தக் கஷ்டங்களை இரண்டு விதமாகப் பிரிக்கிறோம். ஒன்று, நாட்டின் உள்ளே வளரும் வேலையில்லாத் திண்டாட்டம், மக்கள்

பெருக்கம் முதலியன பிரச்சனைகள். மற்றொன்று, உலகத்தின் தலைமீது எந்த நேரமும் தொங்கிக் கொண்டிருக்கும் பயங் கரமான யுத்தக்கத்தி. பாசிசம், நாஜிசம் இரண்டும் யுத்த தேவதையின் முதல்தரப் பக்தர்கள். அவர்கள் இதை மனித சமுதாயத்தின் நன்மைக்கு மிக முக்கியமானதும், புனிதமானது மான சாதனம் என்று கருதுகிறார்கள். முசோலினியினுடைய பாசிசம் தேசீயக் கொள்கையையுடையது. அதற்கு இத்தாலிய ஜாதியும் அதன் நலனும்தான் மிக முக்கியம். ஒரு காலத்தில் முசோலினி ஜெர்மனியின் நாஜிக் கொள்கையை உற்சாகத்தோடு பாராட்டினார். நாஜிசம் பாசிசத்தின் 'ஜெர்மன் பதிப்பு' என்று கருதப்பட்டது. ஆனால் ஜெர்மனியில் நாஜிக் கட்சி அதிகாரத்திற்கு வந்து, ஒரு ஜாதி என்ற காரணத்தால் ஆஸ்ட்ரியாவைக் கைப்பற்ற முயன்றபோது, முசோலினியின் மூக்குச் சிவந்துவிட்டது. இத்தாலியப் பத்திரிகைகள் நாஜிக் கொள்கைக்கு விரோதமாக விஷம் கக்கத் துவங்கின. ஆஸ்ட்ரியாவின் சர்வாதிகாரி டால்ப்ஸ் நாஜிகளால் கொலை செய்யப்பட்ட பொழுது முசோலினியின் வெறுப்பு இன்னும் தெளிவாக வெளியாயிற்று. பாசிசமும், நாஜிசமும் தங்கள் நாட்டு நலனை அதிமுக்கியம் என்று கருதுவது மட்டுமல்ல; மற்ற நாட்டு மக்களை அழித்து அல்லது அடிமைப்படுத்தி, அதன்மூலம் தங்கள் நாட்டு எல்லையையும், செல்வாக்கையும் அதிகப்படுத்திக் கொள்ளவும் விரும்புகின்றன. பாசிசத்தின் இலட்சியம் இத்தாலியின் மக்கள் எண்ணிக்கையை அதிகப் படுத்தி, கருப்பு மக்களை மட்டுமல்ல; தங்களுக்கு அக்கம் பக்கதிலுள்ள ஜுகோஸ்லாவ் போன்ற ஜாதியாரையும் அழித்துத் தங்கள் ஆட்சியைப் பரப்புவதுதான். உலகத்திலுள்ள எல்லா மக்களும் இத்தாலிய ஜாதிக்காக இந்தப் பூ மண்டலத்தைக் காலி செய்து விட்டுப் போனால்தான் அவர்களின் இலட்சியம் நிறைவேறும். ஆனால் இது யுத்தத்தைச் சிரஞ்சீவியாக்குவதற்குச் சிறந்தவழி. யுத்தம் முற்காலங்களைப்போல் விரும்பத்தக்க பொருளாயில்லை தற்காலத்தில். விஞ்ஞானம் யுத்தத்தை மனித

சமுதாயம் முழுவதையும் சின்னாபின்னமாக்கக்கூடிய அவ்வளவு பயங்கரமான பொருளாகச் செய்துவிட்டது.

வெளிநாட்டுக்கொள்கை, உலக சமாதானம் இவைகள் பற்றி நாஜிசத்தின் நோக்கம் பாசிசத்தைவிட அதிகத் தெளிவாயிருக்கிறது. ஹிட்லர் 'எனது போரட்டம்' என்ற தனது புத்தகத்தில் கீழ்கண்ட விதம் எழுதியிருக்கிறார்.

''உண்மை இதுதான்; மனிதன் உலகத்தின், ஏகத்தலைவனாக ஆகும் எல்லைவரை வெற்றி பெறும்பொழுதுதான் 'சமாதான இலட்சியம்' சிறந்த ஒழுங்கில் அமுலில் வரும்''. (பக்.315)

''நாட்டின் வெளிநாட்டுக் கொள்கை, பிரகாசிக்கின்ற கூர்மையான வாளை உபயோகிப்பதாயும், அந்தக் கத்தியைத் திறமையாகவும், நன்றாகவும், உபயோகிக்கும்படி ஏற்பாடு செய்வதாயும் இருக்கவேண்டும்.'' (பக். 689).

''சமாதான ஒப்பந்தங்களும், சினேக ஒப்பந்தங்களும் யுத்த நினைவோடு செய்து கொள்ளப்படாவிட்டால், அவை யாவும் வீண்; உபயோகமற்றவையே.'' (பக். 749).

நாஜிசம் தேசியத்தில் இன்னும் ஒரு அடி முன்னேறியிருக்கிறது. தாய் தந்தையர்கள் அனேக தலைமுறைகளாக வேறு ஜாதி இரத்தக் கலப்பற்றவர்களாய் உள்ளவர்களென்று நிரூபிக்கக்கூடியவன் தான் சுத்த ஆரியன்; அவ்வித சுத்த ஆரிய ஜாதிதான், நாட்டைவிட முக்கியமானது. அதனுடைய பரிபாஷையில் ஜெர்மனியை விடுத்து உலகத்தில் வேறெந்த நாட்டிலும் - ஐரோப்பிய நாடுகளிலுங்கூடச் சுத்த ஆரியர்களில்லை. அது மற்ற ஜாதியரோடு திருமணம் முதலிய சம்பந்தங்களை விலக்கி வைத்திருப்பதோடு மட்டுமல்ல, நிறத்திலும், உருவத்திலும், பாஷையிலும் ஜெர்மனியர்களாய் அனேக நூற்றாண்டுகளாக ஜெர்மன் நாட்டிலே வாழ்ந்துவரும் யூதர்களை நாட்டைவிட்டு வெளியேற்ற ஏற்பாடு செய்து தனது உண்மையான சுய உருவத்தைக் காட்டிற்று. பாசிசத்தைப் போன்று நாஜிசமும், ஜெர்மன் ஜாதி மக்களின்

எண்ணிக்கையைப் பெருக்குவது தனது கடமை என்று கருது கிறது. அது மணம் செய்து கொள்ளுகிறவர்களுக்கு, அரசாங்கப் பொக்கிஷத்திலிருந்து நூற்றுக்கணக்கான ரூபாய்கள் பரிசு கொடுப்பதாக ஆசையூட்டியிருக்கிறது. அந்த இரண்டு கொள் கைகளும், ஏதுவாக வேண்டுமானாலுமிருக்கலாம். ஆனால் உலக சமாதானத்தைப் பொறுத்தமட்டில், அவை இரண்டும் அதற்குப் பெரிய விரோதிகள்.

தங்கள் தங்கள் உள்நாட்டில், இந்த இரண்டு கொள்கைகளின் நிலைமை என்ன! இதைப் பற்றிக் கொஞ்சம் கவனிப்போம்: இந்த இரண்டு கொள்கைகளும், சுரண்டுபவன் - சுரண்டப் படுபவன், கொள்ளையடிப்பன் - கொள்ளையடிக்கப்படுபவன், அதாவது முதலாளி - உழைப்பாளி - இந்த இரண்டு வகுப்பையும் நிலைத்திருக்கச் செய்ய விரும்புகிறது. பொது உடைமைப் பூச்சாண்டியைக் கண்டு அச்சமற்ற முதலாளிகள், முசோலி னியும், ஹிட்லரும் வெற்றி பெறுவதற்காகத் தங்கள் பணப்பைகளைத் திறந்து விட்டார்கள். முதலாளிகளின் பணத்தால் வளர்க்கப்பட்டு, உழைப்பாளர்களினுடைய சுதந்திரக் கழகத்தின் சிதைச் சாம்பலின் மீது கட்டப்பட்டுள்ள 'பாசிசமும்', 'நாஜிசமும்' முதலாளிக் கொள்கையில்லாமல் வேறு என்ன? பாசிசத்திற்கும், நாஜிசத்திற்கும் முள்ள வித்தியாசம், ஜெர் மனிக்கும் இத்தாலிக்குமுள்ள தொழில் வளர்ச்சி வேற்று மையைப் பொறுத்ததுதான்; இத்தாலி அனேகமாக விவசாய நாடு. அது கைத்தொழிலில் அதிகம் வளர்ந்திருக்கவில்லை. ஆகையால் அது பொது உடைமைக் கொள்கையின் எந்த அம்சத்தையும் ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசிய மிருக்கவில்லை. ஜெர்மனியோ முற்றிலும் தொழில் நிறைந்த நாடு. தொழிற்சாலைகளின் ஆதிக்கத்தாலும், முதலாளிகளின் சுயநலத்தாலும், அங்கு வேலையில்லாத் திண்டாட்டம் அதிகப் பயங்கர உருவம் அடைந்து விட்டது. யுத்தத்தின் தோல்வியால், அதனுடைய குடியேற்ற நாடுகளும் பறித்துக் கொள்ளப்பட்டு விட்டன. அதன் வியாபாரச் சந்தையோ மிகக் குறுகிவிட்டது.

ஆகையால், அது பொது உடைமைக் கொள்கையிலிருந்து கொஞ்சம் எடுத்து கொள்ள வேண்டுவது அவசியமாயிற்று. எதிர்காலத்தில், தனது தலைமையை உறுதிப்படுத்திக் கொள்ளு வதற்காக, இன்னும் கொஞ்சம் எடுத்துக் கொள்ள வேண்டியது நேரலாம். அல்லது ஜனநாயகப் பொதுஉடைமைக் கொள்கையை அடையும் கதியும் ஏற்படலாம். நாம் முதலாளிக் கொள்கையில் லாபத்திற்காக இயந்திரங்கள் உபயோகிக்கப் படுகின்றன வென்றும், பொது உடைமைக் கொள்கையில் நாட்டின் நன்மைக்காக இயந்திரங்கள் உபயோகிக்கப்படுகின்றன வென்றும் ஏற்கனவே விளக்கியிருக்கிறோம். நாஜிசம், பொது உடைமைக் கொள்கையிலிருந்து சிலவற்றைத் தனதாக்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் அது மிகக் கொஞ்சம். சுரண்டும் சுரண்டப்படும் வகுப்பு பேதத்தை ஒழிப்பதற்குப் பதிலாக அதை உறுதிப்படுத்த விரும்புகிறது. பொது உடைமைக் கொள்கையின் பக்கம் அதிகம் முன்னேறுவதைக் கண்டு தனது 200 தோழர்களை ஹிட்லர் கொன்று முடித்தார். நாஜிசம், பெண்களுக்குத் திருமணம் ஒரு தொழில் என்று கருதி அவர்களுடைய பொரு ளாதார சுதந்திரத்தையும், சுதந்திரமாக வாழும் உரிமையையும் கட்டாயமாகப் பறித்து, அதன் மூலம் நாட்டின் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க விரும்புகிறது. ''பெண்களின் இடம் தொழிற்சாலைகளிலும், காரியாலயங்களிலுமல்ல; அவர்களின் இடம் வீடுகளிலே - மனைவி, தாய் என்ற முறையில்'' என்று அது முழங்கிற்று. எத்தனையோ கஷ்டங்களைச் சகித்து, மிகுந்த உழைப்பின் மீது சென்ற நூற்றாண்டிலே பெண்கள் பெற்ற உரிமையை, ஹிட்லர் தனது வெற்றி வெறியில் ஒரு பேனா முனையில் பறித்து விட்டார். ஒவ்வொறு முன்னேற்ற விரோதக் கூட்டத்திற்கும் கடவுளும் மதமும் மிக உபயோகமான பொருள்கள். இந்த இரண்டு கொள்கைகளிலும் அவற்றை நாம் காண்கிறோம். உலகத்தில் மிக அற்பமானதும், சுதந்திர எண்ணத் திற்கு விரோதியானதுமான இரண்டு மதங்களுள் ரோமன் கத்தோலிக்க கிறிஸ்துவ மதமொன்று. அதற்கு முசோலினியும்,

அவருடைய பாசிசமும் பரமபக்தர்கள். ஹிட்லரின் ஆட்சியில் கீழ்கண்ட விதம் பிரார்த்தனை செய்யும்படி மாணவர்கள் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள்.

''ஹே, எல்லா வல்லமையுமுள்ள கடவுளே! எங்களுடைய ஆயுதத்திற்கு வெற்றியைக் கொடு; நீர் எப்பொழுதும் செய்து வந்ததைப் போல் நியாயம் செலுத்தும். எங்களை ஆசீர்வதியும். நாங்கள் சுதந்திரத்திற்கு தகுதியுடைவர்களாகச் செய்யும்; ஹே, கடவுளே எங்கள் ஆயுதங்களுக்கு வெற்றியைக் கொடும்.''

''போப்''பின் உத்தரவைப் போன்றே, ஹிட்லரும் காரல் மார்க்சினுடைய நூலையும்கூடச் சர்வகலாசாலைகளில் படிப் பிப்பதைத் தடுத்திருக்கிறார். இவ்விதம் நாம் எங்கு பார்த்தாலும் பாசிசமும், நாஜிசமும் நாட்டின் உள் வளர்ச்சிக்கு விரோதி களாயும், பின்னுக்கிழுப்பவைகளாயும், பெண்கள், உழைப் பாளர்கள், ஒடுக்கப்பட்டவர்கள் இவர்களின் சுதந்திரத்திற்குப் பெரிய தடையாகவும், நாட்டிற்கு வெளியே யுத்த நெருப்பை எப்போதும் தூண்டிக் கொண்டே இருப்பவையாகவும் தோற்ற மளிக்கின்றன. இயந்திரங்களை உபயோகிப்பதில் இலாபம் குறியாகவும், சுரண்டும் வர்க்கம் இன்றுள்ளபடியே பல முடையதாகவும் இருக்கும்வரை, வேலையில்லாப் பிரச்சனை ஒரு நாளும் தீர்க்கப்பட முடியாது.

# பொது உடைமைக் கொள்கையும் மனித சுதந்திரமும்

**பொது உடைமைக் கொள்கையின் நோக்கம்:**

1. சுரண்டும் - சுரண்டப்படும் வகுப்புப் பேதத்தை ஒழித்து; உற்பத்திச் சாதனங்களையும் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களையும் தனி மனிதர்களுக்குச் சொந்தமாக்காமல், சமுதாயத்தின் சொத்தாகச் செய்வது.
2. எல்லா மனிதர்களையும் அவர்களுடைய தகுதிக்கேற்ப வேலை செய்யச் செய்வது;

3. வாழ்க்கைக்கு அவசியமான பொருள், இயந்திரங்களின் உபயோகத்தால் கிடைக்கும் சாவகாசம் மனோ வளர்ச்சிக்குச் சந்தர்ப்பம் - இவைகளை எல்லாருக்கும் சமமாகவும், விருப்பத்திற்கு ஏற்பவும் பிரித்துக் கொடுப்பது.

ஒன்றையும், இரண்டையும் பார்த்து எத்தனையோ பேர் கீழ்க்கண்ட விதம் தர்க்கம் செய்யத் துவங்குகிறார்கள்:-

அ. பொது உடைமைக் கொள்கை மனித சுதந்திரத்திற்குப் பெரிய விரோதி. அவர்களுக்கு, மனிதன் இயந்திரத்தின் ஒரு பாகத்தை விட அதிகமல்ல. அவன் சமுதாயத்தின் கைப்பொம்மைதான்.

ஆ. மனோவளர்ச்சிக்குரிய தகுதி எல்லோருக்கும் ஒரே மாதிரி இருப்பதில்லை. இவ்விதம் ஒரு தடியைக் கொண்டு எல்லோரையும் ஓட்டுவதால் மேதை கொல்லப்படுகிறது. அதனால் மனித சமுதாயம் அவர்களின் தொண்டை இழந்துவிடுகிறது.

இ. மூன்றாவதிலும் கூட, சிறிய, பெரிய எல்லா உழைப்பிற்கும் வெகுமதி சம அளவில் கிடைப்பதால், யாரும் அதிக உழைப்பிற்கோ திறமை காட்டுவதற்கோ முயற்சிக்க மாட்டார்கள். காடுகளில் எல்லா மரங்களும், ஒரே மாதிரி இருப்பதில்லை. சில தேவதாருவைப் போன்று நூற்றுக்கணக்கான அடி உயரமும், இன்னும் சில எலுமிச்சை, மாதுளை போன்று மிகக் குட்டையாகவுமிருக்கின்றன. இயற்கை எல்லா வற்றிற்கும், ஒரே மாதிரி உணவு, தண்ணீர், காற்று, வெப்பம் கொடுத்தால் தேவதாரு ஏன் அவ்வளவு வளருகிறது? அது பூந்தொட்டியில் வைக்கப்பட்ட சீன தேவதாருவைப் போன்ற 2,3 அடியோடு தனது வளர்ச்சியை நிறுத்திக் கொள்ள வேண்டுமே? பொது

உடைமைக் கொள்கை மேதைக்கும், தகுதிக்கும் பெரிய விரோதி.

ஈ. மனிதர்கள் அசையாப் பொருள்களைப் போன்று ஒரு குறுகிய எல்லையில் அடக்கி வைக்கப்படக் கூடிய வர்களல்ல. அசைவு என்பதன் கருத்து சுதந்திரமாக எண்ணுவதும், வேலை செய்வதும் தான். இந்தச் சுதந்திரத்தினால்தான், மனிதர்கள் உயர்ந்த கலை, அழகிய காவியம், பரந்த விஞ்ஞானம் இவைகளை அமைப்பதில் வெற்ற பெற்றார்கள்.

உ. பொது உடைமைக் கொள்கைக்காரர்களுக்கு மனித இயற்கை பற்றிய அறிவு துளிகூட இல்லை. இன்றேல் அவர்கள் இவ்விதம் காற்றில் கோட்டை கட்ட முயற்சிப்பார்களா? மனிதர்களில் சிலர் தலைவனா வதற்கும் நிர்வாகம் செய்வதற்கும் இயற்கையிலேயே தகுதியுடையவர்களாயிருக்கிறார்கள். மற்ற பெரும் பான்மையினரோ இவ்விதத் தகுதியற்றவர்களாய்ப் பின்பற்றுவதற்கும், உத்தரவுகளை நிறைவேற்று வதற்கும் தகுதி வாய்ந்தவர்களாயிருக்கிறார்கள். பொது உடைமைக் கொள்கை, மனிதர்களின் இயற்கையான போக்கை மாற்றக்கூடிய மந்திர சக்தியல்ல.

ஊ. தனி மதனிர்களைப் போலவே உலகத்திலுள்ள மனித ஜாதிகளும், வெவ்வேறு விதமான நீர், காற்று வெவ்வேறு விதமான மன உடல்வளர்ச்சி இவைகளின் காரணமாகச் சமமான தகுதியற்றவைகளாயிருக்கின்றன. அவைகளில் சில ஆளுந்தகுதியுடையதாயும், இன்னும் சில இவ்விதத் தகுதி சிறிது மற்றதாயுமிருக்கின்றன. புலியையும் ஆட்டையும் ஒரே விதமான வேலையைச் செய்யும்படி செய்வது பைத்தியக்காரத்தனமல்லவா?

எ. முதலாளிகள் சுரண்டுபவர்களல்ல. பொருள்களை உற்பத்தி செய்வதில் தொழிலாளர்களைப் போன்று

அவர்களும் உழைக்கிறார்கள். தொழிலாளர்கள் கையினால் வேலை செய்தால், முதலாளிகள் இணைத்தல், மேற்பார்த்தல், சேகரித்து வழங்கல் முதலிய முக்கியமான வேலையைச் செய்கிறார்கள்.

ஏ. நாகரிகம், கலை இவைகளைக் காப்பாற்றவும், விஞ்ஞானத்தை வளர்க்கவும், முதலாளிகளும், மகாராஜாக்களும் அதிகமாகப் பங்கு எடுத்துக் கொள்ளவில்லையா? அந்த வகுப்பின் அடிப்படையையே அழித்து விட்டால், சமுதாயத்தின் வளர்ச்சிக்குத் தீங்கு நேர மாட்டாதா? இவைகளுக்குப் பொது உடைமைக் கொள்கைக்காரன் கூறும் பதில்!

பொதுஉடைமைக்கொள்கை முதலாளிக் கொள்கையைவிட மனிதர்களுக்கு அதிக சுதந்திரம் கொடுக்கிறது. இதை விளக்குவதற்குமுன், நாம் முதலாளிக் கொள்கை பறையடிக்கிற மனித சுதந்திரம் என்பதன் அர்த்தமென்ன? அவை சமுதாயத்தில் எத்தனை பேருக்குக் கிடைக்குமென்பதைப் பார்ப்போம். நாம், எல்லாச் சுதந்திரங்களுக்கும் பிறப்பிடம் பொருளாதார சுதந்திரம் தான் என்று 8-வது அத்தியாயத்தில் விளக்கி இருக்கிறோம். அந்தப் பொருளாதார சுதந்தரம் எத்தனை பேருக்குக் கிடைத்திருக்கிறது? யாரிடத்தில் பணமிருக்கிறதோ, அதாவது யார் முதலாளிகளோ, அவர்களுக்கு மட்டும்தானே? அவர்கள் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களை விலைக்கு வாங்க முடியும். அடிமைகளைப் போலல்ல! அதைவிடத் தீங்கான முறையில். அடிமைகளுக்கு, எந்த நிலைமையிலும் எஜமானன் உடையும், உணவும் கொடுத்தாக வேண்டும். ஏனெனில் அவ்விதம் செய்யாவிட்டால் அவனுக்காகக் கொடுக்கப்பட்டுள்ள முதல் மூழ்கிவிடும் என்ற அச்சம் எஜமானனுக்கிருக்கிறது. ஆனால் தொழிலாளியைப் பொறுத்த வரையில், அவன் உடல் நலத்தோடிருக்கும்வரை, அவனால் வேலை செய்யமுடியும் வரை, அவனிடம் வேலைவாங்குவதால் இலாபம் ஏற்படும்

வரை, அவனுடைய உழைப்பின் பலனில் பாதி அல்லது மூன்றிலொரு பங்கைக் கூலியாகக் கொடுத்துவிட்டு அவனிடம் பூறா வேலையையும் வாங்கலாம். சந்தையில் கிராக்கி குறைந்தாலோ தொழிலாளர்களைக் குறைக்கவேண்டிய அவசியமேற்பட்டாலோ அவனுக்குத் தொழிற்சாலையின் கதவு அடைக்கப்பட்டுவிடுகிறது. இயந்திரங்களால் தொழிலையும், தொழில் திறமையையும் இழந்துவிட்ட ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள், பட்டினியால் வாடி மடியலாம். தொழிலாளி நோய்வாய்ப்பட்டு விட்டாலும் அல்லது முதுமையடைந்து விட்டாலும், அவன் உடல் நலத்தோடிருந்த காலத்தில் அவனுடைய ஒவ்வொரு துளி இரத்தத்தையும் உறிஞ்சிய முதலாளி, அவனை அலட்சியமாகத் தள்ளிவிடுவதற்கு முற்றிலும் உரிமையுடையவனாக இருக்கிறான். ஆயிரக் கணக்கான தொழிலாளர்களும், அவர்களுடைய குடும்பமும் இவ்வித ''மனித சுதந்திரச் சொர்க்க வாழ்வை'' அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். பிறர் கண்ணுக்குத் தெரியாமல் தற்கொலை செய்துகொள்ள அவர்கட்குள்ள உரிமையை வேண்டுமானால் நீங்கள் சுதந்திரம் என்று சொல்லலாம். தொழிலாளர்களை விட்டுவிடுவோம்; மற்ற மனிதர்களிலும்கூட, தேடிப்பார்த்தால் இவ்வித சுதந்திரத்தை அனுபவிப்பவர்கள் எத்தனையோ பேர் கிடைக்கக்கூடும். உலகத்தில் எந்தச் சாதனம் அல்லது எந்தவித மனிதர்கள் முதலாளிகளால் விலைக்கு வாங்கப்படவில்லை? செய்திகள் மக்களுக்கு முன்னால் சுதந்திர நினைவுகளைத் தருகின்றனவா? இங்கிலாந்து போன்ற நாடுகளின் கோடீஸ்வரர்களான பத்திரிகைச் சொந்தக்காரர்கள். பத்திரிகை தர்மத்தைத் தங்கள் ஆரம்பக் காலத்தில் கொஞ்சம் சுதந்திரத்தோடிருந்திருக்கலாம். ஆனால் இப்போது அவை முதலாளிகளின் அடிமைகள், இந்தியாவிலுங்கூட சுதந்திரத்தை யும், புரட்சிகரமான எண்ணங்களையும் வளர்ப்பதில் ஈடுபட்டுத் தனது அஸ்திவாரத்தைப் பலப்படுத்திக்கொண்ட பத்திரிகைகள் வெற்றியை அடைந்ததும் தனது போக்கை மாற்றிக் கொள்வதில்

நேரம் பிடிக்கவில்லை. இந்நாட்டுப் பத்திரிகைகளும், மற்றநாட்டுப் பத்திரிகைகளைப் போல் முதலாளிகளின் கையில் போய்ச் சேருங்காலம் தூரத்திலில்லை. அப்போது அவைகள், முதலாளிகளின் நன்மையைப் பற்றிப் பேசுவது தமது கடைமை என்ற கருதும். நமது நாட்டில் இன்றுவரை முதலாளிகள் அதன் பக்கள் குறைவான கவனம் செலுத்தியதற்குக் காரணம், அதில் இலாபம் எதிர்பார்க்க முடியாததாயும், முதல் மூழ்கிப் போய்விடும் என்ற பயமும் இருந்ததுதான். முதலாளிகளின் விளம்பரத்தைக் கொண்டு இலாபம் பெறும் பத்திரிகைகள் எவ்வளவு தூரம் தமது சுதந்திரத்தைக் காப்பாற்றிக்கொள்ள முடியும்? எழுத்தாளர்களும், கவிஞர்களும் முதலாளிகளால் விலைக்கு வாங்கப்படவில்லையா? தம்முடைய பேனாவையும், மேசையையும், விற்றுச் சாப்பிடாதவர்களின் எண்ணிக்கை, உலகத்தில் மிகமிகக் குறைவு. வெற்றியும் புகழுமடையாமல் உலகத்தில் வாழ்நாள் முழுவதும் சுதந்திரத்திற்காகப் போராடி மடிந்த நூற்றுக்கணக்கான அறிஞர்கள் விட்டுச் சென்ற எழுத்துக்கள்தான், இந்தப் பணக்கார உலகத்தின் மத்தியில் சுதந்திர எண்ணங்களாக நமக்குக் கிடைக்கின்றன. இராஜ தந்திரிகளும், அரசியல் கொள்கைகளும் முதலாளிகளுக்கு இன்னும் பலமான அடிமைகள். உலகத்தின் பெரிய அரசியல் அறிஞர்களின் பக்கம் உங்கள் பார்வையைச் செலுத்தினால், இது உங்களுக்குத் தெளிவாகத் தெரியும். எல்லா நாட்டு மந்திரி சபைகளிலும், தொழிற்சாலைச் சொந்தக்காரர்களும், பாங்கர் களும், பிரஸ் சொந்தக்காரர்களும் நிறைந்திருக்கிறார்கள். அரசாங்கக் கொள்கைதான் சிறந்த சக்தி. ஆகையால் அதை முழுவதும் தம் வசப்படுத்திக்கொள்வது மிக அவசியம் என்று முதலாளிகள் கருதுகிறார்கள். முதலாளிக் கொள்கை நாடுகளின் பார்லிமெண்ட் தேர்தல்கள், ரூபாய்களின் பலத்தாலேயே நடத்தப்படுகின்றன. வாக்காளர்களுக்குப் பண உருவத்தில் லஞ்சம் கொடுக்கப்படாத இடங்களிலும் (அவ்வித இடங்கள் மிகக் குறைவு) நாக்குகளும், பத்திரிகைகளும் விலைக்கு

வாங்கப்படுகின்றன. போக்குவரத்துச் சாதனங்களான மோட்டார், ஆகாயக்கப்பல், இரயில்கள் மீது பணம் தண்ணீரைப் போல ஓடவிடப்படுகிறது. யாரிடம் பணமில்லையோ, அவன் தனது தகுதி, தியாகம், தொண்டு இவைகளின் பலத்தால் தேர்தலில் வெற்றியடைய முடியுமா? படிக்காத கிராமவாசி கூட, வெள்ளித் துண்டுகளைப் பொழியாமல் தேர்தலில் வெற்றிபெற முடியாது என்பதை நன்கு தெரிந்து கொண்டிருப்பான். ஜனநாயக ஸ்தாபனங்களுக்கு வாக்களிக்கும் இந்த உரிமையையே மனித சுதந்திரத்திற்கு உதாரணமாகக் காட்டப்படுகிறது. ஒரு தனி மனிதனின் கையில் ஏராளமான பணக் குவியலும் மற்ற ஆயிரக்கணக்கான மக்கள் ஏழைகளாயும், வாழ வசதி யற்றவர்களாயுமிருக்கும் வரை, வாக்குரிமைகள் விலைக்கு வாங்கப்படுவதைத் தடுக்க முடியாது. பண்டிதர்கள் மௌல் விகள், பாதிரிகள் ; இவர்கள் யாவரும் சுதந்திரமுடையவர்களா? அவர்களுடைய அடிப்படையே, முதலாளிகளின் தயவின் மேல்தான். அவர்களுடைய பெரிய பெரிய கோவில்கள், மாளிகைகள் நீள வேஷ்டிகள், நீண்ட சட்டைகள் - இவைகள் யாவும் முதலாளிகளால் கொடுக்கப்பட்டவை. உலகத்திலேயே மிகக் குறைவான சுதந்தரமுள்ள இடம், இந்த மதக் குத்தகைக்காரர்களின் ஸ்தாபனந்தான். சுதேச அரசர்களின் குடிகளுக்கோ, மனித சுதந்திரம் என்ற வார்த்தையைக்கூட உபயோகிக்க உரிமையில்லை. அவர்களுடைய உயிர் - பொருள் - மானம் - மரியாதை எல்லாம் அன்னதாதாவின் கையில்தான். நீங்கள் பிரகாசமுள்ள தீவர்த்தியை எடுத்துக்கொண்டு உலகத்தின் எல்லா மூலைகளையும் தேடிப்பார்த்தால் எந்த முதலாளிக் கொள்கை நாட்டிலும் மனித சுதந்திரத்தைக் காண முடியாது. அது ஒரு பொருளற்ற சொல் என்றுதான் தோன்றும். அப்படி அதற்கேதேனும் பொருளிருக்கும் மாயின், அது விரல்விட்டு எண்ணிவிடக்கூடிய முதலாளிகளுக்கு மட்டுந்தான். அவர்கள் இந்தத் தடபுடல் வார்த்தைகளால் மக்களை ஏமாற்றிப் பயமுறுத்த விரும்புகிறார்கள். சாதுவான மனிதர்கள், "காக்காய்

உன் காதைக் கொண்டுபோய்விட்டது'' என்றுசொன்னால், காதைத் தடவிக்கூடப் பார்க்காமல் காகத்தின் பின்னால் ஓடத் துவங்குகிறார்கள். உலகத்தின் பெரிய சக்தியும், பணமும் சில மனிதர்களின் கைப்பொருளாய் விட்டது. அவர்கள் அதை உபயோகித்துச் சிறிய பெரிய எல்லாவித மனிதர்களையும் விலைக்கு வாங்க முடியும். அப்படி விலைக்கு வாங்கப்படும் மனிதன் எப்படிச் சுதந்திரமுள்ளவனாயிருப்பான்? இதிலிருந்து உங்களுடைய மனித சுதந்திரம் என்பது ஒரு ஏமாற்றுத் திரை என்று தெரிகிறது. இதனால்தான்,

அ. பொதுஉடைமைக் கொள்கை தனி மனிதர்களின் கையில் சொத்திருக்க அனுமதிக்கவில்லை; பொருளாதார நோக்கில் எல்லோரையும் சம தளத்தில் இருக்கச் செய்கிறது. ஆகையால், அது சந்தேகமின்றி மனித சுதந்திரத்தைப் பெரிதும் வளர்க்கிறது.

ஆ. பொது உடைமைக் கொள்கை எல்லாவிதத் தகுதியும் வளர்வதற்கும், வெற்றியடைவதற்கும் முழுச் சந்தர்ப் பம் கொடுக்கிறது. நீங்கள் குறிப்பிட்ட குற்றம் முதலாளிக் கொள்கையில் தானிருக்கிறது. அது ஏழைத்தந்தையின் மேதையுள்ள குழந்தையை, உவர்ப் பூமியிலிட்ட விதையைப் போன்று முளைவிட முடியாமலே தடுத்துவிடுகிறது.

இ. பொது உடைமைக் கொள்கை, எல்லாவித உழைப் பையும் சமுதாயத்தின் நன்மைக்காக அவசியம் என்று கருதுகிறது. அது தகுதி, மேதை சமுதாயத்திற்காகச் செய்யப்பட்ட பெரிய தொண்டு இவைகளுக்குப் பணத்தின்மூலம் விலை கொடுக்க விரும்பவில்லை. மேதாவிகள் தாங்களே நீண்ட காலமாக இதைத் துச்சமாக மதித்து வந்திருக்கிறார்கள். அது தனது சிரத்தை நிறைந்த மரியாதையின் மூலம் அவர்களைக் கௌர விப்பதைத் தடுக்கவில்லை. மேதாவிகளும், தங்கள்

காரியம் வெற்றியும், நல்ல விளைவும் ஏற்படுவதைத்தான், தங்களுக்கு மிகுந்த பலன் என்று கருதுகிறார்கள். உலகத்தின் பெரிய பெரிய விஞ்ஞானிகளிடையே வெற்றியிலிருந்து, முதலாளிகளிள் தான் இலாபம் சம்பாதிக்கிறார்கள். இப்படியிருந்தும், விஞ்ஞான ஆராய்ச்சியில் மகிழ்ச்சியோடு தங்கள் உயிர்களைப் பலியிடும் விஞ்ஞானிகள், ஏதேனும் வெகுமதி ஆசையாலா அப்படிச் செய்கிறார்கள்? உண்மையில் முதல் வகுப்பு மேதாவிகள், எவ்விதப் பரிசு ஆசையுமின்றி, மனித ஜாதிக்குத் தொண்டு செய்வதற்கு எப்பொழுதும் தயாராயிருக்கிறார்கள். இரண்டாந்தர, மூன்றாந்தர மேதாவிகளுக்கு வேலையில் உதவியும், மரியாதையும் கொடுத்தால், அதன் மூலம் அவர்களை உத்ஸாகப்படச் செய்ய முடியும்.

ஈ. பொது உடைமைக் கொள்கை, அசையாப் பொருள்களைப்போல் மனிதர்களைக் குறுகிய எல்லையில் அடைத்து வைக்க விரும்பவில்லை. முதலாளிக் கொள்கையின் சிறைச்சாலையில் பிறந்தது முதல் மரணம் வரை அடைத்து வைக்கப்பட்டுள்ள எண்ணற்ற மக்களின் பொருளாதார விலங்கை உடைத்து, அவர்களுக்கு விடுதலையளிக்கவே விரும்புகிறது. செக்கு மாடுகளைப்போல் வாழ்நாள் முழுவதும் வயிற்றின் பின்னே சுற்றிக்கொண்டு வருபவர்களும், உயர்ந்த கலை, அழகிய கவிதை, பரந்த விஞ்ஞானம் இவற்றை அமைப்பதற்கு அது ஆயிர மடங்கு அதிக சந்தர்ப்பம் கொடுக்கிறது.

உ. ஆளும் தகுதியும், ஆளப்படுந்தகுதியும் மனிதர்களுக்குப் பிறவியிலேயே வருகிறதென்றால் பொது உடைமைக் கொள்கைக்காரன் அவர்களின் பின்னால் தடியெடுத்துக் கொண்டு அலையவில்லை. அவன் அந்த ஆளுந் தகுதி,

மனிதனுடைய மேதையின் பலத்தில் அமைக்கப்பட வேண்டுமென்றுதான் விரும்புகிறான். லஞ்சம் கொடுத்து ஆளுந்தகுதியை நிலைநிறுத்திக் கொள்வதைத்தான் அவன் எதிர்க்கிறான். பணத்தால் வாங்கப் பட்ட ஆளுந்தன்மை இயற்கையானதென்று நீங்களும் சொல்லமாட்டீர்கள்.

ஊ. உலகத்தின் ஜாதிகளுள் ஆண்டான் - அடிமை என்ற பேதம் பிறப்பிலேயே இருக்கிறதென்று சொல்வது, ஒரு கொள்கைக்காரன், ''இந்த நியாயாதிபதி பெரிய முட்டாள். இவன் மனித இயற்கை கொஞ்சங்கூடத் தெரியாதவன். சில மனிதர்கள் கொள்ளை கொடுப் பதற்காகவும், சில மனிதர்கள் கொள்ளையடிப் பதற்காகவும், பிறந்திருக்கிறார்கள். இந்த இரண்டுவித மனிதர்களையும் ஒரே மாதிரி கருதுவது முட்டாள் தனம்'' என்று கூறுவதைப் போலிருக்கிறது. இது முதலாளிகளின் சுயநலப் பாராயணத்தின் தோற்றமே தவிர உண்மையல்ல. உலகத்தை எந்தக் கொள்கையின் ஆதாரத்தைக் கொண்டு இவ்விதம் இரண்டாகப் பிரிக்கிறார்களோ, அதே ஆதாரத்தைக் கொண்டு தங்கள் நாட்டு ஜாதி மக்களையும் இரண்டாகப் பிரிக்க முடியும். உண்மையில் முதலாளிகள் அப்படித்தான் பிரித்தும் வைத்திருக்கிறார்கள்.

எ. பெரிய பெரிய தொழிற்சாலைகளின் ஆயிரக்கணக்கான பங்குதாரர்கள், தொழிற்சாலைகளைப்பற்றி, இவ் வருடம் 15 - சத்விகிதம் இலாபம் கிடைத்திருக் கிறதென்பதைத் தவிர வேறொன்றும் தெரிந்து கொண்டிருப்பதில்லை. இவர்களையும் உழைப்பார்க ளென்று சொல்வதா? தங்களின் நேர்மையற்ற வாழ்க்கைக்குப் பணம் பெறுவதைத் தவிர

வேறொன்றும் தெரியாத ஜமீன்தாரர்கள் மிராசு தாரர்களும் உழைப்பாளர்களா? பிறருடைய சம்பாதியத்தை - பிறருடைய உழைப்பை அபகரிப்பவன், சுரண்டுகிறவனல்லாமல் வேறு யார்? தனது வேலைகளைத் தானே பார்க்கும் முதலாளியும் கூட, தனது தொழிலாளிகளைவிட ஆயிரமடங்கு அதிகமான பலனைப் பெறுவதற்கு என்ன உரிமை யுண்டு? அப்படிச் செய்து கொண்டிருக்கும் வரை, அவனைச் சுரண்டுபவன் - அபகரிப்பவன் - என்றுதான் சொல்ல வேண்டும்.

ஏ. இறந்தகாலத்தில் கலை, விஞ்ஞானம் இவற்றைக் காப்பாற்றியதற்காக, முதலாளிகளுக்கு நிரந்தரமாக மக்களைக் கொள்ளையடிக்கும்படி, 'பட்டா'ப் போட்டுக் கொடுக்கவில்லை. அவர்கள் சமுதாயத்திற்கு ஏதேனும் நன்மையைச் செய்திருந்தால், (அப்படிச் சுயநலமற்ற நன்மையை ஒருநாளும் அவர்கள் செய்யவில்லை) அதை விட அனேக மடங்கு இலாபம் பெற்று விட்டார்கள். இப்போது அந்த வர்க்கம் இல்லாமலேயே கலையும், விஞ்ஞானமும் எவ்விதத் தடையுமின்றி வளர முடியும். ஏனெனில், பொது உடைமைக் கொள்கை நாடு அதிக சாதனத்தையும், மிகுந்த காலத்தையும், எண்ணற்ற மேதாவிகளையும் அதில் ஈடுபடுத்தத் தயாராயிருக்கின்றது.

பொது உடைமைக் கொள்கை, சுதந்திரத்தையும் மனோ விருப்பத்தையும் வெவ்வேறாகக் கருதுகிறது. சமுதாயத்தின் எல்லா மனிதர்களுடைய சுதந்திரத்தையும் காப்பாற்றுவதுதான் சுதந்திரம். இவ்விதச் சுதந்திரத்திற்கும் எல்லையும், நியமமு முண்டு. கடமைத் தளையும் ஒரு தளைதான். ஆயினும், அதைப் பின்பற்று வதைச் சுதந்திரத்திற்கு விரோதமென்று சொல்ல

முடியாது. அதை அடிமைத்தனம் என்று சொன்னாலுங்கூட அது வணங்குவதற்குரியது. ஏனெனில் அஃதின்றி சமுதாயம் நன்மையடைய முடியாது. சமுதாயத்தின் நன்மை என்றால் என்ன? எல்லா மக்களுக்கும் சமமான நன்மை சமுதாயம் என்று சொல்லுவதால், அந்த நன்மை மனிதர்களுக்கு வெளியிலுள்ள ஒரு பொருளின் நன்மையல்ல. எல்லா மக்களுடையவும் ஐக்கியப்பட்ட, நன்மை தீமைகளைத்தான் சமுதாயத்தின் பேரால் சொல்லுகிறோம். நாட்டின் நூற்றுக்கணக்கான சட்டங்களையும் நீங்கள் சுதந்திர விரோதி என்று கருதமாட்டீர்கள். பொது உடைமைக் கொள்கையில் அந்தச் சட்டங்களில் முக்கால்பாகம் தேவையில்லாமலேயே போய்விடும். ஏனெனில், அதில் அதிகமான பாகம் தனிமனித சொத்துரிமையையும், வரி முதலியவைகளையும் பற்றியது. முக்கால் பங்கு சட்டங்களைத் தேவையில்லாததாகச் செய்யும் கொள்கை மனிதர்களுக்கு அதிக சுதந்திரம் கொடுக்கக்கூடியதா? அல்லது அதைப் போன்று நான்கு மடங்கு சட்டங்கள் தவிர்க்க முடியாதவை என்று கருதும் கொள்கை அதிக சுதந்திரமளிக்கக் கூடியதா?

முதலாளிகளுடையவும், அதிகாரிகளுடையவும் சுதந்திரம் உண்மையில் சுதந்திரமல்ல; மனம்போல் நடக்கும் ஏதேச்சாதிகாரம்தான். எண்ணற்ற மக்களின் சுதந்திர அழிவின் மீது அதன் அடிப்படை வைக்கப்பட்டிருக்கிறது. ஒரு முழுக் கடிகாரத்தோடு அதனுடைய ஒவ்வொரு பாகத்திற்கும் எப்படி சம்பந்தமுண்டோ அதேபோல் ஒவ்வொரு மனிதனுக்கும் சமுதாயத்தோடும் தொடர்புண்டு. மனிதர்களுக்குச் சுதந்திரம் வேண்டும். ஆனால் அந்த சுதந்திரம் மற்ற மனிதர்களின் சுதந்திரத்திற்குத் தடையேற்படுத்தக் கூடியதாயிருக்கக்கூடாது. பெரும்பான்மை மக்களின் சுதந்திரத்திற்கு விரோதமாய் உள்ளவர்களை விடுத்து, மற்றெல்லா மக்களுக்கும் பொது உடைமைக் கொள்கை அதிக சுதந்திரம் கொடுக்கிறது.

# பொது உடைமைக் கொள்கையில் இயந்திரங்களால் கிடைக்கும் ஓய்வு நேரத்தின் உபயோகம்

விஞ்ஞானப் பொது உடைமைக் கொள்கை, வாழ்க்கைக்குத் தேவையான எல்லாப் பொருள்களையும், உற்பத்தி செய்வதில், இயந்திரங்களை முற்றிலும் உபயோகிக்க வேண்டுமென்று கருதுகிறது. பொருள்களை உற்பத்தி செய்வதில் குறைவான நேரம் செலவாவதற்காக, இயந்திரங்களில் நாள்தோறும் வளர்ச்சி ஏற்பட வேண்டுமென்றும் விரும்புகிறது. உலகத்தில் வேலை செய்யத் தகுதியுள்ள எல்லா மனிதர்களும் ஒரு மணிநேரம் உழைத்தால், வாழ்க்கைக்குத் தேவையான உணவு, உடை, வீடு, தோட்டம், தெரு, பள்ளிக்கூடம், நாடகமன்றம் முதலியவை கிடைப்பதற்குப் போதுமானது என்ற காலம் வரலாம். அவ்வித நிலையில் தூங்குவதற்காக 8-மணி நேரத்தைத் தள்ளிவிட்டாலும், பாக்கி 16-மணி நேரத்தில் மனிதர்கள் என்ன செய்வார்கள்? ஒன்றும் வேலையில்லாமல் போகும்பொழுது, மனிதர்கள் விதவிதமான சண்டையிலும் கலகங்களிலும் ஈடுபட மாட்டார்களா? அதனால் எதிர்கால அமைதியும் சுகக் கனவும் கலைந்துபோய்விட மாட்டாதா?

இதற்குப் பதில் சொல்வதற்குமுன்னால், இவ்விதக் கேள்வி எழுப்புபவர்களைப் பற்றி நமக்கு ஆச்சரியம் உண்டாகிறது. அவர்கள், ''மனிதர்களின் வாழ்க்கை வயிற்றை வளர்ப்பது மட்டுமல்ல, அதை 'மிருகங்கள் கூடச் செய்கின்றன'' என்று உபதேசம் செய்பவர்கள். அவர்களுடைய 'கற்பனைச் சொர்க்கத்தில்' மனிதர்கள் ஒன்றும் வேலை செய்ய வேண்டியதில்லை. எல்லாத் தேவைகளும் சுலபமாகக் கிடைத்துவிடும் என்று நம்புகிறவர்கள்தான் மேற்கண்ட விதம் தர்க்கம் செய்கிறார்கள். பொது உடைமைக் கொள்கைக்காரர்கள்

மதத்தையும், பூஜை முதலியவற்றையும் ஒப்புக் கொள்வதில்லையே! வேலை யில்லாத நேரத்தைக் கழிப்பதற்கு அவர்களிடம் வேறு என்ன வழி இருக்கப்போகிறது, என்று அவர்கள் நினைக்கலாம். மதம், பூஜை முதலியவற்றை ஒப்புக் கொள்ளாவிட்டாலும், பொது உடைமைக் கொள்கைக்காரன் வேறு அனேக வேலைகள் காட்ட முடியும். அவர்கள் மனிதர்கள் செய்வதற்குத் தகுதியான வேலைகளை இரண்டு பாகமாகப் பிரிக்கிறார்கள். ஒன்று, எல்லா மனிதர்களுக்கும் தவிர்க்க முடியாதது. மற்றொன்று மனிதர்களின் விருப்பம்போல் செய்யக்கூடியது. மனிதனும் சமுதாயமும் உயிர் வாழ்ந்திருப்பதற்குத் தேவையான பொருள்களை உற்பத்தி செய்யும் வேலையை, ஒவ்வொரு மனிதனும் அவனுடைய மனோ உடல் தகுதிக்கேற்பச் செய்ய வேண்டுவது தவிர்க்க முடியாதது. இயந்திரங்களின் உபயோகத்தால் வேலை நேரத்தைக் குறைத்து ஒரு மணிநேரமாகச் செய்வதன் கருத்து, தவிர்க்க முடியாத வேலைக்காக ஒரு மணிநேரம் ஒதுக்கி வைப்பதென்பதுதான். மனித சுதந்திரத்தை விரும்புகிறவர்கள் இதனால் மகிழச்சியடைய வேண்டும். பாக்கி 16-மணி நேரத்திலும் வேலைக்காக நீங்கள் கவலைப்பட வேண்டாம் - அந்த நேரத்தில் அவரவர்களின் ருசிக்கேற்ப மனிதர்கள் கவிதை, சங்கீதம், கலை இவைகளை அமைக்கவோ அல்லது அனுபவிக்கவோ செய்யலாம். உடல் நலத்துக்காகவும், பலத்திற்காகவும் விளையாட்டுப் பயிற்சிகள் செய்யலாம். ஆகாயம், பூமி, கடல் இவற்றில் பிரயாணம் செய்வது மனிதர்களுக்கு மன மகிழ்ச்சியையும், அறிவு வளர்ச்சியையும் கொடுக்குமல்லவா? மனிதர்கள், மிருகம், பறவை போன்ற உயிர்களின் மனோ வளர்ச்சி சம்பந்தமான ஆராய்ச்சிகளைச் செய்யலாம். உண்மை, விஞ்ஞானம் முதலிய ஆராய்ச்சிகளில் ஈடுபடலாம். வைத்திய சம்பந்தமான இன்னும் எத்தனையோ தீராத பிரச்சனைகளைத் தீர்க்க முயற்சிக்கலாம். மனிதர்கள் விரும்புகிற அளவு நேரத்தைச் செலவிடக் கூடிய பிரயாணம்,

களியாட்டம், நாட்டியம் போன்ற கலைகளிருக்கின்றன. அக்காலத்தில் பூகம்பம், மழையின்மை, அதிக மழை போன்ற இயற்கையின் தொல்லைகள் இல்லாமல் போய் விடுமா? அப்படித் தொல்லைகள் ஏற்படும் பொழுது புதிய ஆக்கத்திற்கு மனிதர்கள் தங்கள் முழுச் சக்தியோடு எப்பொழுதும் தயாராயிருக்க வேண்டும். சைக்கினை கிடைத்ததும், ஒரு இடத்திலுள்ள மனிதர்கள் மற்ற இடத்தின் உதவிக்காக ஓட வேண்டும். ஏனெனில் அக்காலத்தில் மனித சமுதாயம் முழுவதும் ஒரே குடும்பமாக ஆகியிருக்கும்.

தற்போது பெரும்பாலான மக்கள் வேலையின் சக்கரத்தில் எந்த நேரமும் அகப்பட்டுக் கொண்டு கலை, கவிதை இவற்றை அமைத்தல் அல்லது அனுபவித்தலுக்கு நேரமற்றவர்களா யிருக்கிறார்கள். சிலர் அவ்விதச் சந்தப்பமுடையவர்களா யிருந்தும், அவர்கள் பணக்காரர்களை மகிழ்விப்பதற்காக மற்றவர்களின் மனத்தையும், உடலையும் உருக்குலைக்கும் பொருள்களை உற்பத்தி செய்கிறார்கள். ஓய்வு நேரம், மேதை இவற்றை உபயோகிப்பதற்கு மக்களுக்கு வழிகளையும் திறந்து விட்டால், மனிதர்கள் உலகத்தின் ஒவ்வொரு மூலையையும் அழகியதாக அமைத்து விடுவார்கள். இன்று சில விரல் விட்டு எண்ணிவிடக் கூடிய மனிதர்களின் அதிர்ஷ்டப் பொருளா யிருக்கும் கலை, அக்காலத்தில் எல்லா மக்களுக்கும் எட்டக் கூடியதாயிருக்கும். மக்களின் கல்வி, நாகரிகம் இவற்றின் தளம், அக்காலத்தில் இன்றைவிட மிக உயரமுள்ளதாயிருக்கும். இன்று மனிதர்களின் நேரம் எவ்வளவு வீணாகிக் கொண்டிருக் கிறது? எத்தனை மேதைகள் தூங்கிக் கொண்டிருக்கின்றன? இந்த வீணாகிக் கொண்டிருக்கும் உழைப்பும், காலம், மேதை இவை யாவற்றையும் மனிதர்கள் சுதந்திரத்தோடு உபயோகிக்கத் துவங்கி விட்டால், உலகம் அந்தப் பொய் சொர்க்கத்தைவிட அதிக அழகாயும், சுகம் நிறைந்ததாயும், திருப்திகரமாயும் இருக்கும். நீங்கள் நான் இவ்விதம் சொல்வதைக் ''கற்பனை உலகத்தில் உலவுதல்'' என்று சொல்லக்

கூடும். உண்மையான உங்கள் கேள்வியும் அதே விதந்தானே இருக்கிறது.

பொது உடைமைக் கொள்கைக் கொடியின் கீழ் நாட்டின் தூங்கிக் கொண்டிருக்கும் சக்திகளை விழிப்படையச் செய்து என்னென்ன செய்ய முடியும்? நீங்கள் பொது உடைமைக் கொள்கை நாட்டின் பக்கம் உங்கள் பார்வையைச் செலுத்தினால் இது நன்கு விளங்கும். இன்னும் அதனுடைய உள் விரோதி அழிந்து போய்விடவில்லை. அதற்கு வெளியிலோ, அதற்கு விரோதமான சூழ்ச்சிகள் கெடுபிடியாக நடந்து கொண்டே யிருக்கின்றன. இவ்வளவிருந்தும், கைத்தொழிலில் மிகப் பிற்போக்கான நிலையிலிருந்த அந்த நாடு, இன்று மண்ணெண் ணெயிலும் இரும்புத் தொழிலும் உலகத்தில் முதன்மை வகிக்கிறது. மின்சார உற்பத்தியிலும் உயர்ந்த நிலைக்கு வந்துகொண்டிருக்கிறது. விஞ்ஞான ஆராய்ச்சியில் அது அதிகம் முன்னேறி இருக்கிறது. மனோ விஞ்ஞான * ஆராய்ச்சியில் பாவலோவ் வெற்றியடைந்திருக்கிறது. வைத்திய ஆராய்ச்சியில் இதயத்துடிப்பு நின்று விடுவதால் இறந்துபோன மக்களை, மறுபடியும் உயிர்ப்பிக்கும் வழியில் வெற்றியடைந்திருக்கிறது. மற்ற விஞ்ஞான முறைகளிலும் முன்னேறிக் கொண்டிருக்கிறது. கவிதையிலும், நாடகக் கலையிலும் இன்றைய உலகத்தில் முதலிடம் பெற்றிருக்கிறது. அங்கு ஒவ்வொரு குழந்தைக்கும் கல்வி கட்டாயமென்பது மட்டுமல்ல; மனப்போக்கை அறிந்து கற்றுக் கொடுப்பதற்கும் நல்ல ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நாட்டின் ஒவ்வொரு மூலையிலும், மேதைகளைத் தேடி நல்ல கல்விக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் கொஞ்ச

---

* பாவலோவ் என்பது ஒரு ருஷ்ய அறிஞரின் பெயர். இவர் மனிதனது மனவளர்ச்சி, மனோதத்துவம் பற்றிச் சிறந்த ஆராய்ச்சிகள் செய்திருக்கிறார். அவரது முடிவுகளுக்கு, ''பாவலோவ் வெற்றி'' எனப் பெயரிடப் பெற்றிருக்கிறது.

நாளில் விஞ்ஞானம், அவற்றின் வெற்றி இவைகளின் மூலமாகப் பொது உடைமைக் கொள்கை நாடு அதிக முன்னேற்ற மடைந்துவிடும். ஆகவே இயந்திரங்களின் அதிக உபயோகத்தால் கிடைக்கும் ஓய்வு நேரம் ஒரு பெரிய பிரச்சனையல்ல. இந்தப் பயத்தால் நாம் நமது கொள்கையை விட்டு விடவேண்டிய அவசியமுமில்லை. எழக்கூடிய கற்பனைச் சந்தேகத்தின் சமாதானத்திற்காகவே நாம் இவ்வளவு விஷயமும் சொன்னோம். பொது உடைமைக் கொள்கை நிலைக்கேற்ப அறிவைச் சுதந்திரமாக உபயோகிப்பதை ஆதரிக்கிறது; எதிர்காலத்திலும் அப்படியே ஆதரிக்கும். அனேக வருடங்களுக்குப் பின்னால் ஏற்படக்கூடிய பிரச்சினைகள் எந்த உருவத்திலிருக்குமென்பது நமக்குத் தெரியாது. இப்பொழுதே அதற்காக மண்டையை உடைத்துக்கொள்ள வேண்டிய அவசியமென்ன? அறிவுச் சுதந்திரத்தின் அடிப்படையில் கட்டப்பட்டுள்ளது. இந்த உலகம், அதன் பலத்தினாலும், பரந்த அறிவாலும், நீண்டகால அனுபவத் தினாலும் எதிர்கால மக்கள், அக்காலப் பிரச்சனைகளைத் தாங்களே தீர்த்துக் கொள்ளலாம்.

# பொது உடைமைக் கொள்கையின் எதிர்காலமும் அதன் விரோதி - நண்பர்களும்

நாம், மனித சமுதாயத்தின் கடினமான பிரச்சனைகளைப் பற்றிப் போதுமான அளவு எழுதியிருக்கிறோம். அவற்றிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு ஒரே வழி, பொது உடைமைக் கொள்கைதான் என்பதையும் விளக்கி இருக்கிறோம். பொது உடைமைக் கொள்கை, உலகத்தில் நிச்சயம் வந்து விடுமா என்று கேட்கப்படலாம். ஆம் அல்லது இல்லை என்று ஒரே வார்த்தையில் பதில் சொல்லக்கூடிய கேள்வி அல்ல இது.

(1). உலகத்தில் இவ்வளவு பெரிய ஜனசமுதாயம் வேலையின்றிப் பசியால் மடிவது (2). ஒவ்வொரு 10, 12 வருடத்திற்கொருமுறை பொருளாதார மந்தம் ஏற்படுவதும், அதன் காரணமாக ஒரு பக்கம் மக்கள் பசியால் மடியவும், மற்றொரு பக்கம் லக்ஷக்கணக்கான டன் எடையுள்ள உணவுப் பொருள்களும், பிற பொருள்களும் நெருப்பிலிடவும் நேர்வது; (3). உலகத்தின் தலைமீது கொடுமையான விஞ்ஞான யுத்த வாள் தொங்கிக் கொண்டிருப்பது; (4). பரம்பரை நோயையும் - மனோ பலவீனத்தையும் போக்குவதற்கு மேலான குழந்தைகளை உற்பத்தி செய்யும் வழியில் ஒவ்வொரு அடியிலும் தடையேற்படுவது; (5). பணக்காரன் - ஏழை எல்லோரும் நிச்சயமற்ற எதிர்காலத்தைப்பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருப்பது; இவைகளும் இவை போன்ற இன்னும் அனேகப் பிரச்சனைகளும் பொது உடைமைக் கொள்கை யால்தான் தீர்க்கப்படமுடியும். அனேக நூற்றாண்டுகளாகக் காப்பாற்றப்பட்டு வந்த தங்கள் சுயநலத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, பலம் மிகுந்த முதலாளிச் சக்தி இதை மிகுதியும் எதிர்க்கும். ஆயினும் நாம் மேலே கூறிய பிரச்சனைகள் வெறும் கற்பனையல்ல. அதனுடைய கொடிய வேதனையை ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தேளின் கொட்டு தலைப்போல் அனுபவித்துக் கொண்டேயிருக்கிறான். ஆகையால் மனிதனுக்குப் பொது உடைமைக் கொள்கை எண்ணம் எந்த நேரமும் தோன்றிக் கொண்டிருப்பதைத் தடுக்க முடியாது. பொது உடைமைக் கொள்கை உலக முழுவதும் பரவவே செய்யும்.

முதலாளிகளிடத்தில் மிகுதியான பணக் குவியலிருக்கிறது; கல்வியும் அறிவுமிருக்கிறது. கடவுள் - மதம் என்ற ஏமாற்று வித்தை இருக்கிறது. அவர்கள் பேசாமல் தங்கள் சுயநலத்தை விட்டுக் கொடுத்து விடுவார்களா? தங்கள் புத்தியினாலும், ஆயுதங்களினாலும் உயிரைப் பந்தயம் வைத்துப் போராடு

வார்கள். ஆனால் அவர்களின் விருப்பம் ஒருநாளும் நிறைவேற முடியாது. (1) சில நாடுகளை நிரந்தரமான சந்தைக்காக எப்போதும் அடிமைப்படுத்தி வைத்துக் கொள்ள முடியுமானால், (2) முதலாளி நாடுகள் தங்களுக்குள் ஏற்படும் விஞ்ஞான யுத்தத்தால் தாங்கள் அழிந்துபோகாமலிருப்பதற்காகவும், அடிமை நாடுகள் சுதந்திரம் பெறச் சந்தர்ப்பம் கிடைக் காமலிருப்பதற்காகவும், அடிமை நாடுகளை ஒப்பந்தங்களின் மூலம் பிரித்துக் கொள்ள முடியுமானால், (3) மக்கள் பெருக்கத்தாலும் இயந்திரங்களின் காரணமாகவும் வேலை யில்லாமல் போகும் மக்களை யுத்த மூலமோ அல்லது கொலை செய்தோ அழித்து விட முடியுமானால், (4) மனிதர்களின் அறிவுத் தாகம், உண்மையைத் தேடுதல் முதலிய உணர்ச்சிகள் இறந்த காலத்தவையாக ஆகிவிட்டால், (5) சுயநலப் பிரபுக்களின் ஆட்சியை முடித்துவிட விரும்பும் விஞ்ஞானிகளும், சிந்தனை யாளர்களும் தோன்றாவிட்டால், (6) மனித சமுதாயத்தில் லட்சியத்திற்காக மகிழ்ச்சியோடு உயிரைப் பலியிடும் உயர் மக்கள் தோன்றுவது நிரந்தரமாக நின்று போய்விட்டால், பொது உடைமைக் கொள்கை உலகத்தில் பரவாமல் தடுத்து விடமுடியும்.

நாம் சாதகம் பாதகம் இண்டிற்குமுள்ள காரணங்களை உங்கள் முன்னால் வைத்துவிட்டோம். அதைப் பார்த்தால் பொது உடைமைக் கொள்கைக்குச் சாதகமான கரணங்களைவிடப் பாதகமான காரணங்கள் அமலில் வரமுடியாதவை என்பது தெரியும். ஆகையால் பொது உடைமைக் கொள்கை விரைவிலோ கொஞ்சம் காலம் கடந்தோ வெற்றி பெற்றே தீரும். முதலாளிக் கொள்கை அலட்சியக் கொள்கை அல்லது அது ஒரு சுயநலக் கொள்கை. ஆகையால் பொது உடைமைக் கொள்கை எப்பொழுதும் வெற்றி பெறாமலிருப்பதற்கு முயற்சிப் பார்களாயினும், தங்கள் வாழ்நாள் அளவேனும் அதைத் தள்ளி விட்டாலும் திருப்பதியடைவார்கள். உலகத்தின் சீர்கேட்டில்,

எத்தனையோ பணக்காரர்களின் பிள்ளைகள் கூலிவேலை செய்வதை அவர்கள் பார்த்திருக்கிறார்கள். ஆயினும் தங்கள் குழந்தைகளுக்காக அவர்கள் கவலைப்படப் போவதில்லை. அவர்களுக்குத் தங்கள் வாழ்நாள் சுகத்தோடு கழிந்துவிடுவதுதான் முதலாவது லட்சியம். ஆனால் பொது உடைமைக் கொள்கைக்காரன் தனக்கு முன்னால் ஒரு லட்சியம் வைத்திருக்கிறான். அந்த லட்சியத்தின் மூலம், உலகத்திலுள்ள எல்லா மக்களுக்கும் நிரந்தரமான அமைதி கிடைக்குமென்று நம்புகிறான். ஆகையால் அதிகக் காலமானாலும் அவன் தனது வேலையை விட்டுவிட முடியாது. காலம் அதிகமாவதும் குறைவாவதும் அவனுடைய முயற்சி - சோம்பலைப் பொறுத்திருக்கிறது. முயற்சியில்லாமல், சுய நலத்தைத் தியாகம் செய்யாமல் ஒற்றுமை ஏற்படாமல் பொது உடைமைக் கொள்கை தானே உலகத்தில் பரவிவிடும் என்று கருதுபவன், பொது உடைமைக் கொள்கையின் செயல் முறைக் கொள்கைக்கு முற்றிலும் விரோதி.

பொது உடைமைக் கொள்கையின் வெற்றியை விரும்புகிறவர்கள், அதன் விரோதி யார், நண்பன் யார் என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டும். மற்றவர்களைப் போலவே பொது உடைமைக் கொள்கைக்கும் இரண்டுவித விரோதிகளிருக்கிறார்கள். ஒன்று, நன்கு தெரிந்துகொண்டு தங்கள் சுயநலத்திற்காக இதை விரோதிப்பவர்கள். மற்றொன்று, மயக்கத்தாலும், அறியாமையாலும் விரோதிப்பவர்கள். முதலாவது வகுப்பில், (1) முதலாளிகள் முதன்மை வகிக்கிறார்கள்; (2) அவர்களின் விலைக்கு வாங்கப்பட்ட அடிமைகள், வேலைக்காரர்கள், மதப்புரோகிதர்களின் வரிசை இரண்டாவது வருகிறது; (3) முதலாளிகளுக்கு உதவி செய்யும் மதமும் கடவுளும் பொது உடைமைக் கொள்கை விரோதிகளின் மிகப் பயங்கரமான ஆயுதம்; (4) முதுமையால் புதிய எண்ணங்களைச் சிந்திக்கும் சக்தியை இழந்துவிட்டவர்களும் அவர்களைப் போன்று விரோதிகளே. இரண்டாவது வகுப்பில், (1) மூடநம்பிக்கையும்

அர்த்தமற்ற தத்துவத்தையும் பிரச்சாரம் செய்பவர்கள் முதன்மை வகிக்கிறார்கள். ஏனெனில், அவர்கள் சுதந்திரமாகச் சிந்திக்கும் சக்தியையே பாழாக்கிவிடுகிறார்கள்; (2) குருட்டுத்தனமான தேசீயமும் பொது உடைமைக் கொள்கையின் விரோதியே. எனெனில் அது உலகத்தின் எல்லா உழைப்பாளர்களின் ஒற்றுமையையும் தடுப்பதோடல்லாமல், அவர்கள் தங்களுக் குள்ளேயே சண்டையும் விரோதமும் பாராட்டச் செய்கிறது. ஆரம்ப காலத்தில் கொஞ்சதூரம் வரை தேசீயத்தை ஏற்றுக் கொண்டாலும், பொது உடைமைக் கொள்கை தேசீய எல்லை யைக் கடந்தது; (3) பழைய விஷயங்களை அர்த்தமில்லாமல் சொல்லிக்கொண்டிருத்தல், எதிர்காலத்தைப் பற்றிப் பொருட் படுத்தாமல் இறந்தகாலப் பெருமையில் கனவு கண்டு கொண் டிருத்தல், நாள்தோறும் முன்னேறிக் கொண்டு வரும் மனித ஜாதியின் வளர்ச்சியைப் பழங்காலத்தில் தேடுதல், பழைமை யல்லாதவற்றைத் தாழ்வாக நினைத்தல், ஒவ்வொரு விஷயத் திலும் பழம்பெருமை பேசுதல் இவைபோன்ற மனோ அடிமைத் தனம் பொது உடைமைக் கொள்கையின் பலமான விரோதி.

விரோதிகளைப் பற்றிச் சொன்னோம். இங்கு, பொது உடைமைக் கொள்கையை அமைப்பவர்களைப் பற்றியும் அவர்வின் உதவியாளர்களைப் பற்றியும் சொல்லவேண்டுவது அவசியம். பொது உடைமைக் கொள்கை என்ற சொல் இப்போது மிகவும் கவர்ச்சி உடையதாயிருக்கிறது. ஆகையால், உறுதியுள்ள உறுதியற்ற பலவிதமான மனிதர்கள் இதில் வந்து சேருகிறார்கள். பொது உடைமைக் கொள்கைப் போராட்டத்தின் சென்ற 100 வருட சரித்திரத்தைப் படித்தால், அதன் விரோதி களைவிட உறுதியற்ற சீடர்களால் தான் அதற்கு அதிகத் தீங்கு ஏற்பட்டிருக்கிறதென்பது தெரியவரும். சென்ற மகாயுத் தத்திற்குப் பின்பு இவ்வித மனிதர்களால் சில நாடுகளில் பொது உடைமைக் கொள்கையின் நிச்சயமான வெற்றி, சில தலைமுறைகளுக்குத் தள்ளிப்போய் விட்டது. ஆகையால் நாம் பொது உடைமைக் கொள்கையின் உறுதியுள்ள - உறுதியற்ற

சீடர்களைத் தெரிந்துகொள்ள வேண்டும். பொது உடைமைக் கொள்கைச் சொல்லால் இழுக்கப்பட்டு வரும் மனிதர்களில், பணக்காரர்களின் வாலிபப் பிள்ளைகளுமிருக்கிறார்கள். வாலிபத்தின் சுதந்திரமாகச் சிந்திக்கும் சக்தியால், மற்றத் தளைகள் தளர்வுற்றுப் போக இப்பக்கம் இழுக்கப்பட்டவர்கள், அவர்களின் எண்ணம் அச்சமயத்தில் உறுதியில்லாததாகவே இருக்கிறது. அவர்களுள் சிலர் 'பாஷனு'க்காக அப்பக்கம் திரும்புகிறார்கள். சிலரை, விரைவில் தலைவராக வேண்டு மென்ற ஆசை பிடித்துத் தள்ளுகிறது. இன்னும் சிலருக்கு அது புத்திக்குப் பயிற்சி கொடுக்கும் வேலையாயிருக்கிறது. தங்களுடைய பணக்கார உறவினர்களின் நினைவாலும், மேற் பார்வையாலும், அவர்கள் ஆவேசத்தோடு வேலைபார்க்க முடியாதவர்களாகயிருக்கிறார்கள். செயலில் வரும்போது, தங்களின் பொருளாதாரத்திலேற்படும் பெரிய நஷ்டம் அவர் களை முன்னேறவிடாமல் தடுக்கிறது. வாழ்க்கையில் அவர்கள் உண்மையான கஷ்டங்களை அனுபவிக்காதவர்களாகையால், சொற்களைப்பற்றிச் சண்டையிடும் தன்மையுடையவர்களாயிருக் கிறார்கள். ஏழைகளின் துன்பத்தைப் பற்றி உணராத நிலைமையில், எப்போதோ சில சமயங்களில் நினைத்துப் பார்க்கிறார்கள். அவர்களில் அனேகருக்குப் பொது உடைமைக் கொள்கை மேலேறும் படிக்கட்டாக உபயோகப்படுகிறது. தங்கள் விருப்பம் நிறைவேறியதும் அதை அலட்சியமாகத் தள்ளி விடுகிறார்கள்.

பணக்கார வாலிபர்களைப் போலில்லாவிட்டாலும் மூளை வேலை செய்யும் வாலிபர்களும் பொதுஉடைமைக் கொள்கை யின் உறுதியுள்ள நண்பர்கள் என்ற தகுதியுள்ளவர்களாயில்லை. ஏனெனில் சாதாரண வகுப்பில் அவர்கள் பிறந்திருந்தாலும், அவர்கள் முன்னேறுவதற்குப் பெரிதும் சந்தர்ப்பமிருக்கிறது. அப்படி முன்னேற்றமடைந்ததும் அவர்கள் தங்கள் பழைய வாழ்க்கையைச் சுலபமாக மறந்து விடுகிறார்கள். தங்கள் பழைய இலட்சியங்களுக்கும், தங்களோடு ஒத்துழைத்த தோழர்களுக்கும்

நன்றிகெட்ட முறையில் நம்பிக்கைத் துரோம் செய்யும் சந்தர்ப்பத்தை இழக்க அவர்களால் முடியாது. பொது உடைமைக் கொள்கையை உண்மையில் அமைத்து வளர்க்கக்கூடியவர்கள், உழைப்பாளர்களான விவசாயிகளும் தொழிலாளர்களுந்தான். ஏனெனில், அவர்களுடைய கஷ்டமான நிலைமையும், சகிக்க முடியாத ஏழ்மையும் அவர்களுக்குள்ளே அடிக்கடி வேதனையை எழுப்பிக்கொண்டேயிருக்கிறது. அவர்கள் இந்த யுத்தத்தில் பயமின்றி இறங்க முடியும். ஏனெனில் அவர்களிடம் இழந்து விடுவதற்கு ஒன்றுமில்லை. வெற்றியடைந்தால் அவர்களுக்கு நிரந்தரமான சுதந்திரம் கிடைக்கிறது. தோல்வியுற்றாலோ, எதிர்காலத்தில் யுத்தம் செய்யும் சந்தர்ப்பத்தை அவர்களிட மிருந்து யாரும் பறித்துக்கொள்ள முடியாது. எண்ணிக்கையாலும் செயல்முறையாலும் உலகத்தின் உழைப்பாளர்கள் ஒரு பெரிய சக்தி. அவர்கள் அதை உணர்ந்து கொண்டால் பின்னால் திரும்புவது என்பதை நினைக்கவும் மாட்டார்கள். பணக்கார முதலாளிகளை உழைப்பாளர்கள் தான் செய்தார்கள். அவர்கள் தங்கள் சக்தியை உபயோகித்து அதனை அழித்து விடவும் முடியும். இவ்வளவிருந்தும் உறுதியற்ற சீட்டர்களைத் தள்ளிவிட வேண்டுமென்பது கருத்தல்ல. மூளை வேலை செய்பவர்களைப் பற்றி மேலே குறிப்பிட்டவைகளை மனதில் நினைவு வைத்துக் கொண்டாலே, அவர்களால் ஏற்படக் கூடிய தீங்குகளைப் போக்குவதற்குப் போதுமானது. மூளை வேலை செய்பவர்கள் ஒரு சமயத்தில் உண்மையான உணர்ச்சியோடு வருகிறார்கள். அனேகர் கடைசிவரை உண்மை உணர்ச்சியுடனேயே இருந்தும் விடுகிறார்கள். மேலும், பொது உடைமைக் கொள்கைக்கு அவர்களின் தொண்டு விலைமதிப்பில்லாதது. ஆயினும் சில சந்தர்ப்பங்களில் செய்யப்பட்டுள்ள நம்பிக்கைத் துரோகங்களைப் பார்க்கும்போது, பொது உடைமைக் கொள்கைப் போராட்டத் தின் அடிப்படையாக மூளை வேலை செய்பவர்களை ஏற்படுத்தமாலிருப்பதுதான் நல்லதென்று தோன்றுகிறது. அது உண்மையான அடிப்படை உழைப்பாளர்களாகவே இருக்க

வேண்டும். மற்ற வகுப்பு மக்கள் வரலாம் போகலாம்; ஆயினும் வேலை செய்பவர்கள் இல்லாத நிலைமை இதனால் ஏற்படக்கூடாது. உலகில் ஏழை பணக்காரன், சுரண்டுபவன் - சுரண்டப்படுபவன் என்ற பேதம் அழிந்து போகாதவரை இந்த யுத்தம் நடந்துகொண்டே இருக்கவேண்டும். வகுப்பு பேதமற்ற மனித சமுதாயம் அமைக்கப்படும்பொழுது, இப்பொழுதுள்ள துன்பங்கள் தீர்ந்துபோய் விடுவதோடு, அனேக கவலைகளும் நிலையற்ற தன்மைகளும் இல்லாமல் போய்விடுமாகையால், மனித வாழ்க்கை மிகுந்த அமைதியும், சுகமும், மகிழ்ச்சியு முடையதாகவிருக்கும். இயற்கையின் கோபத்தால் ஆபத்துக்கள் ஏற்படும்பொழுது, அதிக விரைவாகவும், தயாராகவும், தைரியத்துடனும் அதை எதிர்க்கவும் முடியும். அக்காலத்தில் மனிதனுக்கும் மனிதனுக்குமுள்ள உறவு, அன்பும், அனு தாபமும், சமத்துவமும் நிறைந்ததாயிருக்கும்.

□

தமிழ்ப்
புத்தகாலயம்

SEELAN BOOKS
SIGNATURE